24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 24
விலை :- 30 ரூபா

சுடர் 34 கதிர் 209 ஆனி 11 ஆம் நாள் புதன்கிழமை 26 ஜூன் 2019 வள்ளுவர் ஆண்டு 2050


# மகிந்த தரப்பில் இருந்து கோத்தாவுக்கு எதிர்ப்பு!

## மகிந்தவின் நெருங்கிய சகா பொன்சேகாவுக்கு ஆதரவு

கொழும்பு, ஜூன் 26


**போ**ருக்குப் பயந்து நாட்டைவிட்டு ஓடியவரே கோத்தபாய ராஜபக்ச. அவர் அரச தலைவர் வேட்பாளர் என்ற தகுதிக்குப் பொருத்தமற்றவர். தேசிய பாதுகாப்பை முன்னிலைப்படுத்தியே அரச தலைவர் வேட்பாளர் நிறுத்தப்பட வேண்டுமெனில் அதற்கு முன்னாள் இராணுவத் தளபதியான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவே தகுதியானவர். 21

## தங்கொட்டுவையில் முஸ்லிம்கள் வியாபாரம் செய்வதற்குத் தடை!

### விளக்கமளிக்குமாறு நீதிமன்று உத்தரவு

கொழும்பு, ஜூன் 26

வென்னப்புவ - தங்கொட்டுவை வாரச் சந்தையில் முஸ்லிம்கள் வியாபாரம் செய்வதற்கு வென்னப்புவ பிரதேச சபையால் தற்காலி 21



## வென்னப்புவ பிரதேச சபையின் செயலால் சாலிய கடும் அதிர்ச்சி

கொழும்பு, ஜூன் 26

முஸ்லிம்களுக்கு வென்னப்புவ பிரதேச சபை தடை விதித்தமை அரசமைப்பை மீறும் செயற்பாடு என காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான பணியகத்தின் தலைவரான அரச தலைவர் சட்டத்தரணி சாலிய பீரிஸ் தெரிவித் 21

## ஹிஸ்புல்லா உரை விவரங்களை கோருகின்றது புலனாய்வு பிரிவு

யாழ்ப்பாணம், ஜூன் 26

கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லா நீதிபதியை மாற்றித் தீர்ப்பெழுத வைத்தேன் என்று கூறும் உரை தொடர்பான மேலதிக விவரங்களை வழங்க 21

## பாரதிபுரத்தில் தொடருந்து விபத்து: ஐந்து இராணுவத்தினர் கோரச் சாவு





யாழ்ப்பாணம், ஜூன் 26

கிளிநொச்சி, பாரதிபுரம் சந்தியில் நேற்றுப் பிற்பகல் நடந்த தொடருந்து விபத்தில் இராணுவ மருத்துவப் பிரிவைச் சேர்ந்த 5 பேர் உயிரிழந்துள்ளனர். இரு 21

## யாழ்ப்பாணத்தில் 2 நாள்கள் தமிழரசுக் கட்சியின் மாநாடு

### சம்பந்தனும் பங்கேற்பு

யாழ்ப்பாணம், ஜூன் 26

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 16ஆவது தேசிய மாநாடு எதிர்வரும் 29ஆம் திகதி சனிக்கிழமையும், மறுநாள் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. 21

## கை, மொட்டு கூட்டணியின் 6 ஆம் சுற்றுப் பேச்சு இன்று

கொழும்பு, ஜூன் 26

சிறி லங்கா சுதந்திரக் கட்சிக்கும் சிறி லங்கா பொதுமக்கள் முன்னணிக்கும் இடையிலான 6ஆம் சுற்றுப் பேச்சு இன்று புதன்கிழமை முற்பகல் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

புதிய அரசியல் கூட்டணி அமைப்பது தொடர்பில் இரு கட்சிகளுக்கும் இடையிலான 6ஆம் சுற்று கலந்துரையாடல் கடந்த 17 ஆம் திகதியே நடைபெற இருந் 21

## தெரிவுக்குழு முன் இன்று ரிசாத், மகேஷ் சாட்சியம்

கொழும்பு, ஜூன் 26

உயிர்த்த ஞாயிறு தினமன்று இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் விசாரணை செய்யும் நாடாளுமன்றத் தெரிவுக் குழு இன்று புதன்கிழமை மீண்டும் கூடுகின்றது.

முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற 21

## ஆடை தொடர்பான சுற்றறிக்கைக்கு அனுமதி

கொழும்பு, ஜூன் 26

அரச ஊழியர்களின் அலுவலக ஆடை தொடர்பான புதிய சுற்றறிக்கையை வெளியிட அமைச்சரவை ஒப்புதல் கிடைத்துள்ளது.

நேற்றுக் காலை அரச தலைவர் செயலகத்தில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் பொது நிர்வாக மற்றும் உள் 21

## மைத்திரியும் தெரிவுக்குழு முன்னிலையில் சாட்சியம்!

கொழும்பு, ஜூன் 26

பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன்னிலையில் சாட்சியம் வழங்க அழைக்கப்படவுள்ளார்.

இவ்வாறு உயிர்த்த ஞாயிறு தினமன்று இடம்பெற்ற தாக்குதல்கள் தொடர்பில் ஆராயும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் உறுப்பினரும் ஐக்கிய தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தலைமை அமைச்சர், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் மற்றும் சட்டம், ஒழுங்குகள் முன்னாள் அமைச் 21

## தமிழர்களின் பொறுமையை இனியும் சோதிக்க வேண்டாம்

### அமைச்சரவையில் மனோ ஆவேசம்

கொழும்பு, ஜூன் 26

கல்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரச்சினை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாத காரணத்தால், இந்த அரசைத் தொடர்ந்து நல்லெண்ண நோக்கில் பாதுகாத்து வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களை இந்த அரசு ஏமாற்றி அந்தரத்தில் போட்டுள்ளது. தமிழ் மக்களின் ஏனைய பிரச்சினைகளையும் இந்த அரசு பின்வரிசையில் போட்டு விட்டது. அதையிட்டு நான் வெட்கமடைகின் 21






தை மாதம் 10ஆம் திகதி ஜனவரி 24, 2020ஆம் ஆண்டு சனி பகவான் தனுசு ராசியில் இருந்து மகரம் ராசிக்கு நகர்கிறார். இந்த சனிப்பெயர்ச்சியால் தனுசு மகரம் கும்பம் ராசிக்காரர்களுக்கு ஏழரை சனி காலமாகும். விருச்சிக ராசிக்காரர்கள் ஏழரை சனியில் இருந்து விடுபடுகிறீர்கள்.





# சனிப்பெயர்ச்சி பலன்கள் 2020 - 2023

## கன்னி



கன்னி ராசிக்காரர்களுக்கு நான்காம் இடத்தில் இருந்து ஐந்தாம் வீட்டுக்கு சனிபகவான் நகர்கிறார். அர்த்தாஷ்டம சனி முடிந்து புண்ணிய சனி ஆரம்பிக்கிறது.
சனி பகவான் உங்கள் ராசிக்கு 5 மற்றும் 6ஆம் அதிபதி. அவர் பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் ஆட்சி பெற்று அமர்கிறார். இனி அலைச்சல்கள் இருக்காது. இதுநாள் வரை இருந்த மருத்துவ செலவுகள் முடிவுக்கு வரும். பிள்ளைகள் மீதான கவலைகள் அதிகரிக்கும்.
சனிபகவானின் பார்வை மகரம் ராசியில் இருந்து உங்கள் ராசிக்கு குடும்ப ஸ்தானம், களத்திர ஸ்தானம், இலாப ஸ்தானத்தின் மீது விழுகிறது. பணவரவு அதிகரிக்கும், குடும்பத்தில் உற்சாகம் அதிகரிக்கும், குதூகலம் கூடும். செய்யும் தொழிலில் இலாபம் கூடும். கனவு நனவாகும் காலம் கனிந்து வருகிறது.

**தடைகள் நீங்கும்**
கன்னி ராசிக்காரர்களே... இந்த சனிப்பெயர்ச்சியால் உங்களுக்கு அதிக நன்மைகள் நடக்கப்போகிறது. தடைபட்டு வந்த சுபகாரியங்கள் இனிதே நடக்கும், திருமணம் கைகூடி வரும், காதல் மணியடிக்கும். காதலர்களுக்கு கல்யாணம் கை கூடி வரும். வீட்டில் எப்போது உற்சாகமாக இருப்பீர்கள். உங்களின் அறிவும் ஆற்றலும் அதிகரிக்கும்.

**வெற்றி மீது வெற்றி வரும்**
அர்த்தாஷ்டம சனியால் நோய்களால் பாதிக்கப்பட்டு இருப்பீர்கள். இன்னும் சில மாதங்கள்தான் நோய்கள் நீங்கி உடல் ஆரோக்கியம் அதிகரிக்கும். வெற்றி மீது வெற்றி வந்து உங்களைச் சேரும். அம்மாவின் உடல் ஆரோக்கியமும் அதிகரிக்கும்.

**புத்திரர்களால் பிரச்சினை**
குழந்தைகளின் உடல் ஆரோக்கியத்தில் அக்கறை செலுத்துங்கள். சிலருக்கு குழந்தைகளால் பிரச்சினை ஏற்படும். குழந்தை பாக்யம் இல்லாதவர்களுக்கு நீண்ட போராட்டத்திற்கு பிறகே குழந்தை பாக்கியம் அமையும். நம்பிக்கையுடன் முயற்சிக்க எதிர்பார்த்த வெற்றி கிடைக்கும். எதையும் தீர ஆராய்ந்து முழு மூச்சுடன் செயல்பட வெற்றி கிட்டும். எந்த ஒரு விடயத்தையும் தள்ளிபோடவோ ஒத்தி போடவோ கூடாது. காரியத்திலே கண்ணாய் இருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் போட்டியான உலகத்தில் ஜெயிக்க முடியும்.

**வீடு நிலம் வாங்குவீர்கள்**
வண்டி வாகனங்கள் வீடு, நிலம், வாங்க வாய்ப்புகள் அமையும். தந்தை மற்றும் தாய் வழி சொத்துக்கள் எதிர் பாராமல் வர வாய்ப்புள்ளது. அதிர்ஷடத்தை நம்பாமல் உழைப்பை மட்டும் தாராக மந்திரமாக எண்ணி செயல்களில் வெற்றி பெற முடியும். பெரிய மனிதர்கள் சகவாசம்.
அதிகாரிகளின் சலுகை இவையெல்லாம் கிட்டும். உங்கள் பணம் பொருள் கண் முன்னே களவு போனது போல் காணாமல் போகும் அல்லது பறிபோகவோ திருடு போகவோ வாய்ப்பிருக்கிறது எனவே பத்திரப்படுத்துங்கள்.

**அலுவலகத்தில் எச்சரிக்கை**
வேலை தேடுபவர்களுக்கு வேலை கிடைப்பது சற்று காலதாமதமாகும். விரும்பிய வேலை கிடைப்பதில் நிறையத் தடைகள் ஏற்படும். போட்டித் தேர்வுகளில் வெற்றி பெற கடுமையாக போராட வேண்டி இருக்கும். அதிக உழைப்பு குறைந்த வருவாய் என்ற சூழ்நிலையிலே உங்களை இயங்க வைப்பார். உயரதிகாரிகள் விஷயத்தில் அதிக எச்சரிக்கை தேவை. வேலையாட்களால் தேவையற்ற பிரச்சனைகளும் மன வருத்தங்களும் ஏற்படும். சக ஊழியர்களின் எதிர்பாராத உதவியும் அவர்களின் ஒத்துழைப்பும் நமக்கு சாதகமாக இருந்து வரும். ஊதிய உயர்வும் எதிர்பார்த்த அளவு இருக்காது.

எனவே கிடைத்த வேலையில் முதலில் சேர்ந்த பின் உங்களை ஸ்த்திரபடுத்திக் கொள்ளுங்கள்

**மகிழ்ச்சியும் உற்சாகம்**
பெண்களுக்கு தடைகள் நீங்கி திருமணம் நடைபெறும், குழந்தைபேறு கிடைக்கும். அடிக்கடி சுப நிகழ்ச்சிகளில் பங்கேற்பீர்கள். பெண்களுக்கு நகைகள் சேரும், ஆடை ஆபரணக்சேர்க்கை கிடைக்கும். வீட்டில் கணவன் மனைவி உறவு உற்சாகமாக இருக்கும். குடும்பத்தில் குதூகலமாக இருப்பீர்கள்.
உடல் ஆரோக்கியத்தில் அதிகக் கவனம் தேவை. சுறுசுறுப்பாக இருந்தாலும் அடிக்கடி உடல் அசதி, சோர்வு அலைச்சல்களால் ஏற்படும்.

**பணம் பொருள் கிடைக்கும்**
சனிபகவான் இரண்டாம் வீடு, ஏழாம் வீடு, 11ஆம் வீட்டை பார்ப்பதால் உங்களுக்கு எதிர்பாராத இடத்தில் இருந்து பணவரவு கிடைக்கும். சுபகாரியங்கள் வீட்டில் அதிகம் நடைபெறும். மூத்த சகோதர சகோதரிகளின் உதவி கிடைக்கும். உங்களின் பயணங்களினால் நன்மைகள் நடைபெறும். மனதில் உற்சாகம் அதிகரிக்கும். அடிக்கடி விரதம் என்ற பெயரில் பட்டினி கிடக்க வேண்டாம் வயிறு வலி பிரச்சினைகள் ஏற்படும். மொத்தத்தில் இந்த சனிப்பெயர்ச்சி காலத்தில் புண்ணிய ஸ்தலங்களுக்கு சென்று ஆலய தரிசனம் செய்யும் காலமாக அமையும். நீராடி சனிபகவானை தரிசனம் செய்து வர அதிக நன்மைகள் கிடைக்கும்.

# வீட்டில் இந்த பொருள்களை வைத்திருந்தால் பணப்பிரச்சினை தீர்ந்துவிடுமாம்..!

பணமில்லாமல் இந்த உலகில் எந்தவொரு அணுவும் அசையாது என்பதே தற்போதைய நிதர்சனம்.

அப்படிப்பட்ட பணம் திடீரென சிலர் கைவிட்டு போய் விடும். அப்படி போகாமல் பணம் வீட்டில் தங்கவும், அதிகளவில் சேரவும் சில பொருள்களை வீட்டில் வைத்து கொள்ள வேண்டும்.

**நடனமாடும் விநாயகர் சிலை**
விநாயக கடவுள் நடனமாடும் தோரணையில் உள்ள சிலைகளை வீட்டின் கதவை பார்க்கும் பகுதியில் வைத்தால் பணவரவு அதிகரிக்கும்.

**புல்லாங்குழல்**
லட்சுமி கடவுளுக்கு உகந்த இந்த லட்சுமிகடாச்ச பொருள் வீட்டில் இருந்தால் வாஸ்து தோஷங்கள் கழிவதோடு பணவரவும் கூடும்.

**தேங்காய்கள்**
கடவுளுக்கும், பூஜைகளுக்கும் மிகவும் உகந்ததாக கருதப்படும் தேங்காய்களை அலுவலகத்திலோ அல்லது வீட்டிலோ வைத்தால் பணப் பிரச்சனை தீரும்.

**குபேரன் சிலை**
பணத்துக்கான அதிபதியாக இந்த குபேரனை தான் வரலாறுகள் கூறுகிறது. இந்த குபேர சிலை வடக்கு பக்கம் பார்க்கும் படி வைத்தால் சகல வித சொளபாக்கியங்களும் கிட்டும்.

**சங்கு**
சங்கிலிருந்து வெளிவரும் சத்தமானது தீயசக்தியை அழிக்கிறது. லட்சிமி கடவுள் சங்கில் நிறைந்திருப்பதால் இதை பூஜை அறையில் வைத்தால் வீடு செழிக்கும்.



# நம்பிக்கைதான் அதிர்ஷ்டமாகும்



அவன் மிகவும் ஏழை. தனது குறைந்த வருமானத்தில் வாழ்க்கை நடத்தி வந்தான். ஒரு நாள் தெருவில் அவன் நடந்து செல்கையில் பழைய கால நாணயக் குற்றி ஒன்று கண்ணில் பட்டது. அந்த நாணயக் குற்றியின் நடுவில் ஒரு வளை இருக்கக் கண்டான். "துளையிட்ட காசு கிடைப்பது அதிஷ்டம்"என்ற ஒரு நம்பிக்கை அந்தக்காலத்தில் இருந்து வந்தது. இதன்படி"இனி அதிஷ்டம் என்னைத் தேடி வரும். நான் பணக்காரனாகி விடுவேன்" என்று நினைத்துக் கொண்டான். அந்த நாணயத்தைத் தன் பையில் போட்டு பத்திரப்படுத்திக் கொண்டான். அன்று அவனுக்கு மற்ற நாள்களை விட அதிக வருமானம் கிடைத்தது. எல்லாம் அந்தக் காசு கிடைத்த நேரம் என அவன் நினைத்தான். அன்றிலிருந்து அவன் தினமும் தன் பையில் இருக்கும் காசை அடிக்கடி தொட்டுப் பார்த்துக் கொள்வான். அதனை வெளியே மட்டும் எடுக்க மாட்டான்.

சில ஆண்டுகள் கழிய பணம் பதவி அனைத்தும் அவரிடம் வந்து சேர்ந்தன. "எல்லாம் நாணயம் கொடுத்த அதிஷ்டம் தான்"என்று எண்ணினான். அந்தக் காசை ஒருமுறை பார்த்துவிட ஆசைப்பட்டு சட்டைப் பையிலே கையை விட்டு காசை எடுக்க முனைந்தபோது அவனுக்கு அதிர்ச்சியே காத்திருந்தது. அவன் எடுத்த காசில் துளையே இருக்கவில்லை. என்ன ஆயிற்று என்ற மனக் குழப்பத்தோடு தன் மனைவியைப் பார்த்தான். அவள் "என்னை மன்னியுங்கள்! ஆடை தூசியாக இருக்கிறதே என்று நான் அதனை வெளியே உதறினேன். காசு எங்கேயோ விழுந்து விட்டது. எவ்வளவோ தேடியும் அது கிடைக்கவேயில்லை. நான்தான் அதற்குப் பதிலாக வேறு காசைப்போட்டு வைத்தேன்" என்றாள். "இது எப்போது நடந்தது?"என்று அவன் கேட்டான். உங்களுக்கு அந்தக் காசு கிடைத்த ஒரு வாரத்துக்குள்ளேயே அது தொலைந்து போய் விட்டது"என்றாள்.

சற்றுத் தயங்கியபடி இதனைக் கேட்டு அவன் ஆத்திரமடையவில்லை. அமைதியாகச் சிந்தித்தான் "எனக்கு உண்மையில் அதிர்ஷ்டத்தைக் கொடுத்தது நாணயம் இல்லை. அதுதான் எப்போதோ தொலைந்து விட்டதே!ஆக அந்த நாணயக் குற்றி எனது பையில் இருக்கிறது என்ற நம்பிக்கைதான் எனக்கு அதிர்ஷ்டத்தைத் தந்தது"என நினைத்து மகிழ்ந்தான். உடனே முன்பையும் விட நம்பிக்கையுடனும் உற்சாகத்துடனும் தனது பணிகளைத் தொடர்ந்தான்.


## மீன்பிடி ஏலம் விற்பனை

இடம் : அக்கராயன்குளம் கமநலசேவை நிலையம் மாநாட்டு மண்டபம்
காலம் : 28.06.2019
நேரம் : முற்பகல் 10.00 மணி
ஆரம்ப கேள்வி தொகை 62.500 ரூபா

ஏலம் விடப்படும் குளங்கள்:- குஞ்சுக்குளம், உப்புவில் குளம், ஆனைவிழுந்தான் குளம், மணியங்குளம், பாலன்குளம்.

**குறிப்பு** :- ஏலம் எடுப்பவர்கள் அன்றைய தினம் பணத்தை செலுத்தி பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்ள வேண்டும்.

கமநல சேவைகள் குழு,
கமநல சேவை நிலையம்,
அக்கராயன்குளம்.

## வேலையாள்கள் தேவை

கடையில் வேலை செய்யக்கூடிய அனுபவமுள்ள வேலையாள்கள் தேவை.
(ஆண், பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது
**தொடர்பு : 077 159 5826**

## வீடு வாடகைக்குண்டு

வெள்ளவத்தையில் ஸ்வர்ணா றோட் (மயூராபதி அம்மன் கோயில் முன்பாக) இரண்டு படுக்கையறைகள், இரண்டு பாத்றூம், ஹோல், கிச்சன் கொண்ட கீழ் வீடு உடனடியாக வாடகைக்குண்டு.
**076 854 3575**
(C438)


# காக்கைக் குடும்பம்



பட்டணத்தில் வசிப்பவராயினும் பட்டிக் காட்டில் வசிப்பவராயினும் தந்திரம் நிறைந்த நாட்டுக் காக்கையை அறியாதவர்கள் இல்லை. இது வீட்டுக் காக்கை என்று ஆங்கிலத்திலும் அழகிய காகம் என்று இலத்தின்மொழி விலங்கியல் பிரகாரமும் அழைக்கப்படுகிறது. அரிசிக் காக்கை என்றும் அண்டங்காக்கை என்றும் அழைக்கப் படுவதுண்டு. சாம்பல் நிறக் கழுத்தும் சற்று சிறிய உருவத்து டனும் இருப்பது அரிசிக்காகம். எவருக்கும் மிகப் பழக்க மான பறவை. மனிதனை முழுவதும் அண்டி வாழும் பறவை.

இது புத்திக் கூர்மையும் தைரியமும் அபாயத்தை அறிந்து அதனைத் தவிர்க்கும் வழிகளும் தெரிந்து வெகு தந்திரமாக நடக்கும். உணவைப் பொறுத்த மட்டில் எதையுமே அது வெறுத்து ஒதுக்குவதில்லை. செத்து க்கிடக்கும் எலியோ சமயலறையிலிருந்து அள்ளி எறியும் சிந்திய உணவுப் பொருளோ மீன்காரியிடம் திருடிய மீனோ அல்லது குழந்தையின் கையிலிருந்து தட்டிப் பறிக்கப்பட்ட இனிப்புப் பண்டமோ எல்லாமே காகம் விரும்பும் உணவுகள்தான். ஆயினும் இதனது இந்தத் திருட்டுத் தன்மையை அது அழுக்குகளைத் தின்று சூழலைச் சுத்தப்படுத்தும் தன்மையால் மக்கள் மன்னித்து விடுகின்றனர். காகத்தின் கூடு அழகற்ற ஒரு குச்சி மேடை எனலாம். நிலத்தில் இருந்து சுமார் மூன்று முதல் எட்டு மீற்றர் உயரம் வரையான மரக்கிளைகளில் அந்தக் கூடு இருக்கும். கூட்டின் மத்தியில் கிண்ணம் போன்ற பாகம் தும்பு, கயிறு, சணல் துண்டுகள் என்பவற்றால் வனையப்பட்டிருக்கும். இதனுள் 3முதல் 5வரையான முட்டை களைக் காகம் இடும்.

காகத்தின் கூட்டில் குயில்கள் முட்டையிடு வதுண்டு. அண்டங்காக்கை அரிசிக் காகத்தை விடப் பெரியது. ஒரு வித ஒளிரும் நிறம்கொண்டது. கனத்த அலகையுடையது. பலமான கரகரப்பான 'கா'என்ற சத்தத்தை எழுப்பும். பெரும்பாலும் காடு, சோலைகள் என்று நகருக்கு வெளியே வாழும். இது மனிதரால் கொட்டப்படும் குப்பை கூழங்களில் உள்ள அழுகிய பொருள்களை உண்ணும் தன்மை கொண்டது.




## மரண அறிவித்தல்கள்



### திருமதி அந்தோனிப்பிள்ளை மேரி மெக்ரலீன் (மலர்)

சாவகச்சேரி கச்சாய் வீதியைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அந்தோனிப்பிள்ளை மேரி மெக்ரலீன் கடந்த (21.06.2019) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கபிரியேற்பிள்ளை - திரேசம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான யோசேப்பு- திரேசம்மா தம்பதிகளின்மருமகளும்யோசேப்அந்தோனிப்பிள்ளையின்அன்புமனைவியும் தவம், வேவி (இந்தியா), யேசுதாசன், சறோசா, றதி (நோர்வே), துரை (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் நவரத்தினம், கீதபொன்கலன், அல்போன்ஸ் (டென்மார்க்) ஆகியோரின் மைத்துனியும் ஜோண் கொலின் (அதிபர், யா/ மண்டைதீவுறோ.க.வித்தியாலயம்).ஜோண்றொபின்(கனடா).ஜோண்றோகன் (லண்டன்) , மேரி டயானா (லண்டன்), மேரி றொபினா (பிரான்ஸ்), மேரி ஜெறோனா (லண்டன்) ஆகியோரின் நேசமிகு தாயாரும் ஷெறின், லைற்றா, றோகினி, யூஜின், அனுராஜ் , கலைக்குமார் ஆகியோரின் அன்பு மாமியாரும் வின்ஸ்ரன், லெனிற்றா, ஜெனிங்ஸ்ரன், றொபேக்கா, றொனால்டோ, றொட்வின், புகழ்மதி, புகழனா, கரன்ஷா, நிவைன், அஸ்லீனா, அஸ்நெற், அத்றிஜ், லபிலன், ரியாரா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (27.06.2019) வியாழக்கிழமை பி.ப 3.00 மணிக்கு சாவகச்சேரி புனித லிகோரியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித லிகோரியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 104 3577, 076 459 0373**



### பொன்னுத்துரை கலைநாதன்

நயினாதீவு 7 ஆம்வட்டாரத்தைபிறப்பிடமாகவும்33, பெரியதம்பனைமற்றும் 28. கரப்பன்காடு, வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட உயர்திரு பொன்னுத்துரை கலைநாதன் கடந்த (24.06.2019) திங்கட்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் மனோன்மணி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை மற்றும் சிவயோகம் தம்பதியினரின் அன்பு மருமகனும் வேதாரோகினியின் பாசமிகு கணவரும்கோகுலன்(பொதுமுகாமையாளர், சண்முகம்ஸ்ரோர்ஸ், வவுனியா), அகல்யா (பிரான்ஸ்), ராகுலன் (வைத்தியர் - கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பத்மினி, கதிர்காமநாதன் (பிரான்ஸ்), சாம்பவி ( அபிவிருத்தி உத்தியோகத்தர், யாழ் போதனா வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அன்னலட்சுமி செல்வரெத்தினம் (கனடா), பாக்கியலட்சுமி சுந்தரலிங்கம்(கனடா), சச்சிதானந்தன்(மணியம்), நடராசா(குஞ்சுக்கிளி, சுவிஸ்) ஆகியோரின் அன்புச்சகோதரனும் ஹரிணி, அபர்நாத், ஹம்ரிஷ், ஹரிஜித், விசாகி, சங்கீத்மன், சபீஸ்மன், வாமணன், லயஸ்ருதி, சம்ஸ்கிரிதி, ராஜாதித்ததேவ் ஆகியோரின் அன்புப்பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.06.2019) வியாழக்கிழமை காலை 7.00 மணியளவில் கரப்பன்காடு வவுனியா இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தச்சநாதன் குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

## வேலைவாய்ப்பு

யாழில் உள்ள பிரபல தொலைத்தொடர்பாடல் Hutch நிறுவனத் துக்கு பின்வரும் வெற்றிடம் காணப்படுகிறது.

1. வாடிக்கையாளர் சேவை உத்தியோகத்தர் (ஆண்/பெண்)
2. விற்பனைப் பிரதிநிதி SIM (ஆண்/பெண்)
3. விநியோகஸ்தர் விற்பனைப் பிரதிநிதி (ஆண்)

மேற்படி பதவிகளுக்கு முன் அனுபவம், மொழித்திறமை கருத்தில் கொள்ளப்படும். சிறந்த சம்பளம் வழங்கப்படும். தகுதியானோர் தொடர்பு கொள்ளவும். **078 5000 580, 078 5099 746**

## கண்ணீர் அஞ்சலி

சங்க உறுப்பினரும்; கைதடி பிரதேச சமுர்த்தி முகாமையாளருமான

**சோ.சுஜீவகுமார்**

அவர்களின் பாசமிகு தந்தையார்

**சிவஸ்ரீ சு.சோமசுந்தரக்குருக்கள்**

அவர்கள் 21.06.2019 இறைபதமடைந்தார். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**தென்மராட்சி பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கம், சாவகச்சேரி.** (C 10531)(14.17)

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com,
021 493 1111

## மரண அறிவித்தல்கள்

### ஆறுமுகம் தர்மலிங்கம்

**(இளைப்பாறிய முன்னாள் கிராமிய வங்கி முகாமையாளர்-கோப்பாய்)**



கோப்பாய் வடக்கைப்பிறப்பிடமாகவும் நீர்வேலி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் தர்மலிங்கம் நேற்று (25.06.2019) செவ்வாய்க்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் மீனாட்சி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இளைய தம்பி - இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற உமா தேவி, மற்றும் பரமேஸ்வரி, ஆகியோரின் அன்புச் சகோதரரும் சகுந்தலாவின் பாசமிகு கணவரும் சசிரேகா (ஆசிரியை, யா/ கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்) நீதிமப்பிரியா, (பொறியியலாளர், சிங்கப்பூர்), திவாகரன் (உதவிப்பதிவாளர், தொழில்நுட்ப பீடம் கிளிநொச்சி வளாகம், யாழ் பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத்தந்தையும் சுயதீப் (அதிபர், யா/கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தியாலயம்), தயாபவன் (பொறியியலாளர், சிங்கப்பூர்) ஆகியோரின் அன்பு மாமனாரும் துவாரகன், கிருஷாயினி, ஜனுசியா, தான்யா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.06.2019) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. 2.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இராஜவீதி, நீர்வேலி மேற்கு, நீர்வேலி.**

**தகவல்: குடும்பத்தினர்.**

### சின்னத்தம்பி குமாரசூரியர்



மண்ணில் 10.10.1932 விண்ணில் 21.06.2019

யாழ்ப்பாணம் மாட்டீன் வீதியைப் பிறப்பிடமாகவும் கனடா ஸ்காபரோவில் வசித்துவந்தவருமான சின்னத்தம்பி குமாரசூரியர் கடந்த (21.06.2019) வெள்ளிக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - வள்ளியம்மையின் அருமை புதல்வரும் காலஞ்சென்ற மேரி அற்புதராணியின் ஆசைக்கணவரும் காலஞ்சென்ற மிக்கேல் சீனிவாசகம் - அன்னபூரணம் ஆகியோரின் அன்பு மருமகனும் மீனலோயினி (மீனா, யாழ் பல்கலைக்கழகம்), லோகேந்திரன் (லோகன்), நவீந்திரன் (நவீன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், யோர்ச் இன்பகுமார், துஸ்யந்தி, பிரதீபா ஆகியோரின் அன்பு மாமனாரும் கயிந்தன், கவினாஸ் ஆகியோரின் ஆசைமிகு பேரனும் காலஞ்சென்ற அன்னலச்சுமி (மணி) ஆரோகணம் மற்றும் கனகரத்தினம், சரஸ்வதி இராசையா, பூமணி தியாகராசா, இராஜகோபால், மகாலிங்கம், ஆகியோரின் அருமைச்சகோதரனும் செல்வராணி சுந்தரேஸ்வரன், பத்மராணி பத்மநாதன், இந்துராணி வேலுப்பிள்ளை, யேசுதாசன் வேலுப்பிள்ளை, ஜெகதீஸ் பொன்னையா, பத்மாவதி கனகரத்தினம், புவனேஸ்வரி, இராஜகோபால், பொன்னம்மா மகாலிங்கம் ஆகியோரின்பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27.06.2019 கனடவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
05 . 02 . 1932



மறைவு
26 . 05 . 2019

கடந்த 26.05.2019 இல் இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி

**அமரர் நடராசலிங்கம் இரத்தினம்மா**

அவர்களின் மறைவுச்செய்தி அறிந்து உதவிகள் பலபுரிந்தவர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட அன்புள்ளங்களுக்கும், தொலைபேசி மூலம் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அத்துடன் 26.06.2019 புதன்கிழமை மு.ப 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**கார்த்திகேசு வீதி,**
**மீசாலை மேற்கு, மீசாலை.**

**குடும்பத்தினர்.**

## கண்ணீர் அஞ்சலி



யாழ். பல்கலைக் கழக தொழில்நுட்ப பீடத்தின் உதவிப்பதிவாளர்

**த. திவாகரன்** அவர்களின் தந்தையார்

## ஆறுமுகம் தர்மலிங்கம்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொழில்நுட்ப பீடம்**

## பெயர் மாற்றம்

பெருமாக்கடவை அளவெட்டியைச் சேர்ந்த நான் **ராணி** என்கிற எனது பெயரை இன்றிலிருந்து (26.06.2019) **இந்திராணி அம்மா** என பெயர்மாற்றிக் கொள்வதோடு இனிவரும் எவ்வகை ஆவணத்திலும் இவ்வாறே ஒப்பமிடுவேன் என தெரியத்தருகின்றேன்.

**இந்திராணி அம்மா**

## பெயர் மாற்றம்

மாகியம்பிட்டி வீதி, கண்ணகி அம்மன் கோயிலடியைச் சேர்ந்த **பாலராசா** ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து (26.06.2019) **செ.பால்ராஜ்** என பெயர்மாற்றம் செய்வதோடு இனிவரும் எவ் ஆவணத்திலும் இவ்வாறே ஒப்பமிடுவேன் என அறியத்தருகின்றேன்.

(cs.226269) (13.17)

**செ. பால்ராஜ்**

## மரண அறிவித்தல்

### கபிரியேல் விக்ரர்சுரேஸ் (விக்ரர்)



தோற்றம் 13.07.1955 — மறைவு 24.06.2019

உயரப்புலம் ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கபிரியேல் விக்ரர்சுரேஸ் (விக்ரர்) 24.06.2019 திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கபிரியேல் - மரியம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செபமாலை திரேசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் மேரி மெற்றலினின் (பட்டு) பாசமிகு கணவரும், கனில்டா, ஜெனிஸ்ஷா, சாம்சன் கபில், சுனிஸ்ரா, அனிஸ்ரா ஆகியோரின் பாசமிகு தந்தையும், நோபேட் வில்சன், றொஷாந்தன் ஆகியோரின் மாமனாரும், வினுஷ்ரிக்கா, ஜெறோஷினி ஆகியோரின் பேரனும், மேரி சந்திரா, காலஞ்சென்றவர்களான மேரி சுபத்திரா, பேரின்பநாயகம் மற்றும் உதயகுமார், காலஞ்சென்ற ஆனந்தன் மற்றும் பிரேமலதா ஆகியோரின் பாசமிகு சகோதரரும் காலஞ்சென்ற மேரிபிறிம்றோஸ் மற்றும் மேரி றோசலின், மேரி தேவராணி, உதயகுமார், ஜஸ்மின் யூடிற்றா ஆகியோரின் மைத்துனருமாவார்.


அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (26.06.2019) புதன்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் ஆனைக்கோட்டை, அடைக்கலநாயகி ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**உயரப்புலம், ஆனைக்கோட்டை.** (CS/26267)(11.17) **தகவல்: குடும்பத்தினர்.**

**077 246 3021**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
03 . 05 . 1950



மறைவு
27 . 05 . 2019

**அமரர் நாகரத்தினம் திருச்செல்வம்**

கடந்த 27.05.2019 அன்று இறைபதம்டைந்த எமது குடும்பத் தலைவரின் மறைவு செய்தி கேட்டு உடன் வந்து ஆறுதல் கூறியும், பல வழிகளில் உதவிகள் புரிந்தும் வெளிநாடுகளில் இருந்தும் உள்நாட்டிலிருந்தும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், மலர் வளையம் வைத்தோருக்கும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோருக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (26.06.2019) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**இல.36, 2வது ஒழுங்கை,**
**பலாலி வீதி, யாழ்ப்பாணம்.**
**021 221 7852, 0775936343**

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### சத்தியசீலன் லதர்சன்

**BBA(FM Spl) University of Jaffna**

**(கணக்கு பதிவாளர் யாழ் பல்கலைக்கழகம்)**



மண் மகிழ 10.12.1989 — விண் நெகிழ 24.06.2019

ஏழாலை மேற்கு, ஏழாலையை பிறப்பிடமாகவும், கொக்குவில் சம்பியன் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட சத்தியசீலன் லதர்சன் 24.06.2019 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சத்தியசீலன் - இன்பநாயகி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தளையசிங்கம் லட்சுமி தம்பதிகள் மற்றும் கந்தையா சரஸ்வதி தம்பதிகளின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(26.06.2019) புதன்கிழமை கொக்குவிலில் உள்ள அவரது இல்லத்தில் காலை 8.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை மேற்கு உசத்தியோடை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சம்பியன் ஒழுங்கை,**
**கொக்குவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 271 8416**

## மரண அறிவித்தல்

தோற்றம்
01 . 08 . 1947



மறைவு
23 . 06 . 2019

## இராமு பரமநாதன்

மானிப்பாயை பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட இராமு பரமநாதன் கடந்த (23.06.2019) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ராமு - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் றெஜினாவின் அன்புக்கணவரும் தேவப்பிரியா, நிரோஷா ஆகியோரின் அன்புத் தந்தையும் கஜேந்திரன், கிறிஸ்தோப்பர் ஆகியோரின் அன்பு மாமனும் கனகசுந்தரம், சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச்சகோதரனும் இராஜலட்சுமி, வாமதேவன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**காளி கோவிலடி,**
**கொக்குவில் கிழக்கு, கொக்குவில்**

**தகவல்:**
**சகோதரர், சகோதரி**

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும்

**செல்வி மு. உஷாநந்தினி**

அவர்களின் அன்புத்தந்தையாகிய

**நாகன் முருகையா**

அவர்களின் மறைவிற்கு எமது விழி நீர் அஞ்சலியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

தோற்றம் 19.06.1946 மறைவு 25.06.2019

**நலன்புரிச்சங்கம் பிரதேச செயலகம், தெல்லிப்பளை**

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை திருமதி **சோபிகா சுதர்சன்** அவர்களின் அன்புத் தந்தையார்

**இராமக்கிருஸ்ணன் பாலசந்திரன்**

அவர்கள் 17.06.2019 திங்கட்கிழமை இறைபதம் அடைந்ததையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு தெரிவிப்பதுடன்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்**
**யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி**

## அமுத சுரபியின் ஆற்றொணாத் துயர் பகிர்வு



எமது சபையின் ஆர்வமிகு தர்மகர்த்தா சபை உறுப்பினரும், சிறந்த சமய சமூக சேவையாளருமாகிய

**பொன்னுத்துரை கலைநாதன்**
**(பெரியதம்பனை)**

அவர்களின் மறைவு குறித்து எமது சபையின் ஆற்றொணாத் துயரத்தை அனைவருடனும் பகிர்ந்து கொள்வதுடன் அவரது ஆத்ம சாந்திக்காக அன்னை ஸ்ரீ நாகபூசணியின் பாதக் கமலங்களைப் பணிகின்றோம்.

"ஜென்மம் நிறைந்தது சென்றவர் வாழ்க
சிந்தை கலங்கிட வந்தவர் வாழ்க
நீரில் மிதந்திடும் கண்களும் காய்க
நிம்மதி நிம்மதி இவ்விடம் சூழ்க

ஈர விழிகளுடன்
ஸ்ரீ நாகபூசணி அமுத சுரபி
அன்னதானசபை, நயினாதீவு - 2.

**021 321 3575**

## மரண அறிவித்தல்

### பாஸ்கரம் செல்வநாயகம்
**(தேவராசா பத்தர்)**



ஏறாவூர் 4ம் குறிச்சியை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியை வதிவிடமாகவும் கொண்ட பாஸ்கரம் செல்வநாயகம் (தேவராசா பத்தர்) 23.06.2019 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் வசந்தத்தின் (நாச்சிமார் கோவிலடி) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பாஸ்கரம்-சுந்தரம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராஜரட்ணம் -அரசம்மா தம்பதியரின் மருமக னும், சர்மிலன் (J/St.Johns' College (Bio Stream 2011 Batch)& Auditor). விநோபா (Old girl of J/Hindu Ladies College). நிதுஷா (Old girl of J/Chundikuli Girls' College) ஆகியோரின் அன்புத் தந்தையும், விஜயரட்ணத்தின் சித்தப்பாவும், காலஞ்சென்றவர்களான அன்னலட்சுமி, சண்முகராஜா, செல்வராஜா, நடராஜா மற்றும் பத்மினி ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சிவபாலன், விவேகானந்தர், ராஜ்குமார் மற்றும் சிவசுப்பிரமணியம் (ரஞ்சன்), ஜெயகௌரி, விஜயலட்சுமி ஆகியோரின் மைத்துனரும், சரோஜினி, சந்திரகுமார், தஜிதரன், சதீஸ்குமார், சுதாகர், வனிதா, அனிதா, கவிதா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.06.2019) வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பரகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

**077 979 1843, 077 685 7911**

## மரண அறிவித்தல்

### ஐயாத்துரை மதிமோகன்



வட்டக்கச்சியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட "மன மோகனதாஸ் பிரபு" ஸ்ரீரங்கநாதப் பெருமான் ஆலயம் வட்டக்கச்சி மதி அண்ணா என்று அழைக்கப்படும் ஐயாத்துரை மதிமோகன் நேற்று (25.06.2019) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை, பொன்னம்மா (வட்டக்கச்சி) தம்பதியரின் அன்பு மகனும், மதிவதனா (வட்டக்கச்சி) நிர்மலா (ஆசிரியர்-கிளி/வட்டக்கச்சி மாயவனூர் வித்தியாலயம்), செல்வநிதி (இடைக்காடு, யாழ்ப்பாணம்), சிவகுமார் (சுவிஸ்), ரமேஸ்குமார் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், தயாபரன், தயாநிதி, அயந்தரூபி (சுவிஸ்), அகல்விழி (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும், கோபிதா, ஜெயபிரணவி, மருட்சயன் ஆகியோரின் அன்பு மாமனும், தருணன், தருணிகா, அம்சிகா, அனுருத் (சுவிஸ்), கயன் ஐயா (ஸ்ரீரங்கநாதப் பெருமாள் ஆலய பிரதம குரு) ஆகியோரின் பாசமிகு பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.06.2019) புதன்கிழமை பி.ப 1.00 மணியளவில் இல.904, கட்சன்வீதி, வட்டக்கச்சியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மழ்மில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பரகள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### திருமதி சண்முகம் மகாலட்சுமி

வேலனை மேற்கு சிற்பனையைப்பிறப்பிடமாகவும் நல்லூர் செட்டித்தெரு ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சண்முகம் மகாலட்சுமி கடந்த (22.06.2019) சனிக்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - பாக்கியலட்சுமி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான செல்லையா - கண்மணி தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சண்முகத்தின் அன்பு மனைவியும் சாந்தினி, சகுந்தலா, உஷாராணி, விஜயகுமார், உதயகுமார், விஜிதா ஆகியோரின் பாசமிகு தாயாரும் சொர்ணகாந்தன், ஜெயகாந்தன், ஜெகதீசன், காலஞ்சென்ற ரீனா மற்றும் ராதிகா, முரளிதரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான இந்திராவதி, இராசலெட்சுமி, அரசரெட்ணம் , மல்லிகாதேவி மற்றும் கலைச்செல்வி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான கனக ரெத்தினம், சாரதா, விஸ்வநாதன், சண்முகம்பிள்ளை, கருணைநாயகி, சொர்ணலட்சுமி, சிற்றம்பலம், அருளம்பலம் மற்றும் சோமசுந்தரம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் சஜீவனி, துளசிகன், டிலக்சி, வினோஜன், மதுரிகா, அனோஜன், சுஜிதா, அபிசன், வினேஷ், நாதியா, தனிஷ், வினுஷ்கா, அஸ்விகா, அனிஷ்கா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.06.2019) வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.10, செட்டியார்தெரு ஒழுங்கை நல்லூர், யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர். 0775792694**

## வாசிப்பு

வாசிப்பு என்பது வெறும் பாடப் புத்தகங்களின் வாசிப்பை மட்டும் கருதவில்லை. அறிவுக்கும் பொழுதுபோக்குக்குமான வாசிப்பையும் குறிக்கின்றது. இந்த வாசிப்பு எமக்கு பல வழிகளில் நன்மை செய்கிறது. பொறுமை, தன்னடக்கம், பணிவு முதலான நல்ல பண்புகளை வளர்க்கின்றது. புதிய கண்டு பிடிப்புக்கள் மற்றும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல், சவால்களை எதிர்கொள்ளுதல் போன்ற செயற்பாடுகளுக்கு புத்தாக்க சிந்தனை கள் மிக மிக அவசியம். அதற்கு வாசிப்பு கை கொடுக்கின்றது. ஒருசமூகத்தின்நீண்ட நிலைப்புக்கு அந்தச் சமூகத்தின் இளம் சந்ததி ஆற்றல் மிக்கதாக இருப்பது அத்தியாவசியமானது. தேவை அறிந்து காலத்தே செய்யும் சில செயற்பாடுகள் வளமான எதிர்காலத்தை உருவாக்கும். இதற்கு நிறைய வாசிக்க வேண்டும். தேடல் இருக்கவேண்டும். இந்த விடயத்தில் பெற்றோர்கள் விழிப்பாக இருந்து பிள்ளைகளை வாசிப்புப் பழக்கத்துக்கு ஊக்குவிக்கவேண்டும்.



## அறிஞர் வாழ்வில்

விவேகானந்தர் அதிகமாகப் பிரபலமடையாமல் இருந்த போது தென்னிந்தியாவில் தொடருந்தில் பயணம் செய்து கொண்டிருந்தார். அதே தொடருந்துப் பெட்டியில் பயணம் செய்த இரண்டு வெள்ளைக்காரப் போர் வீரர்கள் துறவிகளைப் பற்றிக் கேவலமாகப் பேசிக் கொண்டிருந்தனர். விவேகானந்தர் அவர்கள் பேசுவதைக் கேட்டும் மறுத்து எதுவும் பேசவில்லை. சேலம் தொடருந்து நிலையத்தில் அவர் தொடருந்து நிலைய அதிகாரியுடன் ஆங்கிலத்தில் பேசுவதைக் கேட்டு இராணுவ வீரர்களுக்கு வியப்பாக இருந்தது. தொடருந்தும் புறப்பட்டதும், "உங்களுக்குத்தான் நன்றாக ஆங்கிலம் தெரிகிறதே. நாங்கள் துறவிகள் பற்றி கூறிய கருத்துக்கள் குறித்து ஏன் எதுவும் மறுத்துப் பேசவில்லை?"என்று கேட்டனர். அதற்கு அவர் "முட்டாள்களை நான் சந்திப்பது இது முதல் தடவையல்ல" என்று பதில் கூறியதைக் கேட்டு வாயடைத்துப் போயினர்.



# 31 ஆம் நாள் நினைவு தினமும் வீட்டுக்கிருத்திய நிகழ்வும்

## அமரர் தம்பிஐயா பத்மநாதன்

**(இலங்கைப் போக்குவரத்துச் சபை ஓய்வுபெற்ற பொறியியல் பகுதி உத்தியோகஸ்தர்)**

**மண்ணில்** 28.10.1940 **விண்ணில்** 27.05.2019



உறவுகளை மதிக்கின்ற உத்தமராய்
மிளிர்ந்தீர்
நினைவுகளில் வாழும் நிலைதந்து
மறைந்தீர்
அனைவருமே போற்றிட அகிலமதில்
வாழ்ந்தீர்
ஆண்டுபல சென்றாலும் உங்களை
யாம் மறவோம்

கடந்த 27.05.2019 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் **அமரர் தம்பிஐயா பத்மநாதன்**

அவர்களின் 31 ஆம் நாள் நினைவு தினமும் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் இன்று (26.06.2019) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் இந்நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**இல.01, கனகரட்ணம் வீதி,**
**அரியாலை, யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**

---

# வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

## கடைகள் வாடகைக்கு வழங்குதல் தொடர்பான மீள் கேள்வி அறிவித்தல்

சுன்னாகம் உப அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய மூன்று கடைகள் அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு வாடகைக்கு வழங்குவதற்கான ஆகக்கூடிய ஒரே முறையில் செலுத்தக்கூடிய தொகைக்கான கேள்விகள் கீழ் காட்டப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக வலிகாமம் தெற்கு பிரதேச சபையால் குத்தகைக்கு வழங்குவதற்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி : 27.06.2019 தொடக்கம் 10.07.2019 பி.ப 3.00 மணி வரை.
கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி : 11.07.2019 பி.ப 2.00 மணி.
கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி : 11.07.2019 பி.ப 2.00 மணி.
கேள்வி திறக்கப்படும் இடம் : தலைமை அலுவலகம், வலிதெற்கு பிரதேச சபை.

| கடை இல | ஆகக்குறைந்த கேள்வித்தொகை (VAT &NBT தவிர) | கேள்விவைப்பு பணம் (மீளளிக்ககூடியது) | கேள்வி படிவகட்டணம் (மீளளிக்க முடியாது) (VAT &NBT தவிர) |
|---|---|---|---|
| மேல்மாடி கடை இல : 1 | 1,320,000.00 | 26,100.00 | 1,000.00 |
| மேல்மாடி கடை இல : 2 | 1,320,000.00 | 26,100.00 | 1,000.00 |
| மேல்மாடி கடை இல : 4 | 1,320,000.00 | 26,100.00 | 1,000.00 |

**நிபந்தனைகள்:-**

01. விண்ணப்பதாரி வலிகாமம் தெற்கு பிரதேச சபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
02. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கிராம சேவகரால் உறுதிப்படுத்திய கோரிக்கை கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் சமூகமளிக்க வேண்டும்.
03. கேள்விப்படிவங்களைப் பெற்றுக்கொள்வோர் மூலப்பிரதி, இணைப்பிரதி ஆகிய இரண்டினையும் பூரணப்படுத்தி தமது கேள்விகளை தனித்தனி கடித உறையில் இட்டு "செயலாளர் வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்" என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக குறிப்பிட்டு மூலப்பிரதி, இணைப் பிரதி எனக் குறிப்பிட்டு அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும்.
04. மாதாந்த 'கடை வாடகையாக பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்த வேண்டும். குறித்த மாத வாடகை பணத்தினை ஒவ்வொரு மாதம் 31ம் திகதிக்குள் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ள வேண்டும். தவறும் பட்சத்தில் அதற்கான மாதக்கட்டணத்துடன் மாதக்கட்டணத்தின் 10 வீதம் தண்டமாக அறவிடப்படும் என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.
05. கேள்விச்சித்திகாரராக தெரிவு செய்யப்படுவோர் கேள்வித் தொகையினை முழுமையாக செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொண்டு பிரதேச சபையுடன் ஒப்பந்தத்தை செய்து கொள்ள வேண்டும்.
06. சித்திகர குத்ததகைகாரர் வலிகாமம் தெற்கு பிரதேச சபையுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்து கொள்ளல் வேண்டும்.
07. சித்திகர குத்ததகைகாரர் பாதுகாப்பு வைப்பு பணமாக 03 மாத வாடகை தொகையினை முற்பணமாக செலுத்த வேண்டும்.
08. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிம கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிம சான்றிதழையும் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
09. கேள்விப்பத்திரத்தினை எற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் செயலாளருக்கு / தவிசாளருக்கு உண்டு.
10. மேலதிக விபரங்களை வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**க.தர்ஷன்**
**தவிசாளர்**
**வலிகாமம் தெற்கு பிரதேசசபை,**
**சுன்னாகம்.**

---

# மு/புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவு பெண்கள் தொழில்முயற்சியாளர் கூட்டுறவுச்சங்கம் (வ-து)

**பொருள் கொள்வனவிற்கான கேள்விப்பத்திரம்.**

மு/புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவு தொழில் முயற்சிற்சியாளர் 'கூட்டுறவுச்சாங்கத்தின் பயனாளிகளுக்கு வழங்குவதற்கு பின்வரும் பொருட்கள் கொள்வனவு செய்ய வேண்டிய தேவை காணப்படுவதால் அதற்கான கேள்விப்பத்திரம் கோரப்படுகின்றது.

## Electric Water pump Specification

Single phase water pump
2Hoese power2" x 2" out let
Max gph 3000
2" head ft 80
pure copper coil
Dual water seal
Metal body

**நியந்தனைகள்**

* கொள்வனவுக்கான கூறுவிலைகள் அனைத்தும் மூடிய கூறுவிலைகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.
* பொருட்கள் கூறுவிலைகள் ஆராயப்பட்ட நாளிலிருந்து 30-35 நாட்களுக்குள் பொருட்கள் விநியோகம் செய்யப்படல் வேண்டும்.
* விநியோகிக்கப்பட வேண்டிய Electric Water pump க்ளின் எண்ணிக்கை 150 ஆகும்.
* கொள்வனவுக்கான பொருட்கள் அதில் குறிப்பிட்ட விபரக்குறிப்புகளுக்கு அமைவாக (Specification) முழுமையாக விபரங்களை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.
* மேற்படி கொள்வனவுக்கான கேள்விப்பத்திரம் 2019.07.03ம் திகதி பி.ப 3.00 மணி வரைஏற்றுக் கொள்ளப் படும். பிந்திய கேள்விப்பத்திரம் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்விப்பத்திர உறைகள் 2019.07.04 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு கேள்வி கேட்பவர்கள் / அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப் படும்.
* இக் கேள்விப்பத்திரமானது 2019.07.03ம் (புதன்கிழமை) திகதி பி.ப 3.00 மணிக்கு முன்னர் மு/ புதுக் குடியிருப்பு பிரதேச செயலாளர் பெண்கள் தொழில் முயற்சியாளர் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுமுகாமையாளருக்கு கிடைக்கத்தக்கதாக பொதுமுகாமையாளர், மு/புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர்பிரிவு பெண்கள் தொழில் முயற்சியாளர் கூட்டுறவுச் சங்கம், A35, பரந்தன் பிரதான வீதி, கைவேலி, புதுக்குடியிருப்பு, என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலக வேலை நேரத்தில் நேரிலோ இதற்கான கேள்விப்பத்திரத்தை சமர்ப்பிக் கப்பட வேண்டும்.

கூட்டுறவுச் சேவையிலுள்ள,
**பொதுமுகாமையாளர்,**
**மு/ புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவு பெண்கள் தொழில் முயற்சியாளர் கூட்டுறவுச் சங்கம்.**

---

# ஈரவிழிகளுடன் ஈராண்டு நினைவஞ்சலி

பிறப்பு 06 . 05 . 1963



இறப்பு 26 . 06 . 2017

## அமரர் சுந்தரலிங்கம் லலிதா (செல்வி)

அம்மா! காலங்கள் கரைகிறது ஆனால்
காயங்கள் ஆறவில்லை
நீர் இல்லா இரவுகள் நீளமாகிறது
நினைவுகள் வாட்டி வதைக்கிறது
கடலலைகள் கூட சற்று ஓய்வெடுக்கும்
உம் நினைவலைகள் ஓய்வில்லாது ஓடிக்கொண்டே இருக்கிறது
நாம் பிறக்குமுன் உன் கருவறையில் வளர்ந்தோம்
பிறந்தபின் உம் அரவணைப்பில் வளர்ந்தோம்
இன்று நீர் இறந்த பின் உம் நினைவுகளில் - வாழ்கிறோம்
மூச்சடக்கி ஈன்றீர் எம்மை
மூச்சுள்ளவரை மறவோம் உம்மை

**கனத்த இதயங்களுடன்**
**பிள்ளைகள்**

---

# மரண அறிவித்தல்

## பொன்னுத்துரை பார்வதிப்பிள்ளை (பொன்னம்மா)



பிறப்பு 08.08.1937 இறப்பு 25.06.2019

வறணியைப் பிறப்பிடமாகவும், சங்கத்தார் வயல் இயக்கச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை பார்வதிப்பிள்ளை நேற்று(25.06.2019) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதி நிகழ்வு இன்று (26.06.2019) புதன்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று முற்பகல் 11 மணியளவில் சங்கத்தார் வயல் ஆலங்கட்டைப் பள்ள பொது மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: உறவினர்கள்.**

**077 539 4435**

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# மக்கள் கொதித்ததில் என்ன தவறு?

கல்முனை வடக்கு தமிழ் உப பிரதேச செயலகத்தைத் தரம் உயர்த்தக்கோரி பிக்குகள் தலைமையில் நடந்த பட்டினிப் போராட்டம், அதற்கு எதிராக இடம்பெற்ற முஸ்லிம்களின் சத்தியாகிரகப் போராட்டம் என்பன மெல்ல ஓய்வுக்கு வந்திருக்கின்றன. ஆனால், அந்தப் போராட்டம் குறித்த வாதப் பிரதிவாதங்கள் சமூக ஊடகங்களில் இன்னும் முடிந்த பாடில்லை.

நடந்த போராட்டத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராகப் பயன்படுத்துவதில் ஒருதரப்புக் குறியாக இருக்க, அதை எதிர்கொள்ளும் விதத்தில் போராட்டக்காரர்கள் தவறானவர்கள் அவர்களின் அரசியல் நோக்கமே தவறு என்று மறுதரப்புமாக இந்தக் கருத்து மோதல் இடம்பெற்று வருகின்றது.

குறிப்பாக பட்டினிப் போராட்டத்தின் இறுதி நாள்களில் கொழும்பு ஆட்சியாளர்களின் எழுத்து மூல வாக்குறுதியை எடுத்துக்கொண்டு போராட்டக் களத்துக்குச் சென்ற அமைச்சர்கள் தயா கமகே, மனோ கணேசன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஏப்ரகாம் சுமந்திரன் ஆகியோருக்கு எதிராக, மக்கள் ஆத்திரப்பட்டமையும் கொதிப்போடு அவர்களுக்கு எதிராகக் கருத்துக்களைத் தெரிவித்தமையும் கடும் விமர்சனங்களுக்கு உள்ளாகியிருக்கின்றது.

அப்படி நடந்துகொண்டவர்கள் அனைவரும் மகிந்தவின் நிகழ்ச்சி நிரலின் கீழ் செயற்படுபவர்கள் என்கிற வகையிலான வசைபாடல்களையும்கூடக் கணிசமான அளவில் காணக்கிடக்கின்றது.

ஆனால், உண்மை என்ன? அந்த மக்களில் ஒரு பகுதியினர் பொறுமையிழந்து ஏன் கொதித்துப்போனார்கள்?

இவற்றுக்கான விடையை நேற்றைய அமைச்சரவைக் கூட்டம் தந்திருக்கிறது. இந்தக் கூட்டத்தில் பேசிய அமைச்சர் மனோ கணேசன், கல்முனை வடக்கு தமிழ் உப பிரதேச செயலர் பிரிவு விவகாரத்தைக் குறித்தும் பேசினார்.

கல்முனை வடக்கு உப பிரதேச செயலர் பிரிவைத் தரம் உயர்த்துவதற்கான உடனடி நடவடிக்கையாக அங்கு ஒரு கணக்காளர் நியமிக்கப்படுவார் என்று அமைச்சர் வஜிர அபேவர்த்தன தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு எழுத்து மூல உறுதியளித்திருந்தார். இந்த வாரத் தொடக்கமான திங்கட்கிழமை இந்த நியமனம் வழங்கப்படும் என்று அந்த உறுதிமொழியில் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அமைச்சரவைக்கூட்டம் நடக்கும் செவ்வாய்க்கிழமையும் கூட நியமனம் வழங்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டினார் அமைச்சர்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் அடுத்த ஒரு வாரத்துக்குள் இது தொடர்பான ஒரு கூட்டம் நடத்தப்படும் என்றார். அதில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்கள் மனோ கணேசன், தயா கமகே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சிகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டு கல்முனைக்கு வடக்கு உப பிரதேச செயலகத்துக்கு முழுநேரக் கணக்காளர் ஒருவரை நியமிப்பது குறித்துக் கலந்துரையாடலாம் என்றார்.

ஆக மொத்தத்தில் கூட்டமைப்புக்கு வழங்கிய வாக்குறுதிப்படி உடனடியாகக் கணக்காளர் நியமிக்கப்படப்போவதில்லை. கொழும்பு ஆட்சியாளர்கள் இப்படித்தான் வாக்குறுதிகளைத் தந்து ஏமாற்றுவார்கள் என்பதை உறுதியாக நம்பியதன் காரணமாகத்தானே போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் அந்த வாக்குறுதிகளையும் அதைக் கொண்டு வந்தவர்களையும் தூக்கி எறிந்தார்கள். இப்போது அவர்களின் நம்பிக்கை 100 வீதம் சரியானதுதான் என்பதை ஆட்சியாளர்கள் ஐயம் திரிபுற நிரூபித்துவிட்டார்கள்தானே! அப்படியிருக்கும்போது மக்கள் கொதித்தமை, வெகுண்டெழுந்து கருத்துக் கூறியமை தவறு என்று எப்படிச் சொல்ல முடியும்?

கொழும்பு ஆட்சியாளர்கள் தமிழர்கள் தொடர்பான தமது வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் அதிக சிரத்தை எடுத்துக்கொள்ளப்போவதில்லை என்பதை மக்கள் நன்குணர்ந்துள்ள நிலையில் அது தமிழ் அரசியல்வாதிகளில் சிலருக்கு மட்டும் தெரியாமல், புரியாமல் போனமைதான் வியப்புக்குரியது.



# ஹொங்கொங்கின் தனித்தன்மை பாதுகாக்கப்படல் மிக அவசியம்!

ஹொங்கொங்கில் சீன அரசால் நியமிக்கப்பட்ட நகர நிர்வாக அதிகாரிகளுக்கும், ஜனநாயக உரிமைகளைக் கோரும் ஹொங்கொங் மக்களுக்கும் இடையிலான போராட்டம் மீண்டும் ஆரம்பமாகியிருக்கிறது. சந்தேகப்படும்படியாக இருப்பவர்களை அல்லது குற்றச் செயல்கள் தொடர்பாக தேடப்படுபவர்களைக் கைதுசெய்து, நாடு கடத்த உதவும் மசோதாவை நிறைவேற்றும் வேலைகளில் ஹொங்கொங் நகர ஆணையம் இறங்கியதை எதிர்த்து இம்முறை வீதிகளில் இறங்கினார்கள் ஹொங்கொங் மக்கள். லட்சக் கணக்கில் ஒன்றுதிரண்டவர்களின் எதிர்ப்பைச் சமாளிக்க முடியாமல், முயற்சியைக் கைவிடுவதாக அறிவித்து, இப்போதைய பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்திருக்கிறது ஹொங்கொங் நகர ஆணையம். ஆனால், ஜனநாயகத்துக்கு எதிரான கருமேகங்கள் இம்மியளவும் அகலவில்லை.



**பிரிட்டன், சீன நிர்வாகங்கள்**

பிரிட்டனின் நிர்வாகத்திலிருந்த ஹொங்கொங், மேற்கத்திய நாடுகளோடு ஒப்பிடத்தக்க சுதந்திர - தாராள - ஜனநாயகக் கலாசாரத்தைக் கொண்டிருந்தது. சீனாவிடம் 1997ஆம் ஆண்டில் அது ஒப்படைக்கப்பட்டபோதே அதனுடைய கலாசாரம் என்னவாகும் என்ற கவலை ஏற்பட்டது. 'இந்தப் பிரதேசம் சுயாட்சித்தன்மையுடன் நிர்வகிக்கப்படும், அடுத்த 50 ஆண்டுகளுக்கு அடிப்படைச் சட்டமே ஹொங்கொங் நகர நிர்வாகத்தை வழிநடத்தும்' என்று அப்போது சொன்னது சீன அரசு. இன்றளவும் சீனாவுடன் ஒப்பிடுகையில் ஹொங்கொங் சூழல் தாராளமயமானதாகவே இருக்கிறது என்றாலும், ஹொங்கொங் மீது தனது அதிகாரத்தை முழு அளவில் செலுத்தும் முயற்சிகளையும் தொடர்ந்து மேற்கொண்டேவருகிறது சீன அரசு.

ஹொங்கொங்கின் முதன்மை நிர்வாக அதிகாரி கேரி லாம், 'வேறு இடங்களில் குற்றச் செயல்களில் ஈடுபட்டுவிட்டு ஹாங்காங்குக்கு வந்து தலைமறைவாக வாழ்வோரைத் தண்டிக்க இச்சட்டம் வேண்டும்' என்று சொன்னார். ஆனால், ஏற்கெனவே ஜனநாயக வெளி சுருங்கிக்கொண்டிருக்கும் ஹொங்கொங்கில் இச்சட்டம் நடைமுறைக்கு வந்தால், ஜனநாயக உரிமைகளுக்காகப் போராடுவோர் உட்பட எவரை வேண்டுமானாலும் சீன அரசு, 'தேடப்படும் நபர்' என்று அறிவித்து, அவர்களை சீனாவுக்குக் கொண்டு சென்றுவிடும். இந்த வகையில் கைதுசெய்யப்படுபவர்கள் சீன அரசின் கொடுங்கோன்மையிலிருந்து தப்பவே முடியாது' என்பது மசோதாவை எதிர்ப்பவர்களின் வாதம்.

**தனித்தன்மை வேண்டும்**

ஜனநாயகத்துக்காகப் போராடுவோர் சுட்டிக்காட்டுவதுபோல, ஹொங்கொங்கில் நகர நிர்வாகத்தின் எதேச்சதிகார நடவடிக்கைகள் அதிகரித்துவருவது உண்மைதான். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தகுதி நீக்கப்படுவது, ஜனநாயகச் செயல்பாட்டாளர்கள் தேர்தலில் நிற்க முடியாதபடிக்குத் தடுக்கப்படுவது, அரசியல் கட்சிக்குத் தடை விதிக்கப்படுவது என்று அடுத்தடுத்து நடக்கும் விஷயங்கள் புதிய மசோதாவின் மீது மக்கள் மத்தியில் அச்சத்தையும் எதிர்ப்பையும் உருவாக்கியிருப்பது நியாயமானதாகவே தோன்றுகிறது. 'ஒரே நாடு - இரண்டு வித அரசு' என்ற வாக்குறுதியையே சீனாவுக்கு ஹொங்கொங் மக்கள் நினைவூட்ட விரும்புகின்றனர். ஹொங்கொங்கின் தனித்தன்மை பாதுகாக்கப்படுவதே அங்கு அமைதி நிலவுவதற்கான நிரந்தரமான தீர்வாகவும் இருக்கும்.

நன்றி தீ ஹிந்து



# வட்டு. தொகுதிக்கு சரவணபவன் எம்.பி. தலைவர்

*நேற்று ஏகமனதாகத் தெரிவு*



யாழ்ப்பாணம், ஜூன் 26

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டைத் தொகுதிக் கிளையின் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் ஏகமனதாக மீண்டும் தெரிவு செய்யப்பட்டார்.

வட்டுக்கோட்டையில் உள்ள தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் தொகுதிக் கிளையின் மீள்தெரிவு, தமிழரசுக் கட்சியின் நிர்வாகச் செயலர் எஸ்.எக்ஸ்.குலநாயகம் தலைமையில் நேற்றுச் [illegible]மை பிற்பகல் 4.30 மணியளவில் நடைபெற்றது.

அதில் தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டைத் தொகுதிக் கிளையின் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனும், செயலராக வலி.மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் த.நடனேந்திரனும், பொருளாளராக க.சபாநாயகமும், உப தலைவராக த.சசிகரனும், உப பொருளாளராக க.கந்தசாமியும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்ட னர்.

செயற்குழு உறுப்பினர்களாக இ.சகாதேவன், ம.குகராஜ், எஸ்.சிவ சுப்பிர மணியம், எஸ்.குகராஜ், சதீஸ்வரன், ஜெயந்தன், உமாபதி, செல்வநாயகம் ஆகியோரும் தெரிவாகினர். (எ)

## யானை தாக்கி விவசாயி உயிரிழப்பு

வவுனியா, ஜூன் 26

வவுனியா, பொஹஸ்வாவே பிரதேத்தில் யானையின் தாக்குதலில் விவசாயி ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 4.30 மணியவில் நடந்துள்ளது.

இவர் வவுனியா நகரச் சந்தைக்கு உந்துருளியில் மரக்கறி கொண்டு சென்ற சமயம் காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார் என்று கூறப்படுகின்றது. மாமடுவ வீதியில் உள்ள பிள்ளையார் ஆலயத்துக்கு அருகே இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

உயிரிழந்தவர் 58 வயதுடையவர் என்றும், உயிரிழந்தவரின் உடல் மேலதிக நடவடிக்கைகளுக்காக வவுனியா பொது மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ)



## ஐஸ் போதை பொருளுடன் தலைமன்னாரில் மூவர் கைது

மன்னார், ஜூன் 26

தலைமன்னாரில் ஐஸ் போதைப் பொருளுடன் 3 பேர் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கடற்படையினர் தெரிவித்துள்ளனர். அவர்கள் தலைமன்னார் பொலிஸாரிடம் மேலதிக நடவடிக்கைகளுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தலைமன்னார் கடற்பரப்பில் ரோந்து சென்ற கடற்படையினர் சந்தேகத்தின் அடிப்படையில் படகொன்றைச் சோதனையிட்டுள்ளனர். அதில் 50 கிராம் 75 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது. அதையடுத்துப் படகில் இருந்த 3 பேர் கைது செய்யப்பட்டனர் என்று கூறப்படுகின்றது. (எ-60)



## நடுக்குடாக் கடற்கரையில் 939 கிலோ பீடி இலை மீட்பு

மன்னார், ஜூன் 26

மன்னார், நடுக்குடாக் கடற்கரையில் நேற்றுமுன்தினம் மாலை கடற்படையினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது 939.2 கிலோகிராம் பீடி இலைகள் மீட்கப்பட்டு ள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

வட மத்திய கடற்படைக் கட்டளையுடன் இணைக்கப்பட்ட கடற்படையினர் மேற்கொண்ட சோதனையில் 45 பொதிகளாகப் பொதி செய்யப்பட்ட நிலையில் அவை மீட்கப்பட்டுள்ளன. மீட்கப்பட்ட பீடி இலைப் பொதிகள் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக யாழ்ப்பாணம் சுங்கத் திணைக் களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, இந்த ஆண்டின் இதுவரையான காலப் பகுதியில் 16 ஆயிரத்து 500 கிலோகிராம் பீடி இலைகள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-56)

# ஊடக சுதந்திரத்தை நசுக்கும் வடக்கு ஆளுநரின் செயற்பாடு

## *முக்கிய கூட்டங்களில் செய்தி சேகரிக்க தடை ஏற்படுத்துகிறார் என்று குற்றச்சாட்டு*

*யாழ்ப்பாணம், ஜூன் 26*

*வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் அண்மைக் காலமாக ஊடகங்களை அடக்கும் வகையில் தொடர்ச்சியாகச் செயற்படுகின்றார் என்று குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு ள்ளன. செய்தி சேகரிக்கச் செல்லும் ஊடகவியலாளர்களைத் தனியார் ஊடகங்கள், அரச ஊடகங்கள் என்று பிரித்து தனியார் ஊடகங்களின் செய்தியாளர்களை கூட்டங்களில் இருந்து வெளியேற்றுவதில் மும்முரம் காட்டுகின்றார் என்று பரவலாகக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.*

போரால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் ஆளுநர் கலந்து கொள்ளும் கூட்டங்களில் எல்லாம் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெற்றுவ ருகின்றன என்று செய்தியாளர்கள் கூறுகின்றனர்.

அரச, தனியார் ஊடகங்கள் என்று வகைப்படுத்தி, ஊடகங்களை பிரித்தாள்வதன் மூலம் வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் செய்தியாளர்களுக்கிடையில் இருக்கும் ஒற்றுமையைக் குலைக்க முயற்சிக்கின்றார் என்ற சந்தேகம் ஏற்படுகின்றது என்றும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றபோதும் ஆளுநர் இவ்வாறே ஊடகவியலாளர்களிடம் நடந்து கொண்டுள்ளார். அபிவிருத்திக் குழுக் கூட்டம் அரச விடயங்கள் பற்றி மக்கள் பிரதிநிதிகளுடன் அரசு ஊழியர்கள் கலந்துரையாடும் விடயம் எனவும் ஊடகங்கள் இருக்கத் தேவையில்லை எனவும் கூறிய ஆளுநர் சுரேன் ராகவன் தனியார் ஊடகங்களை மட்டும் வெளியேற்ற முயற்சித்துள்ளார்.

மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த ஊடகவியலாளர்களிடம் தனியார் ஊடகங்களைச் சேர்ந்தவர்கள் யார்? என்று கேட்ட ஆளுநர், அவர்களை மட்டும் அங்கிருந்து வெளியேற்ற முயன்றார். கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் பின்னர் வழங்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார். அரச ஊடகங்களைச் சேர்ந்த ஊடகவியலாளர்களைச் செய்தி சேகரிக்க அனுமதித்தார்.

ஆளுநரின் இந்தச் செயற்பாட்டுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் எதிர்ப்புத் தெரிவித்தார். இதுவரை காலமும் ஊடகங்களின் முன்னிலையில்தான் இந்தக் கூட்டம் நடைபெற்றது. அந்த வழமையை மாற்றவேண்டாம். அரச ஊடகங்களை அனுமதித்து தனியார் ஊடகங்களை வெளியேறவேண்டும் என கூறுவது பொருத்தமல்ல என்று அவர் குறிப்பிட்டார்.

உடனே ஆளுநர் அப்படியானால் அனைத்து ஊடகங்களையும் வெளியேற்றுவோம் என்றார். அப்போது நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜா குறுக்கிட்டார். ஊடகங்கள் கூட்டத்தில் அனுமதிக்கப்பட வேண்டும். அவர்களை வெளியே அனுப்ப முடியாது. ஊடகங்களுக்குப் பயப்படவேண்டிய தேவையில்லை. இந்த அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் நடைபெறும் விடயங்களை மக்கள் அறியவேண்டும். நாங்கள் என்ன பேசுகின்றோம் என்பதை மக்கள் அறியவேண்டும் என்று அவர் கூறினார்.

19ஆவது திருத்தச் சட்டத்தில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. ஒவ்வொருவருக்கும் தகவல் அறியும் உரிமை இருக்கின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் சுட்டிக்காட்டினார்.

“ஆம் அவ்வாறு சட்டம் இருக்கின்றது உண்மை. ஆனால் ஒவ்வொரு கூட்டத்தையும் ஒவ்வொரு பேச்சுக்களையும் அறிய வேண்டும் என்று இருக்கின்றதா?" என்று ஆளுநர் சிவசக்தி ஆனந்தனிடம் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த சிவசக்தி ஆனந்தன் “ஆம் கட்டாயம். அவ்வாறு அறியவேண்டும். இங்கே நடைபெறும் விடயங்களை இங்கே பேசப்படும் விடயங்களை இந்த மாவட்டத்தின் மக்கள் அறியவேண்டும். அந்த மக்களுக்கு அது தெரியவேண்டும். நாங்கள் இந்த மாவட்டத்தின் அபிவிருத்தியைப் பற்றித்தான் பேசுகின்றோம். வேறு ஒரு விடயங்களைப் பற்றியும் பேசவில்லை. அந்த விடயங்களை மக்கள் அறியவேண்டும். ஊடகங்களை அனுமதியுங்கள். இந்த அரசில் வெளிப்படைத் தன்மை இருக்கவேண்டும். தகவல் அறியும் உரிமை எல்லோருக்கும் இருக்கின்றது. இந்த நிலையில் தனியார் ஊடகங்களை மட்டும் வெளியேற்றுவது தவறானது. என்றார்.

இந்த வாதப் பிரதிவாதங்களால் ஆளுநர் ஆத்திரமடைந்தார்.

நான் ஊடக எதிர்ப்பாளன் அல்ல. இங்கே நடைபெறும் விடயங்களை நான் பார்வையிடுகின்றேன். நீங்கள் கூட்டத்தை நடத்துங்கள் நான் ஊடகங்களுக்குப் பேச வரவில்லை என்று கூறி ஆளுநர் மௌனமாக அமர்ந்தார்.

இவ்வாறான சம்பவங்கள் முன்னரும் நடந்திருந்தன. முல்லைத்தீவில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கலந்து கொள்ளும் நிகழ்வு தொடர்பாக ஆளுநர் தலைமையில் கலந்துரையாடல் இடம்பெற்றபோது தனியார் ஊடகங்களை ஆளுநர் அனுமதிக்க மறுத்த சம்பவம் இடம்பெற்றிருந்தது. கிளிநொச்சி மாவட்டச் செயலகத்திலும் அரச அதிகாரிகளுடனான கூட்டம் ஒன்றின்போதும் ஆளுநர் ஊடங்கங்களை வெளியேற்றியிருந்தார். கூட்டத்தில் என்ன நடந்தது என்பதை பின்னர் அறிவித்திருந்தார்.

ஆளுநரது இவ்வாறான நடவ்டிக்கைகள் ஊடகங்களை அடக்கும் செயற்பாடே என்று ஊடகவியலாளர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். மக்களுக்கு உண்மை நிலவரங்கள் மறைக்கப்பட்டு, அதிகாரிகள் கூறுபவற்றையே மக்கள் அறிய வேண்டும் என்ற நிலைமையை ஏற்படுத்த முயற்சி எடுக்கப்படுகின்றது என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

போர்க் காலத்துக்குப் பின்னர் வடக்கில் படையினர் மற்றும் ஆயுதக் குழுக்கள் எவ்வாறு தங்களது அதிகாரங்களை, செல்வாக்குகளைப் பயன்படுத்தி ஊடகங்களை அடக்கியாண்டார்களோ அது போன்றே வடக்கு ஆளுநரும் செயற்பட முனைகின்றார் என்று பல தரப்பினரும் கூறுகின்றனர்.

(எத-21.26)

# போதை ஒழிப்பு விழிப்புணர்வு கருத்தமர்வு

கொடிகாமம்.ஜீன் 26
தேசிய போதை ஒழிப்பு வார நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் போக்கட்டி அ த க. பாடசாலையில் மாணவர்களுக்கான போதை ஒழிப்பு விழிப்புணர்வுக் கருத்தமர்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.
அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் எழுதுமட்டுவாழ் பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர் சூ.குணசாந்தன், கொடிகாமம் தெற்கு கிராம அலுவலர் செல்வி ஞா.சர்மிலா சமுர்த்தி அலுவலர் திருமதி ம. இந்திரவதனி ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஐ-159)



# போதைப் பொருள் ஒழிப்பு விழிப்புணர்வுப் பேரணி

சாவகச்சேரி. ஜூன் 26
தேசிய போதைப்பொருள் ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு விழிப்புணர்வுப் பேரணி ஒன்று நடைபெறவுள்ளது.
தென்மராட்சி பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் இன்று முற்பகல் 9 மணிக்குப் பிரதேச செயலக முன்பாக ஆரம்பித்து ஏ -9 முதன்மை வீதி வழியாக சாவகச்சேரி பேருந்து நிலையத்தை சென்றடையவுள்ளது. இந்த விழிப்புணர்வுப் பேரணியில் பொலிஸார், மதுவரி நிலையத்தினர், உள்ளூராட்சி சபையினர், சுகாதாரத் திணைக்களத்தி னர், பிரதேசத்தில் உள்ள பொது அமைப்புகளின் பிரதிநிதி கள் உட்பட பலர் பங்குபற்றவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.
தேசிய போதைப் பொருள் ஒழிப்பு வாரமாக கடந்த 23 ஆம் திகதி தொடக்கம் ஜூலை முதலாம் திகதி வரை கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.
இதனையொட்டி பிரதேச செயலகங்கள் மற்றும் சுகாதாரப் பகுதியினரால் பல்வேறு செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஐ-9)

# கிளிநொச்சி டி.ஐ.ஜி கேகாலைக்கு மாற்றம்

*யாழ். டி.ஐ.ஜி. அங்கு மேலதிக கடமை*

கிளிநொச்சி, ஜீன் 26
கிளிநொச்சி மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகிந்த குணரத்ன கேகாலை மாவட்டத்துக்கு இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார்என்றுபொலிஸார் தெரிவித்தனர்.
கிளிநொச்சி மாவட்டத்துக்கு இதுவரை எவரும் நியமிக்கப்படவில்லை. அதனால் யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரே கிளிநொச்சி மாவட்டத்திலும் மேலதிக கடமையாற்றுகிறார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-6)

# பளை பொலிஸ் பொறுப்பதிகாரி பதவியுயர்வுடன் மன்னாருக்கு

கிளிநொச்சி, ஜீன் 26
பளைபொலிஸ்நிலையபொறுப்பதிகாரிகிசாந்தன் மன்னார்தலைமைப்பொலிஸ்நிலையப்பொறுப்பதிகாரியாகப் பதவி உயர்வு பெற்றுச் சென்றுள்ளார்.
மூன்று மாதங்களுக்கு முன்னர் பளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக அவர் பதிவியேற்றிருந்தார். கடந்த வாரம் மன்னார் தலைமைப் பொலிஸ்நிலையப்பொறுப்பதிகாரியாகநியமிக்கப்பட்டுள்ளார். தற்போது பளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக திஸாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-6)

# போதைப்பொருளுக்கு எதிராக விழிப்புணர்வு வாகனப் பேரணி

*யாழ்ப்பாணம்,ஜூன் 26*

**போ**தைப்பொருள் ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு, போதைப்பொருளுக்கு எதிராக ஏராளமான விழிப்புணர்வு வாகனப் பேரணி நேற்று கிளிநொச்சியை சென்றடைந்தது. "இம்மாதம் 23ஆம் திகதி முதல் ஜூலை மாதம் முதலாம் திகதி வரை போதை ஒழிப்பு வாரமாக அரச தலைவரால் அறிவிக்கப்பட்டது.

இந்த செயற்திட்டம் நாடாளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அந்த வகையில். போதை ஒழிப்பு வாரத்தில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு திணைக்களங்கள் மற்றும் செயலகங்கள் ஊடாக வெவ்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.
அதற்கமைய வடக்கு மாகாண ஆளுநரின் வேண்டுகோளுக்கு இணங்க வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் இருந்து வாகனப் பேரணியை முன்னெடுக்குமாறு அறிவிக்கப்பட்டது.
இந்த நிலையில் யாழ்ப்பாணம்.வவுனியா,மன்னார். முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இருந்து வாகனப்பேரணி நேற்று கிளிநொச்சியை சென்றடைந்தது.

**யாழ்ப்பாணம்**
யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் இருந்து நேற்றுக் காலை 8.45 மணியளவில் இந்த பேரணி ஆரம்பமானது. பேரணியை மாவட்டச் செயலர் நாகலிங்கம் வேதநாயகன் ஆரம்பித்து வைத்தார். அதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர். "யாழ்ப்பாணத்தில் இருந்து இந்த பேரணி கிளிநொச்சி நோக்கி செல்கிறது. இந்த போதை ஒழிப்புக்கு அனைத்து தரப்பினரும் தமது ஒத்துழைப்பை வழங்கி போதைப்பொருளை இல்லாதொழிக்க ஆதரவு வழங்க வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

**வவுனியா**
போதைப் பொருள் ஒழிப்புக்கான வாகனப் பேரணி நேற்றுக் காலை 8.30 மணியளவில் வவுனியா மாவட்ட செயலகத்திலிருந்து ஆரம்பமானது.
மாவட்டச் செயலர் ஐ.எம். ஹனீபா தேசியக் கொடியை ஏற்றி வைத்து வாகனப்பேரணியை ஆரம்பித்து வைத்தார். வவுனியா மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் ஆரம்பமான பேரணி நேற்று மதியம் கிளிநொச்சி நகரினைச் சென்றடைந்தது.

**மன்னார்**
மன்னார் மாவட்டச் செயலகத்தின் ஏற்பட்டில் மன்னார் மாந்தை சந்தியில் இருந்து வாகனபேரணி நேற்றுக் காலை ஆரம்பமானது.
மன்னார், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு, மடு ஆகிய ஐந்து பிரதேச செயலகங்களின் பிரதேச செயலர்கள், திணைக்கள பணியாளர்கள் உட்பட நூற்றுக்கணக்கானவர்கள் குறித்த வாகனப் பேரணியில் கலந்து கொண்டனர்.
வடக்கிலுள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த திணைக்களங்களின் விழிப்புணர்வு வாகனப் பேரணி கிளிநொச்சியை வந்தடைந்து, கிளிநொச்சி நகரிலிருந்து ஊர்வலமாக மத்திய கல்லூரி மைதானத்தை சென்றடைந்தது. பின்னர் கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் நிகழ்வுகள் இடம்பெற்றன.
இங்கு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் வரவேற்புரை நிகழ்த்த வட மாகாண ஆளுநர், நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஆகியோர் உரையாற்றினார்கள். தொடர்ந்து சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் விழிப்புணர்வு நாடகமும் இடம்பெற்றது. நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான். யாழ்ப்பாணம் கிளிநொச்சி, முல்லைத்தீவு. மன்னார் வவுனியா மாவட்டங்களின் மாவட்டச் செயலர்கள். வடக்கு மாகாண தலைமைச் செயலர், அமைச்சின் செயலர்கள் திணைக்களத் தலைவர்கள், பொலிஸ் மற்றும் இராணுவத்தினர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.
(ஐ-56,106,35)


மன்னார்


யாழ்ப்பாணம்


வவுனியா


கிளிநொச்சி


# செஞ்சோலை வீதி சீரமைக்கப்படுகிறது

முல்லைத்தீவு, ஜீன் 26
மேடு பள்ளங்களுடனும் மாரிகாலங்களில் முழங்காலுக்கு மேல் தண்ணீர் தேங்கி நிற்பதுமான முல்லைத்தீவு செஞ்சோலை வீதி 20 லட்சம் ரூபாவில் சீரமைக்கப்படுகிறது.
வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் வன்னிக்குறோஸ் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளருமான சி.சிவமோகனின் நிதி ஒதுக்கீட்டில் வீதி சீரமைக்கப்படுகிறது.
முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு வள்ளிபுனம் இடைக்கட்டுக்குள வீதி (செஞ்சோலை வீதி) மக்கள் குடியிருப்புக்க ளும் போக்குவரத்துக்களும் அதிகமாக இருக்கும் வீதி. அதுமட்டுமன்றி, வரலாற்று நினைவு கொண்ட செஞ்சோலை மாணவர்கள், படுகொலைசெய்யப்பட்ட இடமும் ஆகும். (த)



# குடமுழுக்கு

கொடிகாமம்.ஜீன் 26
பனிப்புலம்அருள்மிகுசிறி முத்துமாரியம்பாள் ஆலயகுடமுழுக்கு வியாழக் கிழமை முற்பகல் 9.34 மணி தொடக்கம் 11.22 மணி வரையுள்ள சுபநேரத்தில் நடைபெறும்.
எண்ணெய் காப்பு சாத்தும்நிகழ்வுநேற்றுமுன்தினம் ஆரம்பமாகி இன்று புதன்கிழமை மாலை 4 மணிவரைநடைபெறும்.
குடமுழுக்கைத்தொடர்ந்து 12 நாள்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும் என்று ஆலயத்தினர் அறிவித்துள்ளனர். (ஐ)



கரைச்சிபிரதேசமாற்றுத்திறனாளிகள்அமைப்பின் கிராமிய மட்டக் குழுக்களுக்கு 145 கதிரைகள் வழங்கும் நிகழ்வும், 3 மாற்றுத்திறனாளிகளுக்கு ஊன்றுகோல் வழங்கும் நிகழ்வும் கிளிநொச்சி செல்வா நகரில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. வேள்ட்விசன்லங்காநிறுவனம்பிளாஸ்ரிக்கதிரைகளை அன்பளிப்பாகவழங்கியிருந்தது. (த-222)

# மாவட்டச்செயலரின் முயற்சியால் யாழ். மாவட்டத்துக்கு 2,500 வீடுகள்

## அமைச்சின் செயலர் சிவஞானசோதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 26

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு ஆயிரத்து 700 வீடுகள் கிடைக்க வேண்டிய நேரத்தில்யாழ்ப்பாணமாவட்டச்செயலர்நாகலிங்கம்வேதநாயகனின் துரிதமுயற்சியும்முறையானநியாயப்படுத்தல்கள்ஊடாக2ஆயிரத்து500வீடுகள் அமைக்கும் திட்டத்துக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இவ்வாறு பொருளாதார விவகாரங்கள், மீள்குடியமர்வு மற்றும் வடக்கு அபிவிருத்தி அமைச்சின் செயலர்வி.சிவஞானசோதிதெரிவித்தார்.

சித்தன்கேணி சிறிகணேசா மகா வித்தியாலயத்துக்கு 15 மில்லியன் ரூபாநிதி ஒதுக்கீட்டில் இருமாடிக் கட்டடத்துக்கான அடிக்கல்நடும்நிகழ்வுபாடசாலை அதிபர் பா.பாலசுப்பிரமணியம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

சண்டிலிப்பாய் மகாவித்தியாலய சரஸ்வதி ஆலய முதன்மைக் குருவும் வீணாகானகுருபீடாதிபதியுமான சிவசிறி சபா வாசுதேவக் குருக்கள் தலைமையில்அடிக்கல்நிகழ்வு, சிறப்புவழிபாடுநடைபெற்றன.

அதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அமைச்சின்செயலர்வி.சிவஞானசோதி மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாண மாவட்டச் செயலர் வேதநாயகன் மாவட்டத்தின் அபிவிருத்திக்காகதன்னைமுழுமையாகஅர்ப்பணித்துசேவையாற்றி வருகின்றார்.

பெருஞ்சேவையாளன், அவரின் விடாமுயற்சி, அர்ப்பணிப்பான முயற்சி காரணமாக மாவட்டத்துக்கு 2ஆயிரத்து 500 வீட்டுத் திட்டம் கிடைக்கின்றது.

இதனைவிட மீள்குடியேற்ற அமைச்சு ஊடாக 500 மில்லியன் ரூபா எமது அமைச்சின்ஊடாக 2ஆயிரத்து 450 மில்லியன் ரூபாவுக் கான கருத்திட்டங்கள்முன்னெடுக்கப்படுகின்றன.

இவ்வாறுமாவட்டத்துக்குச் சேவைசெய்யும்மாவட்டச் செயலருடன் இணைந்த வகையில்ஏனையஅதிகாரிகளும்முழுமையாகபங்கெடுத்துப் பணியாற்றினால் வளமிகு யாழ்ப்பாண மாவட்டத்தை குறித்த காலத்தில் கட்டியெழுப்பலாம். இந்த வரவு-செலவுத்திட்டத்தில்வரவை மிஞ்சியசெலவுகூடுதலாக காட்டப்படுகிறது. எனவே இந்த ஆண்டு வரவு-செலவுத்திட்டநிதியைமிகவிரைவாகப் பயன்படுத்தி பயனுள்ள கருத்திட்டங்களுக்கு செயலுருப் பெறவைப்பதே அனைவரினதும் முயற்சியாக இருக்க வேண்டும் - என்றார்.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன், மேலதிக மாவட்டச் செயலர் சு.முரளிதரன், திட்டப் பணிப்பாளர் திருமதி நிக்லஸ்பிள்ளை, பிரதேசசெயலர் திரும்தி பொ.பிறேமினி, உதவித்திட்டமிடல் பணிப்பாளர் ச.சிவதர்சினி, ஆசிரியர்கள்மற்றும் செயலக அதிகாரிகள் பலரும்கலந்துகொண்டுசிறப்பித்தனர். (த-50)

# வீதியில் பயணிக்கும் மக்களிடம் கத்தியுடன் வழிப்பறி தொடர்கிறது

## உரிய நடவடிக்கை எடுக்குமாறு கெருடாவில் மக்கள் கோரிக்கை

சாவகச்சேரி, ஜூன் 26

இரவு வேளைகளில் மது போதையில் காணப்படும் சிலர் வீதியில் வரும் பொதுமக்களிடம்கத்திகாட்டிஅச்சுறுத்தி பணம், அலைபேசி என்பனவற்றை அபகரித்துச் செல்கின்றனர் என்று சாவகச்சேரி கெருடாவில் பகுதிபொதுமக்கள்தெரிவித்தனர். அடிக்கடி இவ்வாறான வழிப்பறிகள் இடம் பெற்றுவருகின்றன.

இதுதொடர்பாகஉரியவர்களுக்குமுறையிட்டும்பயன் கிடைக்கவில்லையென்றும் அவர்கள் தெரிவித்தனர்.

சனநடமாட்டம்மிகக்குறைவாகக்காணப்படும்சாவகச்சேரி கனகன்புளியடி வீதி கெருடாவில் பகுதியில் இந்தச்சம்பவங்கள்தொடர்கின்றன.

கடந்த சனிக்கிழமையும் சாவகச்சேரியிலிருந்து சரசாலைக்கு ஈருருளியில் சென்ற முதியவரை வழிமறித்த கும்பல் கழுத்தில் கத்தியை வைத்து அச்சுறுத்தி அவரிடமிருந்த சிறுதொகைப்பணம்மற்றும்அலைபேசி ஆகியவற்றை அபகரித்துள்ளனர். வீட்டுக்குச் சென்றஅவர்அங்குள்ளவர்களைத் திரட்டிக் கொண்டு வந்தபோது வழிப்பறிக் கொள்ளையர் தலைமறைவாகிவிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-9)

# உரிமை கோரப்படாத வாகனங்கள் நீதிமன்றில்

சாவகச்சேரி, ஜூன் 26

கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் உரிமை கோரப்படாத நிலையில்காணப்பட்டபதிவுசெய்யப்படாதபுதிய உந்துருளியும் ஈருருளியும் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

கொடிகாமம் பகுதியில் குறித்த வாகனங்கள் கண்டெடுக்கப்பட்டுபொலிஸாரால்மீட்கப்பட்டுபொலிஸ்நிலையத்தில்வைக்கப்பட்டிருந்தன எனவும் இவற்றினை இதுவரை எவரும் உரிமை கோரி வராததால் நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளதெனவும்தெரிவித்தனர். (ஜ-9)



# இந்தியத்துணைதூதர் - தொண்டா யாழ்ப்பாணத்தில் நேற்று சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 26

யாழ்ப்பாண இந்திய துணைத்தூதரக கொன்சியூலர்எஸ்.பாலசந்திரனுக்கும் இலங்கைதொழிலாளர்காங்கிரஸின் தலைவரும்நாடாளுமன்றஉறுப்பினருமான ஆறுமுகன் தொண்டமானுக்கும் இடையில் சந்திப்பு இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் இந்திய துணைத்தூதரகத்தில்இந்தசந்திப்புநேற்றுஇடம்பெற்றது. சந்திப்பின்போது ஊவா மாகாண அமைச்சர் செந்தில் தொண்டமான், இலங்கைதொழிலாளர்காங்கிரசின் பிரதிப் பொதுச்செயலர் ஜீவன் தொண்டமான் ,கொட்டகலை பிரதேச சபை தலைவர் ராஜமனி பிரசாந்த், நோர்வூட்பிரதேசசபையின் தலைவர்குழந்தைரவிஉள்ளிட்டபலர் கலந்துகொண்டனர். (ஜ)

# தென்மராட்சியில் வீட்டுத்திட்டத்துக்கு மேலும் 135பேர்தெரிவு

தென்மராட்சி, ஜூன் 26

தென்மராட்சி பிரதேசத்தில் மேலும் 135பயனாளிகள்வீட்டுத்திட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்று மாவட்டச்செயலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் மீள்குடியமர்வு மறுவாழ்வு அமைச்சால் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு 5 ஆயிரம் வீடுகள் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுதென்மராட்சிபிரதேசசெயலகத்துக்கு300வீடுகள்வழங்கபயனாளிகளைத் தெரிவு செய்து அனுப்புமாறு அறிவிக்கப்பட்டிருந்தது.

அதன் பிரகாரம் 60 கிராம அலுவலர் பிரிவுகளிலும் 5 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் வீடின்றிக் காணப்படும் நிலையில் முன்னுரிமை அடிப்படையில்தெரிவுசெய்யப்பட்ட300பயனாளிகளின் பட்டியலைத் தயார் செய்து அனுப்பியிருந்தனர்.

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு வழங்கப்பட்ட 5 ஆயிரம் வீட்டுத் திட்டம் ஆயிரத்து500ஆகக்குறைக்கப்பட்டதையடுத்து தென்மராட்சி பிரதேசத்துக்கு 176 பயனாளிகள் தெரிவு செய்யுமாறு மீண்டும் அறிவிக்கப்பட்டிருந்தது.

அதன்பிரகாரம்பெண்தலைமைத்துவக் குடும்பம், சிறப்புத் தேவையுடையோர் குடும்பம், மறுவாழ்வு பெற்றோர் மற்றும் இந்தியா மற்றும் வன்னிப்பிரதேசத்திலிருந்துசொந்தஇடங்களில்மீளக்குடியமர்ந்தோர்ஆகியோரில் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 176 பயனாளிகளின் பட்டியல் அனுப்பப்பட்டன.

தற்போது மாவட்டச் செயலகத்தால் மேலும் 135 பயனாளிகளின் பெயர்கள் அங்கீகரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. பிரதேசத்தில் வீட்டுத் திட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை 311ஆக அதிகரித்துள்ளது. (ஜ-9)

# பெருந்திருவிழா

யாழ்ப்பாணம், ஜூன் 26

வியாபாரிமூலை அருள்மிகு சிறி பத்திரகாளி அம்பாள் சமேத ஆதிசிவ வீரபத்திர சுவாமி ஆலய பெருந்திருவிழா எதிர்வரும்29ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 10 நாள்கள் திருவிழா நடைபெறும். எதிர்வரும்7ஆம்திகதிமுற்பகல்9 மணிக்கு தேர்த்திருவிழாவும், 8 ஆம் திகதி தீத்தத் திருவிழாவும் நடைபெறும் என்று ஆலயத்தினர் அறிவித்துள்ளனர். (ஜ)

# மரம்கடத்திய குற்றச்சாட்டில் மூவருக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஜூன் 26

மரக் கடத்தலில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட மூவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

இந்த மரக்கடத்தல் சம்பவம் வவுனியா நயினாமடுவில் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. புளியங்குளம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து குறித்த பகுதிக்கு சென்ற பொலிஸார்.

சட்டவிரோதமான முறையில்பெறுமதிமிக்க முதிரை குற்றிகளை மகேந்திரா கப் ரக வாகனத்தில் எடுத்துச் செல்வதை அவதானித்தனர். உடனடியாக பொலிஸார் வாகனத்தை வழிமறிக்க முற்பட்டபோது வாகனத்தைநிறுத்தாதுசாரதிவேகமாகசெலுத்தியுள்ளார். வாகனத்தை துரத்திச் சென்ற பொலிஸார் சன்னாசி பரந்தன் பகுதியில் வழிமறித்த போது இருவர் தப்பித்து சென்றதுடன் வாகனத்தின் சாரதி மற்றும் உதவியாளர்கள் இருவரையும் கைதுசெய்ததுடன் முதிரைக் குற்றிகளையும் கைப்பற்றினர். சந்தேக நபர்களை வவுனியாநீதிமன்றத்தில்நேற்றுமுற்படுத்தியபோது14நாள்கள்விளக்கமறியலில்வைக்குமாறு நீதிவானால் உத்தரவிடப்பட்டுள்ளது.

தப்பிச் சென்ற இருவரையும் கைது செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் புளியங்குளம் பொலிஸார் தெரிவித்தனர். (ஜ)



# வவு. றம்பவெட்டி குளத்திலும் ஏராளம் மீன்கள் இறந்து மிதப்பு

## இதுவரை 3 குளங்களில் மீன்கள் அநியாயமாக இறப்பு

வவுனியா, ஜூன் 26

வவுனியாவில்ஏற்கனவேஇரண்டு குளங்களில் மீன்கள் இறந்து மிதந்த நிலையில், தற்போது றம்ப வெட்டி குளத்தில் ஏராளம் மீன்கள் இறந்து சில நாள்களாக மிதக்கின்றன.





குளத்திலிருந்து அதிகளவு தண்ணீர் சிறுபோகபயிர்களுக்குஇறைக்கப்பட்டுள்ளமையே அடிப்படைக் காரணம் என்று அங்குள்ளவர்கள் தெரிவித்தனர்.

மீன்கள் இறக்கின்றமையால் அதன் அருகாகச் செல்ல முடியாதவாறு துர்நாற்றம்வீசுகிறது. அதனால்அதற்கருகாகப் பயணிக்கும் பாடசாலை மாணவர்கள்பெரிதும்அசௌகரியங்களுக்கு ஆளாகின்றனர். வவுனியா றம்பவெட்டிக்குளத்தின் கீழ்விதைக்கப்பட்டுள்ள 40 ஏக்கர் சிறுபோக விவசாயநிலங்களுக்கு அதிகளவிலான நீரை பயன்படுத்தியமையால் குளத்ததுத் தண்ணீர் வற்றியுள்ளது என்றும் அங்குள்ளவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனுடன்தொடர்புபட்டுள்ள அதிகாரிகள்இந்தப்பிரச்சினைக்குஉரியநடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றனர்.

சில வாரங்களுக்கு முன்னர் வவுனியாமூனாமடுக்குளத்துத்தண்ணீர் வற்றி மீன்கள் இறந்தன. அங்கு சென்று ஆராய்ந்திருந்த வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரிப் பணிமனையின் தலைமைப் பொது சுகாதாரப் பரிசோதகர் எஸ்.தியாகலிங்கம், "வவுனியாவில் ஏற்பட்டுள்ள வறட்சி மற்றும் சிறுபோகத்துக்கு அதிக தண்ணீரை இறைத்ததால்தான் குளத்துத் தண்ணீர்வற்றி வெப்பத்தால் அது வரையறையை மீறிச் சூடாகி அந்தச் சூட்டினால் மீன்கள் இறந்துள்ளன" என்று தெரிவித்திருந்தார். வவுனியாவில் அண்மைய சம்பவத்துடன் இது வரை 3 குளங்களில் தண்ணீர் வற்றி மீன்கள்இறந்துள்ளனஎன்றுஅங்குள்ளவர்கள் தெரிவிக்கின்றனர். (த)

# எரிந்த உடற்பாகங்கள் தனது கணவருடையதா?

## மனைவி சந்தேகம் தெரிவித்ததால் பொலிஸார் விசாரணையில்



வவுனியா. ஜூன் 26

வவுனியாவில் கடந்த சனிக்கிழமை எரிந்த நிலையில் மீட்கப்பட்ட உடற்பாகங்கள் தனது கணவருடையதாக இருக்கலாம் என்று, சில வாரங்களுக்கு முன்னர் காணாமற்போனவரின் மனைவி பொலிஸாரிடம் சந்தேகம் தெரிவித்துள்ளார் அது பற்றி விசாரணை நடக்கிறது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

புளியங்குளம் பெரியமடு காட்டுப்பகுதியில் எரிந்த நிலையில் உடற்பாகங்கள் கண்டெடுக்கப்பட்டிருந்தன.

வவுனியா பண்டாரிகுளம் பகுதியில் வசித்து வந்த இளஞ்சிங்கம் தேவராசா (வயது - 74) கடந்த மாதம் 8ஆம் திகதியிலிருந்து காணாமல் போயுள்ளார். அது பற்றி அவரது மனைவி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்திருந்தார்.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் இவரின் 40வயதுடைய மகள் வெளிநாடு ஒன்றில் உயிரிழந்திருந்தார். அதனால் மனமுடைந்த நிலையிலும் விரக்தியடைந்த நிலையிலும் காணப்பட்டுள்ளார் என்றும் பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில் கடந்த 8ஆம் திகதி மகளின் பிறந்ததினம். அன்று குறித்த வயோதிபர் வீட்டிலிருந்து சாரம் அணிந்து வெளியேறியுள்ளார் என்பது வீட்டில் பொருத்தப்பட்ட மறைகாணியில் பதிவாகியுள்ளது. அன்றிலிருந்து அவர் காணாமற்போய்விட்டார். இந்த நிலையிலேயே, மீட்கப்பட்ட எரிந்த உடற்பாகங்கள் தனது கணவருடையதாக இருக்கலாம் என்று மனைவி சந்தேகம் தெரிவித்துள்ளார். விசாரணை தொடர்கிறது என்று பொலிஸார் தெரிவித்தனர். (த)

# நிலத்தடி நீர் உறிஞ்சல் பற்றி ஆராயக் கூட்டம்

முல்லைத்தீவு. ஜூன் 26

முல்லைத்தீவில் படையினர் நிலத்தடி நீரினை அதிகளவில் உறுஞ்சுகின்றனர் என்ற விடயம் பற்றி ஆராயும் கூட்டம் ஒன்றைக் கூட்டுமாறு வடக்கு மாகாண ஆளுநர் இவ்வாறு பணித்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் இது பற்றிய விடயம் எடுத்துரைக்கப்பட்டது.

இது தொடர்பில் படைத்தரப்பினருடனான கூட்டத்தைக் கூட்டுமாறு கரைதுறைப்பற்று பிரதேச செயலருக்கு ஆளுநர் பணித்துள்ளார். கரைதுறைப் பற்று பிரதேசத்தில் நீண்டகாலமாக படையினர் நிலத்தடி நீரை உறுஞ்சும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளார்கள். இது தொடர்பில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்பட்டிருந்தனர். (த-ரி3)



# வள்ளுவர் முன்பள்ளியில் மரநடுகை சிறப்புற்றது

மன்னாகண்டல் வள்ளுவர் முன்பள்ளியில் மரநடுகை நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

மன்னாகண்டல் மணல் அகழ்வு அனுமதிப்பத்திர உரிமையாளர் சங்கம், புவிச்சரிதவியல் அகழ்வு சுரங்கங்கள் பணியக ஏற்பாட்டில் "நாட்டுக்காக ஒன்றிணைவோம்" என்ற தலைப்பில் இது நடைபெற்றது.

விருந்தினர்களாக பிராந்திய மணல்அகழ்வு பொறியியலாளர் மயூரன், மணல்அகற்றல் பொறியியலாளர் றொசான், மணல் அகழ்வு வெளிக்கள அலுவலர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

மர நடுகையைத் தொடர்ந்து மன்னாகண்டல் வள்ளுவர் முன்பள்ளி வசந்தபுரம் முன்பள்ளிகளின் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலக முகாமைத்துவ அலுவலர், மணல் அகழ்வு பிரிவு உரிமையாளர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள் மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (த-500)

# ஒனெலாவிடம் நேற்று வாக்குமூலம்

அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் மகள் ஒனெலா கருணாநாயக்க நேற்றுக் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் 6 மணி நேரம் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

மத்திய வங்கி பிணைமுறி மோசடி விவகாரம் தொடர்பாக விசாரணை செய்த அரச தலைவர் ஆணைக்குழுவில் பொய் சாட்சியம் வழங்கினார் என்று அவர் மீது குற்றச்சாட்டு முன் வைக்கப்பட்டிருந்தது.

அது தொடர்பாக வாக்குமூலம் பெறுவதற்காக அவர் நேற்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலை யாகியிருந்தார். (எ)



மாங்குளம் பிரதேச மருத்துவ மனைக்கு நேற்று முன்தினம் தீடீர் பயணம் மேற்கொண்ட வடக்கு மாகாண ஆளுநர் மருத்துவ மனையின் நிலைமைகள் குறித்து ஆராய்ந்தார். இந்த மருத்துவ மனையில் கடமை புரியும் ஊழியர்கள் மருத்துவ மனையை மிகவும் தூய்மையாக வைத்திருப்பதனை பாராட்டிய ஆளுநர், தொடர்ச்சியாக இதனை பேணுமாறும் மருத்துவ மனை நிர்வாகத்தினரிடம் கேட்டுக் கொண்டார். (ஐ-7)

# சிறப்புத் தேவையுடையோருக்கு ஆளுமைத் திறன் போட்டிகள்

கிளிநொச்சி, ஜூன் 26

கிளிநொச்சியில் சிறப்புத் தேவையுடையவர்களுக்கான மாவட்ட மட்ட காலாசாரப் போட்டிகள் கடந்த 21ஆம் திகதி கிளிநொச்சியில் நடைபெற்றன. தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகமும், கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகமும் இணைந்து போட்டிகளை வருடாந்தம் நடத்தி வருகின்றன.

புத்தாக்க நடனம் (தனி ஆண், பெண்), அறிவிப்பாளர், பேச்சு, இளம் பாடகர், கிராமியப் பாடல் ஆகிய போட்டிகளில் 15 வயதுக்கும் 29 வயதுக்கும் இடைப்பட்டோர் இவற்றில் பங்குபற்றி னர்.

மாவட்ட மட்டப் போட்டிகளில் வெற்றி பெறுவோர் மாகாண மட்டப் போட்டிகளில் பங்குபற்றி அதில் முதல் 3 இடங்களைப் பெறுவோர் தேசிய மட்டப் போட்டிகளில் பங்குபற்றுவார்கள் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த)





# வவு.பழைய பேருந்து நிலையத்தில் இ.போ.ச தனியார் இணை சேவை

வவுனியா, ஜூன் 26

வவுனியா பழைய பேருந்து நிலையத்தில் நேற்றுமுன்தினம் தொடக்கம் தனியார் பேருந்துச்சேவைகளும் இ.போ.ச. பேருந்துகளும் இணைந்து சேவையாற்றி வருகின்றன.

கடந்த புதன்கிழமை வடக்கு மாகாண ஆளுநர்சுரேன்ராகவனின்உத்தரவுக்கு அமைவாக பழைய பேருந்து நிலையத்தில் உள்ளூர் பேருந்து சேவைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்று ஆளுநர் பணித்திருந்தார்.

அதன்படி புதிய பேருந்து நிலையத்திலிருந்து சேவைகளை மேற்கொள்ளும் இ.போ.ச மற்றும் தனியார் உள்ளூர் பேருந்துகள் நேற்றுமுன்தினம் தொடக்கம் பழைய பேருந்து நிலையத்தினூடாக தமது சேவைகளை மேற்கொண்டு வருகின்றன. பழைய பேருந்து நிலையத்தினூடாக பொதுமக்கள் தமது பயணங்களையும் மேற்கொண்டு வருவதால் பழைய பேருந்து நிலைய கடைக்காரர்களுக்கும் பயனுள்ளதாக அமைந்துள்ளது. (த)

## முள்ளியவளை பெருந்தெரு வீதி சீரமைப்பு வேலைகள் ஆரம்பம்

முல்லைத்தீவு, ஜூன் 26

முல்லைத்தீவு முள்ளியவளை பெருந்தெரு வீதியின், இரண்டாம் கட்ட சீரமைப்பு வேலைகள் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டன. வீதியின் முதற்கட்ட சீரமைப்பு கடந்த ஓகஸ்ட்டில் நடைபெற்றது.

இதற்கென்று 35மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதில் 15மில்லியன் ரூபாவில் ஒரு பகுதி வீதி முதற்கட்டமாக சீரமைக்கப்பட்ட நிலையிலேயே, இன்றைய தினம் இரண்டாம் கட்ட மறுசீரமைப்பு வேலைகள் தொடங்கியுள்ளன.

வீதி சீரமைப்பு வேலைகளை வடக்கு மாகாண முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன், பார்வையிட்டார். கரைதுறைப்பற்றுப் பிரதேசசபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன் ஆகியோர் பார்வையிட்டனர். (து-222)

## அனுமதி இன்றி மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் 6 பேர் கைது

கிளிநொச்சி,ஜூன் 26

கடந்த ஐந்து நாட்களில் அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றினர் என்ற குற்றச்சாட்டில் 6டிப்பர்கள் கைப்பற்றப்பட்டதுடன் அதன் சாரதிகளும் கைது செய்யப்பட்டனர் என்று பளை பொலிஸ் நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

இயக்கச்சிபகுதியில் 2டிப்பர் வாகனங்களும், முகமாலை பகுதியில் 2 டிப்பர் வாகனங்களும், எழுதுமட்டுவாள் பொலிஸ் பரிசோதனை நிலையம் மற்றும் தர்மக்கேணிபோன்றஇடங்களில் இருந்து தலா ஒரு டிப்பர் வாகனமும் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சாரதிகளுக்குமேலதிகவிசாரணையின் பின்னர் பொலிஸ் பிணை வழங்கப்பட்டுள்ளதுடன் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ-6)

## "ஆற்றல்களின் வெளிப்பாடுகள்" சித்திர ஆக்கக் கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஜூன் 26

கோப்பாய் மகா வித்தியாலய சிறப்புக் கல்விப் பிரிவு மாணவர்களின் "ஆற்றல்களின் வெளிப்பாடுகள்" சித்திர ஆக்கக் கண்காட்சி இன்று புதன்கிழமை இடம்பெறவுள்ளது.

வித்தியாலய சிறப்புக் கல்வி அலகில் முற்பகல் 9.30 மணிக்கு பாடசாலை அதிபர் த.ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண வலயக் கல்வி முகாமைத்துவப் பணிப்பாளர் த.பாலராஜ்,சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண வலய சிறப்புக் கல்விப்பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளர் ப.சுரேந்திரன் கலந்துகொள்ளவுள்ளார். (ஐ)

## பெருந்திருவிழா

யாழ்ப்பாணம், ஜூன் 26

கோண்டாவில் கிழக்கு ஆசிமட அரசடி விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 29 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து எதிர்வரும் 7 ஆம் திகதி தேர்த்திருவிழாவும்,8 ஆம் திகதி தீத்தத்திருவிழாவும் நடைபெறும் என்று ஆலய நம்பிக்கை பொறுப்பாளர் சபை அறிவித்துள்ளது. (ஐ)

# தமிழ், முஸ்லிம்களிடையே தேரர்கள் நுழைந்துவிட்டனர்

### போகப்போகத் தெரியும் அதன் பயன்கள்
### சரவணபவன் எம்.பி. கடும் எச்சரிக்கை

கொடிகாமம், ஜூன் 26

அரசதலைவரோ தலைமை அமைச்சரோ இங்கு முடிவெடுக்கக் கூடிய நிலையில் இல்லை. எல்லாமே தேரர்கள் தான். தெற்கிலுள்ள இரண்டு பௌத்த பீடங்களே ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்திகளாக இருக்கின்றன. தேரர்கள் வந்து தமிழர்கள் முஸ்லிம்களுக்கிடையில் உள் நுழைந்துவிட்டார்கள். இனிமேல் போகப்போகத் தெரியும் அதன் பயன்கள்.





இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார். தென்மராட்சி கைதடி உவரிமாதர் கிராம அபிவிருத்திச் சங்க வருடாந்த விளையாட்டு விழா கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. அதில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்பு புதிதாகவேதான் இருக்கப் போகிறது. அதற்குத் தவணை கொடுத்த தலைமைஅமைச்சர் தற்போது அதிலிருந்து பின் வாங்குகிறார் என்பது மிகத் தெளிவாகத் தெரிகின்றது.

### தேரர்களிடம் ஒப்படைப்பு

கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்த முஸ்லிம் சமூகம் உடன்பட மறுக்கிறது. பேச்சு நடத்தியபோதும் வெற்றியளிக்கவில்லை. எனினும், தமிழர்களும் முஸ்லிம்களும் பேசித் தீர்த்துக் கொள்ளக் கூடிய விடயம் தேரர்களின் கைகளில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நாம் அவர்களை உள்ளே வரவிட்டுவிட்டோம். இனி எவரெல்லாம் வரப் போகிறார்கள் என்று முஸ்லிம் மக்கள் சிந்திக்க வேண்டும்.

### அரசு முழிக்கின்றது

நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரரின் உணவு ஒறுப்பில் பலர் ஆதரவாக இணைகின்றனர். அதன் பிறகுதான் அரசு முழிக்கின்றது. அதற்கு பின்னர் எத்தனையோ விசாரணைகளைத் தொடங்குகின்றது. அதற்கு பிறகுதான் முஸ்லிம் அமைச்சர்கள் எல்லோரும் தங்களுடைய பதவியைத் துறக்க வேண்டி வந்தது. முஸ்லிம் மக்கள் ஒன்றை நன்றாக விளங்கிக் கொள்ள வேண்டும். வடக்கு - கிழக்கு இணைப்பு மூலம் நாங்கள் ஒற்றுமையாக இருந்து செயற்படக்கூடிய சகலதையும் நீங்கள் தான் தரவில்லை. நீங்கள் தான் செய்ய வேண்டும். கிழக்கு மாகாணத்தில் நீங்கள் இருந்தால் 40 வீதமாக இருப்பீர்கள். வடக்கு கிழக்கு இணைந்தால் அது 17 வீதமாகும். ஆனால் முஸ்லிம் அலகு என்று ஒன்றைக் கொண்டு வரமுடியும். இது இன்று நேற்று அல்ல, தந்தை செல்வா காலத்தில் தொடங்கப்பட்டது. நாங்களும் முஸ்லிம்களும் ஒற்றுமையாக இருப்போமாக இருந்தால் பெரும்பான்மை இனத்திடம் நாங்கள் எதையும் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்படாது.

### அணுகுமுறை சரியாகவில்லை

ஒன்று பட்ட இலங்கைக்குள் நீங்களும் உங்களைஆளலாம் நாங்களும் எங்களை ஆளலாம். ஆனால் சிந்திக்கவில்லை. அங்கே ஒவ்வொருவரும் தங்களுக்கு தங்களுக்கென்று கட்சிகளைப் பலப்படுத்துவதை நோக்குகின்றார்களேயொழிய பிரச்சினைகளைச் சரியான முறையில் அணுகவில்லை. அங்கே உரிமைப் பிரச்சினை என்பதை தமிழர்கள் தான் கையிலெடுத்தார்கள்.

### மைத்திரிபால சிறிசேன கண்டுகொள்ளவேயில்லை

நாங்கள் மிக நிதானமாக ஒவ்வொரு அடியையும் வைக்கக் கூடியதாக இருக்கும் தற்சமயம், ஞானசார தேரர் பொது மன்னிப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. எங்களுடைய பிள்ளை களான அரசியல் கைதிகள் வருடங்களாக சிறைகளில் உள்ளனர். அவர்களுக்குப் பொது மன்னிப்பு அளிக்கும்படி அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் எத்தனையோ முறை கேட்டோம். ஆனால் அதைப்பற்றி அவர் கரிசனை கொள்ளவில்லை.

### பிரிந்திருக்கவேண்டும் என்பதே அவர்களின் விருப்பு

இந்த நாட்டில் நீதிமன்றத்தை சுயாதீனமாக இயங்கவிடுகின்ற மாதிரியும் தெரியவில்லை. தமிழர்களுடைய பிரச்சினையைத் தீர்க்கப் போவதுமில்லை. முஸ்லிம்களுடைய பிரச்சினையைத் தீர்க்கப் போவதுமில்லை. அதை இன்னும் புரையோடவிடு கின்றார்கள். இந்த அரசோ அல்லது எந்த அரசு இருந்தாலும் சரி. முஸ்லிம்களும் தமிழர்களும் என்றும் பிரிந்து நிற்க வேண்டும் என்பதை மிகத் தந்திரமாக பெரும்பான்மையினம் செய்து கொண்டிருக்கிறது.

### பிரச்சினை தீராது

எத்தனையோ தலைவர்கள் வந்து போய்விட்டார்கள். இலங்கைக்கு உலகளாவிய ரீதியில் எங்கள் பிரச்சினை எடுக்கப்பட்டது. எதையும் பெரும்பான்மை அரசு மதிக்கவில்லை. அவர்களுக்கு இதைப்பற்றி அக்கறையில்லை. எனவேதான் நான் சொல்கிறேன். இந்த நாட்டில் பிரச்சினை தீரப்போவதில்லை.

இந்த அரசு பிரச்சினைகளுக்குள் தன்னைக் கொண்டு செல்ல விரும்பு கின்றது. அவர்கள் அதைப் பழகிவிட்டார்கள். எது ஆபத்தோ அதை வரவழைத்து விட்டோம் - என்றார். (து-159)

# ஆழ்துளைக் கிணறுகளால் நிலத்தடிநீர் பாதிப்படைகிறது

### சாவகச்சேரிப் பிரதேச சபை உறுப்பினர் கே.குகானந்தன் சுட்டிக்காட்டல்

கொடிகாமம், ஜூன் 26

ஆழ்துளைக் கிணறுகளை அமைப்பதனால் எமது நிலத்தடி நன்னீர் வளம் விரைவாக பாதிப்படைகிறது. இதனால் எமது எதிர்கால சந்ததியின் குடிதண்ணீர் பிரச்சினை பெரும் சவாலாக அமைந்துவிடும். எனவே இது தொடர்பில் அனைவரும் கவனம் செலுத்த வேண்டும். இவ்வாறு சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் கே.குகானந்தன் தெரிவித்தார்.

சாவகச்சேரி பிரதேச சபையின் சபை அமர்வு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது. இதன்போதே உறுப்பினர் முன்மொழிவைச் சமர்ப்பித்து உரையாற்றினார்.

குறித்த முன்மொழிவு தொடர்பில் தவிசாளர் கருத்துத் தெரிவிக்கையில்,

'தண்ணீர் என்பது நாட்டில் ஒரு பெரிய பிரச்சினை. இன்னும் 20 ஆண்டுகளில் ஒரு லீற்றர் பெற்றோலுக்கு வழங்கும் விலை தண்ணீருக்கு வழங்கும் நிலை ஏற்படும். தண்ணீர் வழங்கல் சபையிடம் அனுமதி பெற்றுத்தான் சபை வளாகத்தில் ஆழ்துளைக் கிணறு



அமைக்கப்பட்டது.

அனுமதியில்லாமல் ஆழ்துளைக் கிணறு அடிப்பதை கண்காணிக்க வேண்டும். குழாய் அடிக்கும் வாகனம் சென்றால் அதனை விசாரிக்க வேண்டும். ஆழ்துளைக் கிணறு அடிப்பவர்கள் பிரதேச சபையில் அனுமதி பெற்று அடிக்க வேண்டும். அனுமதியின்றி குழாய்க் கிணறு அடிப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்படும்' எனக் கூறினார். (ஐ-159)

# மாகாண சபைகளை ஒழிப்பது இனவாதிகளுக்கு தீனிபோடும்

## கிழக்கு முன்னாள் முதலமைச்சர் நஸீர் கண்டனம்

கொழும்பு, ஜுன் 26

‘இனவாதத்தைக் கக்குவதும் அதற்கிசைவான கருத்துக்களை முன்வைப்பதும் சமீப காலத்தில் உச்சம் பெற்று வருகின்றன. இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் மாகாண சபைகளை இல்லாமல் செய்ய வேண்டும் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டுள்ளது. இதனை முன்னாள் அமைச்சரும் பொருளாதார நிபுணருமான மிலிந்த மொறகொட முன்வைத்துள்ளார். மிகவும் கண்டிக்கத்தக்க இந்தக் கருத்தானாது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதற்குச் சமனானது.’



இவ்வாறு தெரிவித்துள்ளார் முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சர் நஸீர் அஹமட்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது:

‘சிறுபான்மை மக்களின் உரிமைக்கான போராட்ட விருப்பங்களின் பெறுபேறாக மாகாண சபை முறைமை அறிமுகம் செய்யப்பட்டது. இதனை சிறுபான்மை மக்கள் முற்று முழுதாக ஏற்றுக்கொள்ளாதபோதும் நாட்டின் அரசமைப்பில் அங்கீகரிக்கப்பட்ட சட்ட திருத்தமாக இது உருவாக்கப்பட்டமையால் சிறுபான்மை சமூகங்கள் தத்தமது ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்க இதனைப் பற்றிப் பிடிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். எனினும், பல்லாண்டுகளாக இந்த முறைமையினூடாக வழங்கப்பட்ட அதிகாரங்கள் முழுமையாக நடைமுறைப்படுத்த இடமளிக்கப்படவில்லை.

குறிப்பாக மூன்று விடயங்களை நாம் கருத்தில்கொள்வோமாயின் முதலாவது காணி, பொலிஸ் அதிகாரங்கள் குறித்து சொல்லப்பட்ட விடயங்கள் அமுலாக்கம் செய்யப்படாமல் மறுக்கப்பட்டுள்ளன. இரண்டாவது, அமுல்படுத்தப்படும் செயற்றிட்டங்களுக்கு உரிய நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்படுவதில் நெருக்கடிகள் நிலவுகின்றன. அடிப்படைச் செலவு களுக்கான நிதிகள் மற்றும்புதிய முதலீட்டுத்திட்டங்களுக்கான நிதிப்பங்களிப்புகள் பெறுவதில் கஷ்டங்கள் எதிர்நோக்கப்படுகின்றன. மூன்றாவது, எந்த வொரு பணியை மேற்கொள்ள மத்திய அரசின் அனுமதியைப் பெறவேண்டிய கட்டமைப்புகளே காணப்படுகின்றன.

இத்தகைய இடர்பாடுகளுக்கு மத்தியில் தொடர்ந்து போராடியே நாம் எமது பணிகளை கிழக்கு மாகாண சபையில் முன்னெடுத்து வந்தோம். இந்தநிலையே மாகாண சபை முறைமையில் உள்ளன. இந்த நிலையில், மாகாண சபை முறைமையை இல்லாது ஒழிக்க வேண்டும் என முன்னாள் அமைச்சர் மிலிந்த மொறகொட கருத்துப் பகிர்ந்துள்ளமை அவர் எந்த எண்ணத்தை மனதில்கொண்டு இப்படிச் சொல்ல முற்பட்டுள்ளார் என்பதை சிந்திக்க வைக்கின்றது.


தற்போது நாட்டில் நிலவும் முரண்பாட்டு நிலமைகளில் இன, மதவாத சக்திகளுக்குத் தீனிபோடும் அம்சமாக இந்தக்கூற்று அமைந்திருக்கின்றது. இவரதுஇந்தக் கருத்தை வெள்ளையானை கதையாகவே நாம் நோக்க வேண்டியுள்ளது.

13ஆவது திருத்தச் சட்டமூலத்தின் ஊடாகக் கொண்டு வரப்பட்ட இந்த முறைமையை ஆதாரமாகக்கொண்டே நாட்டிலுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று ஆட்சிப்பீட மேறும் அரசுகள் உத்தரவாதம் அளித்து வருகின்றன. 13 - 13 பிளஸ் என கடந்த காலங்களில் உத்தரவாதங்கள் அளிக்கப்பட்டமையை நாம் மறந்துவிட முடியாது.

இந்த உத்தரவாதங்கள் யாவும் காலா காலத்தில் காற்றில் கலந்துபோன நிலையில் சட்ட ஆதாரமாக இருக்கின்ற13ஆவது சட்ட திருத்தை முழுமையாக வழிநடத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் எனச் சிறுபான்மை சமூகங்கள் எதிர்பார்த்திருக்கும் நிலையில் மாகாண சபைகளைக் கலைக்க வேண்டும் எனக் கூறுவதும் மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் அவற்றை தள்ளிப் போகச் செய்திருப்பதும் சிந்திக்க வைக்கின்றது’ - என்றுள்ளது. (ம-22)

# ஹிஸ்புல்லாபற்றி கதைப்பவர்கள் நாளை அவருடன் வாக்குக்கேட்பர்

## கூட்டமைப்பின் சிறிநேசன் எம்.பி. தெரிவிக்கிறார்



கொக்கட்டிச்சோலை,ஜுன்26

முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லா பற்றி கூறுபவர்கள் நாளை அவரின் கட்சியுடன் இணைந்து வாக்குக் கேட்க வருவார்கள். அவர்களின் நாடகங்கள் வெளிச்சத்துக்கு வரும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் தெரிவித்தார்.

தமிழ் மக்களின் வாக்குகளால்தான் முன்னாள் ஆளுநர் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார் என்றும் அவர் கூறினார்.

கொக்கட்டிச்சோலை ஈஸ்வரா விளையாட்டுக்கழகம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. அதில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தப்பான கணிப்புக்கள், தவறான முடிவுகள் சில விசமிகளால் பரப்பப்படுவதுண்டு. அரசியல் காழ்ப்புணர்ச்சிகள் காரணமாக சிலர் சில வேளைகளில் தவறாகப் புரிந்துகொள்வதும் உண்டு. வெளிப்படையாக உரையாடுகின்ற, கையாளுகின்ற போது உண்மைகளை விளங்கிக்கொள்ளலாம்.

அரசியல் போட்டி, குரோதம், காழ்ப்புணர்வுகள் காரணமாக எமது கட்சியில் இருந்து பாய்ந்து சென்றவர்கள் தமது வாக்கு வங்கிகளை தக்க வைத்துக் கொள்வதற்காக பொய்யான, புரட்டான தகவல்களை பரப்பி வருகின்றார்கள்.

மிகவும் கடுமையான பேரினவாத போக்குடையவர்களோடு கைகளைக் கோர்த்துக்கொண்டு, தமிழ் மக்களின் நலன்களைப் பேணுவதைப்போன்று பா்சாங்கான செயற்பாடுகளை சிலர் செய்துகொண்டிருக்கின்றனர்.

அரசியல் சாசனம் பற்றிய விடயத்தைத் தீர்த்து ்வைப்பதற்கு முன்பாக நாடாளுமன்றத்தைக் குழப்பியடித்து சதிமூலமாக ஆட்சியைக் கைப்பற்றியவர்களுடன் சேர்ந்து அந்த சலுகைகளுக்காக இணைந்தவர்கள் தமிழ்மக்களின் தேவைகளை, உரிமைகளை பெற்றுக்கொள்வதற்கு எந்த வகையிலும் லாயக்கற்றவர்கள்.

சிலரை சில நாள்களில் ஏமாற்றலாம். பலரை பல நாள்களில் ஏமாற்றலாம், எல்லோரையும் எல்லா நாள்களும்ஏமாற்றிவிட முடியாது. வெறுமனே ஆக்ரோசமான, வெறித்தனமான கருத்துக்களால் எதனையும் சாதிக்க முடியாது. சமயோசிதமாகவும், சாதுரியமாகவும், சாணக்கியமாகவும் செயற்படுவதன் மூலம் தான் எமது செயற்பாடுகளில் வெற்றி காணமுடியும்.

இன்றொரு கட்சி, நாளையொருகட்சி, நாளைமறுநாளொரு கட்சியென, கட்சிகளைவிட்டு கொள்கையில்லாமல் மாறித் திரிபவர்கள் வெறுமனே உணர்ச்சிபூர்வமான கருத்துக்களை கூறி ஏமாற்றி, சுகபோகங்களை அனுபவிப்பார்களே தவிர, பேரினவாதப் போக்குடைய அமைப்புக்களுடன் கைகோர்த்துக் கொண்டு தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கின்றோம் என்று கூறுவதெல்லாம் பொய்க் கருத்துக்கள் - என்றார். (ம-த)

# கல்முனையைப் பாதுகாப்பது முஸ்லிம் சமூகத்தின் கடமை

## யஹ்யாகான் வலியுறுத்தல்



கொழும்பு, ஜுன் 26

‘கல்முனை முஸ்லிம்களின் தலைநகர். அதனைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இலங்கைவாழ் ஒவ்வொரு முஸ்லிமுக்கும் இருக்கவேண்டும். குழுக்களை அமைப்பதால் மட்டும் மக்களின் தேவைகளை நிவர்த்திக்க முடியாது.’

இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினரும் சமூக சிந்தனையாளருமான ஏ.சி.யஹ்யாகான் ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

‘கல்முனை வடக்கு பிரதேச செயலகம்என்றகோரிக்கையை முன்னிறுத்தி தமிழ்ச் சகோதரர்கள் முன்னெடுத்திருந்த போராட்டம் அவர்களுக்கான பிரதேச செயலகத்தைப் பெறுவது என்பதைவிட அடையாளமற்று இருந்த சில அரசியல்வாதிகள் தங்களது முகவரிகளைப் புதுப்பிக்கும் நிகழ்வாகும்’ எனவும் அந்த அறிக்கையில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

‘கல்முனை வடக்கு பிரதே சத்துக்கு செயலகம் அவசியம் என்று தமிழ் மக்கள் கருதினால் துறவிகளினதும் அரசியல் வாதிகளினதும் அட்டவணைகளுக்குஅடிபணிந்துவிடாதுசிவில் சமூகத் தலைவர்கள் பேசி சிறந்த முடிவுக்கு வரமுடியும்.

மறுபுறம் கல்முனை விடயத்துக்குத் தீர்வு ஒன்றைப் பெற்றுக்கொடுக்கப் பல்வேறு எத்தனிப்புக்கள் எடுக்கப்படுகின்ற இந்தச் சந்தர்ப்பத்தில் முப்பது வருடங்களாக உள்ளூராட்சி சபைக் கோரிக்கையை முன்னிறுத்திப்போராடிவரும்சாய்ந்தமருது மக்களின் கோரிக்கையும் கிடப்பில் போடப்பட்டுள்ளது.

இந்த மக்களினது பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டன. அவற்றுக்கும் என்ன நடந்தது என்று புரியவில்லை. அந்த மக்களின் கோரிக்கையும் சமாந்தரமாக தீர்க்கப்பட வேண்டும்’ - என்றுள்ளது. (ம-22)

# பன்னாட்டு மதிப்பை பாதுகாக்கவில்லை அரச தலைவர்

## ராஜித விளாசல்

கொழும்பு, ஜுன் 26

தற்போது கஜகஸ்தான், தஜகிஸ்தான் போன்ற நாடுகளில் இருந்து மட்டுமே அரசதலைவருக்கு அழைப்பு விடுக்கப்படு கிறது என்று தெரிவித்தார் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன.

மகிந்த ராஜபக்சவின் காலத்தில் இலங்கைக்கு வருகைத் தந்தவர்கள் மிகவும் மோசமான அரசியல் தலைவர்களைப் போலவே 32 மனைவிகளையுடைய அரச தலைவர்களும் இலங்கைக்கு தற்போது வருகைத் தந்துள்ளனர். ஜீ7 மாநாட்டில் உலகத் தலைவர்கள் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு வழங்கியுள்ள மதிப்பை அவரால் பாதுகாக்க முடியாமல் போயுள்ளது - என்று அவர் மேலும் தெரிவித்தார். கம்பஹாவில் இடம்பெற்ற நிகழ்வொன் றில் வைத்தே அவர் இவ்வாறு தெரிவித்தார். (ம)

# தமது செயற்பாடுகளுக்காக நிதி கோருகிறது பலசேனா!

கொழும்பு, ஜுன் 26

பொதுபலசேனா அமைப்பு அதன் செயற்பாடுகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கு பொதுமக்களிடம் இருந்து நிதியுதவியைக் கோரியிருக்கிறது

பொதுபலசேனா அமைப்பால் நேற்றுக் கிருலப்பனையில் ' அமைந்துள்ள அதன் காரியாலயத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பிலேயே இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அரசியல்வாதிகள் தமது செயற்பாடுகளை மேற்கொள்வதற்கென எங்கேனுமிருந்து நிதியைத் திரட்டிக்கொள்கிறார்கள். ஊடகப் பிரிவொன்றை முறையாகப் பேணுகிறார்கள். அவர்களுக்கு பிரத்தியேக அலுவலகங்கள் காணப்படுகின்றன. அவர்கள் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதில்லை.

எமது அமைப்புக்கென்று இத்தகைய வசதிகள் எவையுமில்லை. எமக்கு எவ்வித வருமானமோ, இலாபமோ வருவதில்லை. நாங்கள் நாட்டையும், மக்களையும் பாதுகாப்பதற்கான செயற்பாடுகளை எம்மாலான அனைத்து வழிகளிலும் முன்னெடுத்து வருகின்றோம்.

இந்த நிலையில் பொதுபலசேனா அமைப்பின் செயற்பாடுகளைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கு நிதியுதவியின் தேவைப்பாடு ஏற்பட்டுள்ளது. எமது செயற்பாடுகளில் நாட்டம் உள்ளவர்கள் நிதி வழங்கலாம் என்று ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# தொழிற்படு அரசியல்வாதிகளின் பெயர்கள் அரச, பொது கட்டடங்களுக்கு வேண்டாம்!

## தேர்தல்கள் ஆணைக்குழு கட்சிகளுக்குக் கடிதம் அனுப்பியது

*யாழ்ப்பாணம், ஜூன் 26*

அரச பாடசாலைகள், பாடசாலைகளின் கட்டடங்கள், அரச நிறுவனங்களின் கட்டடங்கள், பொது இடங்கள், புதிய கிராமங்கள் மற்றும் வீதிகளுக்கு உயிர்வாழ்கின்ற, தொழிற்படுகின்ற அரசியல்வாதிகளின் பெயர்களைச் சூட்டுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மகிந்த தேசப்பிரிய அறிவித்துள்ளார். அரசியல் கட்சிகளின் தலைவர்கள், தவிசாளர்கள், செயலர்கள் மற்றும் நிரந்தர முகவர்கள் ஆகியோருக்குக் கடிதம் மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அரச பாடசாலைகள், பாடசாலைகளின் புதிய கட்டடங்களுக்கு, அரச, வேறு நிறுவனங்களின் கட்டடங்களுக்கு, பொது இடங்களுக்கு பாதைகளுக்கு நாட்டின் ஏற்றுக் கொள்ளப்பட்ட தலைவர்கள் மற்றும் அறிஞர்களின் பெயர்களைச் சூட்டுதல் சிலகாலமாக இடம்பெற்று வருகின்றது.

இருந்த போதிலும் மேற்குறித்த பொதுச் சொத்துக்களுக்கு உயிர்வாழுகின்ற தொழிற்படுகின்ற அரசியல்வாதிகளின் நாடாளுமன்ற, மாகாண சபைகளின் உறுப்பினர்கள், அமைச்சர்களின் பெயர்களைச் சூட்டும் புதிய போக்கொன்று ஆரம்பமாகியுள்ளது என்பது தேர்தல் ஆணைக்குழுவால் அவதானிக்கப்பட்டுள்ளது. அரச நிறுவனங்களுக்கு அரச பாடசாலைகளுக்கு பொது இடங்களுக்கு மற்றும் பாதைகளுக்கு தொழிற்படு அரசியல்வாதிகளின் பெயர்களைப் பயன்படுத்துகின்றமையானது, சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்களை நடத்தும்போது வேட்பாளர்களுக்குச் சம உரிமை அல்லது சமமான சந்தர்ப்பம் கிடைக்க வேண்டுமென்ற கோட்பாடு மீறப்படுதல் ஆகும்.

அரசியல்வாதிகள், சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், தொழில் வல்லுநர்கள், சமூக வலையமைப்புச் செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் ஆகியோர் முன்வைக்கின்ற கருத்தைப் புறந்தள்ளி விடுவது அசௌகரியமானதென்று ஆணைக்குழு கருதுகின்றது.

இந்த உயிர்வாழுகின்ற அரசியல்வாதிகளின் பெயர்கள் சூட்டப்பட்டுள்ள அரச கட்டடங்களை வாக்களிப்பு நிலையங்களாகப் பயன்படுத்தும்போது அதன் மூலம் வாக்காளர்களுக்குத் தாக்கத்தை ஏற்படுத்தமுடியும் என்ற கருத்தைக் கவனத்திற் கொள்ளாமல் விடுவதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு முடியாது. எனினும் பொருத்தமான கட்டடங்களைத் தேடிக் கொள்ளும் வசதியின்மை காரணமாக வாக்களிப்பு நிலையங்களாக அரச பாடசாலைகளைப் பயன்படுத்த வேண்டியேற்பட்டுள்ளதால் அரசியல்வாதிகளின் பெயர்கள் சூட்டப்பட்டுள்ள பாடசாலைகளை வாக்களிப்பு நிலையங்களாகப் பயன்படுத்தாமல் இருப்பது மிகவும் கடினமான விடயமாகும்.

மேலும் உயிர்வாழுகின்ற, தொழிற்படு அரசியல்வாதிகளின் பெயர்களில் அழைக்கப்படுகின்ற கிராமங்கள் மற்றும் பாதைகளின் விவரங்கள் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளில் முகவரியாகக் குறிப்பிட வேண்டியேற்பட்டுள்ளமையும் சிக்கலாகிவிட்டது.

தொழிற்படு அரசியல்வாதிகளின் பெயர்களை அரச பாடசாலைகளுக்கு, பாடசாலைக் கட்டடங்களுக்கு மற்றும் அரச நிறுவனங்களுக்குப் பொது இடங்களுக்கு புதிய கிராமங்களுக்கு இடுவது பொருத்தமற்றது. இது தற்போது மட்டுமன்றி 2014 - 2015 ஆம் ஆண்டுகளிலும்கூட உள்நாட்டு மற்றும் பன்னாட்டு அரசியல் சபைகளில் மற்றும் தேர்தல் முகாமைத்துவ நிறுவனங்களில் கலந்துரையாடப்பட்ட விடயமாகும்.

தேர்தல்கள் திணைக்களம் காணப்பட்ட காலத்திலும் அதன் பின்னர் ஆணைக்குழு நியமனம் செய்யப்பட்ட பின்னரும் இந்த விடயம் அரசியல் கட்சிகளின் செயலர்கள், நிரந்தர முகவர்கள் மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு என்பனவற்றுடன் கலந்துரையாடப்பட்டுள்ளது.

மேற்படி கலந்துரையாடல்களின்போது உயிர் வாழுகின்ற தொழிற்படு அரசியல்வாதிகளின் பெயர்கள் சூட்டப்பட்டுள்ள அரசு கட்டடங்களை வாக்களிப்பு நிலையங்களாகப் பயன்படுத்துதல் வாக்காளர்களுக்கு ஏதேனுமொருவகையான தாக்கத்தைச் செலுத்துவதற்கு காரணமாக அமைவதாகவும் சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல் சந்தர்ப்பங்களின்போது அத்தகைய கட்டடங்களை வாக்களிப்பு நிலையங்களாகப் பயன்படுத்துவதிலிருந்து தவிர்க்கவேண்டுமெனவும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. மேலும் தொழிற்படு அரசியல்வாதிகளின் பெயர்களை அரச பாடசாலைகள், பாடசாலைக் கட்டடங்கள் மற்றும் ஏனைய பொது நிறுவனங்களுக்கு சூட்டுவது பொருத்தமற்றதென்ற அரசியல் கட்சிகளின் பொது இணக்கப்பாடு 2014-2015 காலப் பகுதியின் போது தெரிவிக்கப்பட்டன.

எனவே உயிர் வாழ்கின்ற தொழிற்படு அரசியல்வாதிகளின் பெயர்களை மேற்கூறப்பட்ட இடங்களுக்குச் சூட்டுவதிலிருந்து தவிர்த்திருப்பது மிகவும் பொருத்தமானதென்று தேர்தல் ஆணைக்குழு கருதுகின்றது.

அதுபற்றி உங்கள் கட்சியின் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் முதன்மை தொழிற்படுநர்களுக்கு அறிவித்து அவ்வாறு முன்னர் குறிப்பட்டுள்ளவாறு அரச பாடசாலைகள் பாடசாலைக் கட்டடங்கள் மற்றும் அரச நிறுவனங்கள் பொது இடங்கள் பாதைகளுக்கு பெயர் சூட்டுவதைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கையெடுக்குமாறு அவர்களை அறிவூட்டுவதற்கு தயவன்புடன் நடவடிக்கையெடுப்பது பொருத்தமாகும் - என்றுள்ளது.

(த)

# நாட்டின் பல பகுதிகளில் இந்த வாரம் மழை!



கொழும்பு, ஜூன் 26

மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி, மாத்தறை மற்றும் களுத்துறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் நேற்றுக் காலை வெளியிட்டுள்ள் வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பி டப்பட்டுள்ளதாவது:

வடமேல் மாகாணத்திலும் கொழும்பு, கம்பஹா மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் பல தடவைகள் மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. பதுளை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் சில இடங்களில் பி.ப. 2.00 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் திருகோணமலை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் மணித்தியாலத்துக்கு 40 கிலோ மீற்றர் வரையான அதிகரித்த வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசுவதற்கான சாத்தியம் காணப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அந்தப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

அதேவேளை புத்தளத்திலிருந்து கொழும்பு மற்றும் காலி ஊடாக ஹம்பாந்தோட்டை வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் காங்கேசந்துறையிலிருந்து முல்லைத்தீவு ஊடாக திருகோணமலை வரையான கடற்பரப்புகளிலும் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

காற்றானது தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடுவதுடன் மாத்தறையிலிருந்து ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 40-50 கிலோ மீற்றர் வரை காணப்படும். நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 30-40 கிலோ மீற்றர் வரை காணப்படும்.

நீர்கொழும்பிலிருந்து புத்தளம் மற்றும் மன்னார் ஊடாக காங்கேசந்துறை வரையான கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 கிலோ மீற்றர் வரை அதிகரித்து வீசக்கூடுவதுடன் அவ்வேளைகளில் கடல் ஓரளவு கொந்தளிப்பாகவும் காணப்படும். கடலில் பயணம் செய்வோரும் மீனவ சமூகமும் இவ்விடயம் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு வேண்டிக் கொள்ளப்படுகிறார்கள்- என்றுள்ளது.

(ம)

# எந்தத் தேர்தலுக்கும் தயாராக உள்ளோம்!

## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 26

எந்தவொரு தேர்தலிலும் போட்டியிடுவதற்கு நாம் தயாராகவே உள்ளோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே மகிந்த இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'அரச தலைவர் வேட்பாளர் குறித்து முரண்பட வேண்டிய அவசியமில்லை. சரியான நேரத்தில் அரச தலைவர் வேட்பாளர் யார் என்பது குறித்து அறிவிப்போம்.

அதாவது நாட்டை நேசிக்கக் கூடிய மக்களின் பிரச்சினைகளை உணர்ந்து செயற்படக்கூடிய சிறந்த ஒருவரையே வேட்பாளராக நியமிப்போம் இதேவேளை எமது ஆட்சிக் காலத்தில் நாடளாவிய ரீதியில் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால் இப்போது எந்தவொரு அபிவிருத்தி செயற்பாடுகளும் முன்னெக்கப்படாமல் அப்பணம் ஆட்சியாளர்களின் பைகளையே நிறைக்கின்றது' - என்றார்.

(ம)

# களுத்துறை மருத்துவமனைகளில் பணிப்புறக்கணிப்புத் தொடர்கிறது!

கொழும்பு, ஜூன் 26

களுத்துறை மாவட்டத்தின் அனைத்து அரச மருத்துவமனைகளிலும் ஆரம்பிக்கப்பட்ட பணிப்புறக்கணிப்புப் போராட்டம் தொடர்கிறது.

சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு எதிராக அரச மருத்துவ அதிகாரிகளின் சங்கத்தினால் நேற்று ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போராட்டம் நேற்றும் தொடர்ந்தது. களுத்துறை நாகொட வைத்தியசாலையில், அமைச்சர் ராஜிதவுக்கு எதிரான பொதுமனு ஒன்றில் கைச்சாத்து திரட்டும்போது, அமைச்சரின் ஆதரவாளர்கள் சிலர் அதற்கு எதிராக செயற்பட்டதுடன், அச்சுறுத்தும் வகையிலும் நடந்துகொண்டதாக குற்றஞ்சாட்டியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

(ம)

# பொய்க் குற்றச்சாட்டு கூறியோரின் மீது விரைவில் வழக்குத் தாக்கல்!

## அசாத் சாலி கூறுகின்றார்

கொழும்பு, ஜூன் 26

எனக்குஎதிராகபொய்குற்றச்சாட்டுக்களை தெரிவித்தவர்களுக்கு எதிராக எதிர்வரும் தினங்களில் நட்டஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்று தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி தெரிவித்தார்.

தேசிய ஐக்கிய முன்னணி நேற்றுக் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் பயங்கரவாத தாக்குதலானது ஐ.எஸ். அமைப்பால் மேற்கொள்ளப்பட்டதொன்றல்ல. கர்தினால் மல்கம் ரன்ஜித்தும் இது தொடர்பாகத் தெரிவித்திருக்கின்றார். இது தொடர்பான பல உண்மைகள் வெளிவரும். அதேபோன்று இந்தத் தாக்குதலை பின்னால் இருந்து செயற்படுத்தியவர்கள் யார் என்பது இன்னும் சில தினங்களில் வெளிவரும்.

நாட்டில் சட்டம் ஒழுங்கு நடைமுறையில் இல்லை. அதனால்தான் ரத்தன தேரர் அவசரகால சட்டம் நடைமுறையில் இருக்கும்போது பட்டினிப் போராட்டத்தில் ஈடுபட்டார். பாதுகாப்பு மற்றும் சட்டம் ஒழுங்கு அமைச்சராக இருக்கும் அரச தலைவர் பொலிஸார் என்ன செய்கின்றனர் என்று தெரியாமல் இருக்கின்றார். என்றார்.

(எ)

# ஈரான் மீது கடும் தடை அமெரிக்கா அதிரடி




வோஷிங்டன்,ஜூன் 26
ஈரான் மீது கடுமையான பொருளாதாரத் தடைகளை அமெரிக்கா நேற்றுமுன்தினம் விதித்தது. இதற்கான நிறைவேற்று உத்தரவில் அமெரிக்கா அதிபர் ட்ரம்ப் கையெழுத்திட்டார்.

அணு ஆயுதத் தடை ஒப்பந்தம் தொடர்பாக அமெரிக்கா ஈரான் இடையே முரண்போக்குஏற்பட்டிருந்தநிலையில், அமெரிக்க உளவு வானூர்தியை ஈரான் சுட்டு வீழ்த்தியது. ஈரான் மீது தாக்குதல் நடத்த ட்ரம்ப் உத்தரவிட்டார். பின்னர் அந்த உத்தரவைத் திரும்பப் பெற்றார். இந்த நிலையில் ஈரான் மீது கடுமையானபொருளாதாரத்தடைகளைஅமெரிக்காவிதித்தது. மேலும் ஈரானியத்தலைவர்மற்றும் அதிகாரிகள் அமெரிக்காவில்நிதிப்பரிவர்த்தனைசெய்யவும்தடை விதிக்கப்பட்டது.

இது குறித்துக் கருத்துரைத்த ட்ரம்ப், "ஈரான் உட்பட எந்த நாட்டுடனும் நாங்கள் மோதல் போக்கை விரும்பவில்லை.

எனினும் ஈரான் ஒரு போதும் அணு ஆயுதம் வைத்திருக்கநாங்கள்விடமாட்டோம்" என்று தெரிவித்தார்.



## தொலைத்தொடர்பு சேவை துண்டிப்பு

### நெதர்லாந்து முழுதும் பொலிஸார் குவிப்பு

அம்ஸ்ரெர்டம்,ஜூன் 26
நெதர்லாந்தில் நான்கு மணித்தியாலங்கள்வரைதொலைத்தொடர்புசேவைகள் மறுக்கப்பட்டன. நாடுமுழுதும்முற்றாகத் தொலைத்தொடர்பு சேவைகள் துண்டிக்கப்பட்டன.

முதலில் நெதர்லாந்து பொதுத்துறை நிறுவனமான றோயல் கே.பி.என். சேவை செயலிழந்தது. அதன் பிறகு இதனுடன் தொடர்புடையநிறுவனங்களின்சேவைகள் துண்டிக்கப்பட்டன. தொலைத்தொடர்பு சேவை துண்டிக்கப்பட்டதும், அதிகளவில்பொலிஸார்வீதிகளில்குவிக்கப்பட்டனர். அவசர தேவைக்குத் தொலைத் தொடர்பைச் சார்ந்து இருக்காமல் நேரடியாகப் பொலிஸ் நிலையம் மருத்துவமனைக்குச் செல்ல அறிவுறுத்தினார்கள். இணையத்தளம், தொடர்பாடல் துறையில் ஊடுருவல்கள் இந்தச் சேவை துண்டிப்பின் பின்னணியில் இருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

தண்ணீர்த் தட்டுப்பாட்டின் எதிரொலி

## பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்ப முடியாத அவலம்

இந்தியாவின் தமிழகத்தில் ஏற்பட்டுள்ள தண்ணீர்த்தட்டுப்பாடுகாரணமாகத்தமது பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்ப முடியாத சூழல் பெற்றோர்கள் பலருக்கு ஏற்பட்டுள்ளது.

அங்குள்ள பலர் கடந்த பத்து ஆண்டுகளில் இல்லாத அளவு மோசமான தண்ணீர்த் தட்டுப்பாட்டை இந்த ஆண்டுசந்திப்பதாகத் தெரிவித்தர்கள்.

தினமும் காலையில் தண்ணீரைப் பெற்றுக்கொள்வதற்காகப்பெண்களில்பலரும், ஆண்களில் சிலரும் அலைந்து திரிகிறார்கள். தண்ணீருக்கானஇவர்களின்அலைச்சலால் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவதற்கு முடியாமல் போகிறது என்று தெரியவருகிறது.



## அமெரிக்காவின் தடைக்கு பதிலடி பேச்சுக்களை நிராகரித்தது ஈரான்

தெஹ்ரான்.ஜூன் 26
அமெரிக்காவிதித்துள்ளபுதியபொருளாதாரத் தடைகளால் கடும் அதிருப்திஅடைந்துள்ளஈரான்,அமெரிக்காவுடனான பேச்சு மேடையை நிராகரித்தது.

அணு ஆயுதத் தடை ஒப்பந்தம் தொடர்பாக அமெரிக்கா-ஈரான் இடையே ஏற்பட்டுள்ள முரண் போக்கு உச்சமாகி அமெரிக்கா, ஈரான் மீது கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது. இந்தத் தடைகளால் ஈரான் கடும் அதிருப்தி அடைந்துள்ளது.

இதனால், அது அமெரிக்காவுடனான பேச்சுக்களை நிராகரித்தது. இதுபற்றி ஈரானின் ஐ.நாவுக்கான தூதர்மஜித்தாகத் ரவாஞ்சிதெரிவித்ததாவது:

ஈரான் மீதான பொருளாதாரப் போரை அமெரிக்கா நிறுத்த வேண்டும். மிரட்டும்போக்குத்தொடரும்பட்சத்தில், பேச்சுக்களைத் தொடங்க முடியாது.

அச்சுறுத்தல் இருக்கும் வரை, ஈரானும் அமெரிக்காவும் ஆக்கபூர்வமான பேச்சைத் தொடங்க எந்த வழியும் இல்லை.

அத்தகைய பேச்சுக்கான சூழ்நிலை இன்னும் உருவாகவில்லை. பாதுகாப்பை மேம்படுத்துவது தொடர்பாகப் பிராந்திய நாடுகளுடன் பேச்சு நடத்தப்பட வேண்டும்.

இந்த விடயத்தில் ஐ.நா. தனது பங்களிப்பை வழங்கவேண்டும் - என்றார்.


நைஜீரியாவில் சோகம்

## எரிவாயு விபத்தில் 10 பேர் சாவு

அபுஜா,ஜூன் 26
நைஜீரியாவில்எரிவாயுக்குழாய்வெடித்துவிபத்துக்குள்ளானதில்10பேர் உடல் கருகிச் சாவடைந்தனர். பலர் படுகாயம் அடைந்தனர். நைஜீரியாவின்தெற்குப்பகுதியில்ரிவர்ஸ்மாகாணத்தில்உள்ளகோம்கோம்நகரில் எரிவாயுஉற்பத்திசெய்யும்எரிசக்திநிறுவனம்ஒன்றிலேயேஇந்தச்சோகச் சம்பவம் நடந்தது.

பராமரிப்பு பணிகள் நடைபெற்று கொண்டிருந்தபோது எதிர்பாராத விதமாக அங்குள்ள எரிவாயுக் குழாய்களில் வெடிப்பு ஏற்பட்டு எரிவாயு கசிந்து தீப்பிடித்தது.

அங்கு பராமரிப்புப்பணியில்ஈடுபட்டிருந்ததொழிலாளர்கள்இந்தத்தீயில் சிக்கினர். காயமடைந்தவர்களில் பலர் இறக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.





## இன்றைய நாள்

**மேடம்:** பணிகளை நிறைவேற்ற கூடுதல் முயற்சி தேவைப்படும். நண்பரின் ஆலோசனை, உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். சீரான ஓய்வு மனதிற்கு புத்துணர்வு தரும்.

**இடபம்:** ரசனையுடன் செயல் ஒன்றை நிறைவேற்றுவீர்கள்; குடும்ப உறுப்பினர்கள் மனமுவந்து பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் இருந்த சிரமம் விலகும். பணப்பரிவர்த்தனையில் நல்ல முன்னேற்றம் உண்டு.

**மிதுனம்:** உங்களுக்கு உதவுவது போல ஒருவர் பாசாங்கு செய்வார். சொந்த உழைப்பில் அதிக நம்பிக்கை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் உள்ள தாமதம் படிப்படியாக சீராகும்.

**கடகம்:** சமயோசித குணத்துடன் செயல்படுவீர்கள். நல்ல விசயங்களை பேசுவதில் ஆர்வம் ஏற்படும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உருவாகும். ஆதாய பணவரவு கிடைக்கும்.

**சிம்மம்:** சிலரது செயல் உங்கள் மனதில் அதிருப்தியை உருவாக்க லாம். பணிகளில் கவனம் கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற கூடுதல் மூலதனம் தேவைப்படும்.

**கன்னி:** செயல்களில் கூடுதல் நன்மை கிடைக்கும். திட்டமிட்ட பணிகளால் தொழில், வியாபாரத்தில் நல்ல வளர்ச்சி ஏற்படும். சேமிப்பு அதிகரிக்கும். அரசியல்வாதிகளுக்கு அனுகூலத் தீர்வு ஏற்படும்.

**துலாம்:** சிறு செயல் கூட பல மடங்கு நன்மை தரும். தொழில், வியாபாரம் செழிக்க கூடுதல் கவனத்துடன் பணி புரிவீர்கள். உபரி பணவரவு கிடைக்கும். உடன்பிறந்தோருக்கு உதவுவீர்கள்.

**விருச்சிகம்:** சிலரது பேச்சு உங்களை சங்கடப்படுத்தலாம். எவருக்கும் தேவையற்ற வாக்குறுதி தர வேண்டாம். தொழிலில் உற்பத்தி, விற்பனை அளவுடன் இருக்கும்.

**தனுசு:** உங்கள் செயலில் தடுமாற்றம் ஏற்படலாம். நிதானமும், அக்கறையும் தேவை. தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். வாகனத்தில் மிதவேகம் நல்லது.

**மகரம்:** உங்கள் செயல்களில் அன்பு நிறைந்திருக்கும். தொழில், வியாபாரம் செழிக்க தேவையான மாற்றம் செய்வீர்கள். தாயின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள்.

**கும்பம்:** குடும்ப பெரியவர்களின் சொல்லுக்கு மதிப்பு, மரியாதை தருவீர்கள். கூடுதல் பணவரவும், நன்மையும் உருவாகும்.

**மீனம்:** உங்களின் தேவைகளை நிறைவேற்றுவதில் ஆர்வம் கொள் வீர்வீகள். தொழில், வியாபாரத்தில் கூடுதல் பணிச்சுமை உருவாகும். எதிர்பார்த்த பணவரவு வந்து சேரும்.

உதயன்
@UthayanPrint
ஜூன் 26, 2019
புதன் பொய்கை

# சிலப்பதிகாரத்தில் மேன்மை பெறுவது கண்ணகியா? மாதவியா?

இராமபுரத்தூர் நிஷாந்தன்

தமிழ் இலக்கிய வரலாற்றில் ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றாக அமையப் பெறுவது சிலப்பதிகாரமாகும். இளங்கோவடிகளால் இயற்றப்பட்ட இந்தக் காப்பியம் இன்றும் தமிழுலகு போற்றிச் சிறப்பிக்கும் பெருமையைப் பெற்றுள்ளது எனலாம். மூன்று காண்டங்களை அடிப்படையாகக் கொண்டு சங்கமருவிய காலத்தில் தோன்றிய இந்தக் காப்பியமே காப்பிய மரபு தோன்றிட வழிவகுத்த சிறப்பைக் கொண்டதாக அமைவுறுகின்றது. சிலப்பதிகாரம் என்பது சிலம்பு மற்றும் அதிகாரம் எனப் பொருள்படும். சிலம்பை ஆதாரமாகக் கொண்டு அமைவுறுவதால் இந்தக் காப்பியம் இந்தப் பெயரினைச் சூடியது எனலாம். அது மட்டுமன்றி இந்தக் காப்பியத்துக்கு நூபுரதிகாரம் எனும் பெயரும் குறிப்பிடப்படுகின்றது. ஆகவே தான் இளங்கோவடிகள் இந்தக் காப்பியத்தின் சிறப்பை,

அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாவதும்
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும் என்பதும்
சூழ்வினைச் சிலம்பு காரணமாகச்
சிலப்பதிகாரம் என்னும் பெயரால்
நாட்டுதும் யாம் ஓர் பாட்டுடைச் செய்யுள்.

எனும் பாடல் மூலம் காப்பியம் செய்கின்றார். கோவலன், கண்ணகி, மற்றும் மாதவி ஆகிய பாத்திரக் கூறுகளை அடிப்படையாகக் கொண்டு இந்தக் காப்பியத்தில் கதையாடல் இழையோடுகின்றது. இவற்றில் கண்ணகி மற்றும் மாதவி பற்றி ஊடுறும் கருத்தாடல்கள் பற்றிய வெளிப்பாட்டை இங்கு காணுதல் சிறப்பாகும்.

### கண்ணகி எனும் கயல்விழியாள்

புகார் எனும் நகரிலே, கொடைச் சிறப்பினை உடையவனாகிய மாநாய்கன் என்பவன் வாழ்ந்து வந்தான். அவனது குலம் தழைக்க வந்த அழகிய பூங்கொம்பைப் போன்றவள் கண்ணகி. கரிய கயல் மீன் போன்ற விழிகளைக் கொண்டவள். பொன்னொளி பரந்த வானவல்லி கொடியை ஒத்தவள். செந்தாமரை மலரிலே வீற்றிருக்கும் திருமகள் போன்ற பேரழகு படைத்தவள். பன்னிரண்டு வயதை உடையவள், அந்த நகரில் உள்ளவர்கள் தொழுது போற்றும் நல்ல குணங்களை கொண்டிருப்பவளே கண்ணகி என இளங்கோவடிகள் கண்ணகி குறித்து கவியுறுத்துகின்றார். இதனை,



மாநாய்கன் குலக் கொம்பர்
ஈகைவான் கொடி அன்னாள்,
ஈர் ஆறு ஆண்டு அகவையாள்,
போதில் ஆர் திருவினாள்
புகழ் உடை வடிவு என்றும் பெயர் மன்னும்
கண்ணகி என்பாள் மன்னோ...

எனும் பாடலின் ஊடே காப்பியம் செய்கின்றார் இளங்கோவடிகள்.

### கோவலன் கண்ணகி இல்லறம் சேருதல்

இவ்வாறு புகார் நகரில் மேன்மை பெற்று விளங்கிடும் ஆடவரிர் சிறந்த கோவலனுக்கும், மங்கையரில் சிறந்த கண்ணகிக்கும் திருமணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்து, அதன்படி திருமண குறித்த நன்நாளில் இருவருக்கும் மணம் செய்வித்தனர். இவ்வாறு கோவலனும் கண்ணகியும் இல்லறம் எனும்நல்லறத்தில் இணைந்து கொண்டனர். பல ஆண்டுகள் அவர்கள் இருவரும் நாட்டு மக்கள் புகழும் படியாக மகிழ்வுடன் இல்லறத்தை நடத்தி வந்தனர்.



### மாதவி எனும் மான் விழியாள்

மாதவி வானவ மகளிர் ஊர்வசியின் மரபிலே பிறந்தவள். முற்பிறப்பில் ஊர்வசியாக இருந்தவள் அகத்திய முனிவரது சாபத்தினால் நிலவுலகில் கலை கூடிய மரபிலேயே மாதவி எனும் பெயருடன் சித்திராபதி என்பவளுக்கு மகளாகப் பிறந்தாள். அழகிய மூங்கில் போன்ற தோள்களை உடையவளாகவும், காண்பவர் மயங்கிடும் மான் விழிகளை கொண்டவளாகவும், மலர்கள் சூடிய கரிய கூந்தலை உடையவளாகவும், ஏழாண்டு காலம் நடனக் கலை பயின்று நடனக் கலையில் தேர்ச்சி பெற்றவளாக விளங்கினாள் மாதவி எனும் மங்கை. மாதவியின் சிறப்பை,

பிறப்பில் குன்றாப் பெருந்தோள் மடந்தை
தாது அவிழ் புரிகுழல் மாதவி தன்னை
ஆடலும் பாடலும் அழகும் என்று
இக் கூறிய மூன்றின் ஒன்று குறை படாமல்
ஏழ் ஆண்டு இயற்றினள்...

எனவாறு கவியுறுத்துவதைக் கண்ணுறலாம்.

### மாதவியின் நாட்டியம்

இவ்வாறு மாதவி தான் முறையாகப் பயின்ற நடனக் கலையை நாட்டின் மன்னவன் முன்பாகப் பெரும் சபையினிடையே சிறப்புற அரங்கேற்றம் செய்தாள். பல வகையான இசைக் கருவிகள் முழங்கிட முதலில் வாரப் பாடல்களுக்கு அமைவாக மாதவியும் பதம் பிடித்து அழகுற நடனம் ஆடினாள். பின் சிறந்த நாட்டிய நூல்களில் கூறப்பட்டுள்ள நடன முறைகளை நன்றாகக் கடைப்பிடித்து சிறப்புற அனைவரும் கண்டு களித்திடும் படியாக நடனம் புரிந்தாள் மாதவி. மாதவியின் நடனக் கலையைக் கண்டு மகிழ்ந்த மன்னனும் தலைக்கோல் எனும் பட்டத்தையும், ஆயிரத்து எட்டு பொன் காசை மதிப்பாக கொண்ட மாலையையும் மாதவிக்கு அளித்துச் சென்றான்.

### கோவலன் மாதவியினுடைய மணமாலையை வாங்குதல்

இந்த நிலையில் மாதவியின் அரங்கம் காண வந்த கோவலன் மாதவியின் அழகினாலும், நடனக் கலையாலும் கவரப்பட்டான். மாதவியின் பால் அவன் மனம் செல்லத் தொடங்கியது. இவ்வாறு இருக்கும் போது, மான் போன்று மருட்சியுடைய விழிப்பார்வை பொருந்திய மாதவியும், மாலையை ஒரு கூனியிடம் அளித்து, இந்த மாலையை யாவர் ஆயிரத்து எட்டுப் பொன் கொடுத்து வாங்குகின்றனரோ, அவர் மாதவியாகிய தனக்கு மணமகனாவர் எனும் செய்தியை தெரிவித்தாள். அதன்படி கூனியும் மாலையை நகரிலே இளைஞர்கள் பலரும் நடமாடித் திரிகின்ற பெருந்தெருவிலே கொண்டு சென்று மாதவி உரைத்த செய்தியை கூறுவாள்.





அப்போது கோவலன் சென்று மாலையை உரிய பொன் கொடுத்து வாங்கினான். அதன்படி மாதவியின் மணமனையையும் சென்றடைந்தான். மாதவியும் கோவலனை விருப்புடன் ஏற்று மகிழ்வுடன் களித்திருந்தாள். கோவலனும் தன் மனைவி கண்ணகியை மறந்து மாதவியோடு சிறிதும் பிரிவின்றி தங்கியிருக்கலானான்.

**கோவலன் மாதவி பிரிவு**

இவ்வாறு இருக்கும் கால் புகார் நகரிலே இந்திர விழா சிறப்புற நடைபெற்றது. அந்த விழாவை கண்ணுறும் பொருட்டு கோவலனும், மாதவியும் விருப்புற்று அங்கு சென்று விழாவை கண்டு களித்த பின்னர் கடற்கரையோரம் சென்ற இருவரும் மகிழ்வுடன் அருகருகே அமர்ந்திருந்தனர். அப்போது மாதவி திருத்திய நரம்புகளை உடைய யாழை கைகளில் கொண்டிருந்தாள். உடன் கோவலன் மாதவியின் கையில் இருந்த யாழை வாங்கி மாதவியின் மனம் மகிழும் படி யாழை மீட்டி பாடத் தொடங்கினான். முதலில் காவிரியை புகழ்ந்து ஒரு பாடல் பாடினான். இவ்வாறு கோவலன் பாடிய பாடல்கள் அவன் வேறொரு மங்கையின் மீது விருப்பம் கொண்டு அவளைக் குறித்து பாடப்பட்டிருப்பதைக் கேண்மையுற்ற மாதவியும் கோவலன் மீது ஊடலுற்றவளாய் கோவலனிடம் இருந்து யாழை வாங்கி தானும் வேறொரு ஆடவன் மீது மையல் கொண்டிருப்பதைப் போல பாடல்களை மீட்டத் தொடங்கினாள். மாதவியின் பாடல்களை கேட்ட கோவலன் இவள் வேறொருவன் மீது மனம் வைத்துப் பாடுகின்றாள் என எண்ணி அந்தக் கணமே அவளை விட்டுப் பிரிந்து தனியாக நடக்கத் தொடங்கினான். இவ்வாறு மாதவியை விட்டுப் பிரிந்த கோவலன் நேராக கண்ணகியிடம் தஞ்சம் புகுந்தான். ஆனால் மாதவியோ கோவலன் நினைவாகவே தன் நாள்களைக் கடந்தாளானாள். கோவலன் மனம் மாறி தன்னிடம் வந்து விடுவான் என்பது மாதவியின் எண்ணமாகவும் இருந்தது.

**கோவலன் மதுரை செல்லுதல்**

கோவலன் மீண்டும் கண்ணகியிடம் திரும்பி வருகின்றான். அப்போது கண்ணகியோ என்னிடம் கால் சிலம்புகள் உள்ளன. அவற்றை பெற்றுக் கொள்ளுங்கள் என உரைத்தாள். அது கேட்ட கோவலன் கண்ணகியிடம், சேயிழையே, இந்தச் சிலம்பைக் கொண்டு இழந்த பொரு ளையெல்லாம் மீண்டும் சேர்த்திட விரும்புகின்றேன். அதற்காக நாம் இப்போதே மதுரை நகரம் செல்வோம் புறப்படுவாயாக எனக் கூறினான். கண்ணகியும் அவ்வார்த்தைகளைக் கேட்டு அதற்கு உடன்படலாயினாள். அதன்படி இருவரும் மதுரை நகர் நோக்கிப் புறப்படலா யினர்.

**கோவலன் கொலைப்படுதல்**

அதன்படி புகார் நகரை விட்டு நீங்கி கவுந்தியடிகளுடன் மதுரை நகரைச் சென்றடைந்தனர். பின் கவுந்தியடிகள் கண்ணகியையும், கோவலனையும் மதுரையின் புறஞ்சேரியில் வசிக்கும் மாதரி என்பாளிடம் அடைக்கலமாக்கினார். அதன்படி மாதரியின் இல்லத்தில் கோவலனும் தஞ்சமடைந்தனர். கோவலனும் கண்ணகியை அங்கு இருத்தி விட்டு சிலம்பை விற்று வரும் பொருட்டு மதுரை நகரினுள் பிரவேசித்தான். மதுரை நகரில் செல்லும் வழியில் பொற்கொல்லன் ஒருவனைக் கண்டு அவனிடம் தன் சிலம்பைக் காட்டி இதனை விற்றுத் தர முடியுமா? என வினவி நின்றான் கோவலன். இதைக் கேண்மையுற்ற பொற்கொல்லனும் சிலம்பை கைகளில்பெற்று அதை ஆராய்ந்தான். ஏற்கனவே அரசியாரின் காற்சிலம்பு ஒன்றை களவாடியவன் அந்தப் பொற்கொல்லனே ஆதலால் தன் மீது சுமத்தப்பட இருக்கும் குற்றத்தைக் கோவலன் பால் திருப்பி விடும் வஞ்சக எண்ணம் கொண்டவனாக பொற்கொல்லனும் கோவலனை தன் மனையில் இருத்தி விட்டு விரைவுடன் மன்னன் அரண்மனை சென்று அவனிடத்தில், அரசியாரின் காற்சிலம்பை திருடிய கள்வன் என் சிறுகுடிலில் தங்கியிருக்கின்றான் எனக் கூறி நின்றான். அதைக் கேண்மையுற்ற மன்னவனும் வினையானது வந்து தன்னை உந்தவே பொற்கொல்லன் கூறியதை ஆராயாமல் பொற்கொல்லன் மனையில் தங்கியுள்ள கள்வனைக் கொன்று அவன் கையில் உள்ள சிலம்பை கொணர்க என ஆணையிட்டான். அதனைக் காவலரும் மன்னவன் ஆணை ஏற்று கோவலனை தம் வாள் கொண்டு வெட்டி வீழ்த்தினான். கோவலன் நிலத்தின் மீது வீழ்ந்து மடிந்தான். முன்னைய ஊழ்வினைப் பயனானது அங்கு கோவலனை பற்றி பழி தீர்த்துக் கொண்டது எனலாம்.

**கண்ணகியின் துன்பம்**

கோவலன் கொலையுண்ட செய்தியைக் கேண்மையுற்றதும் கருங்கயல் போலும் கண்களை உடைய கண்ணகி நெருப்பில் இடப்பட்ட மெல்லிய மலர்க் கொம்பினைப் போல வருந்தலானாள். கோவலன் தன்னை விட்டு நிரந்தரமாகவே பிரிந்து விண்ணுலகம் சென்று விட்டான் என்பதை அறிந்ததும், பொங்கி எழுந்தாள். நிலவு பொழியும் திங்கள் தன்னைச் சூழ்ந்துள்ள கரு மேகத்தோடு நிலத்தில் வீழ்வதைப் போல கண்ணகியும் தரையிலே மூர்ச்சித்து வீழ்ந்து கண்கள் சிவக்கும் படியாக அழுதாள். தன் கணவனைக் குறித்து, என்கண்ணா, என்அன்பனே.. எனக் கூவியழைத்து பலவாறு புலம்பி மயங்கினாள் கண்ணகி. இதனை,



பொங்கி எழுந்தாள் விழுந்தாள்
பொழி கதிர்த் திங்கள்
முகிலொடுஞ் சோனிலம் கொண்டென
செங்கண் சிவக்க அழுதாள் தன் கேள்வனை
எங்கணா அ என்னா இனைந்து
ஏங்கி மாழ்குவாள்.

எனவாறு இளங்கோவடிகள் அழகுற கவி வடிக்கின்றார்.

மேலும், தன் கணவன் மன்னன் செயலால் வீணாகப் பழி சுமத்தப்பட்டு கொலையுண்டு கிடக்கின்றானே, இதனால் என் உடல் துன்புறும் படியாக கைம்மைக் கோலம் கொண்டு பல புண்ணிய தீர்த்தங்களில் நீராடி நோம்புகளையெல்லாம் அனுபவிக்க வேண்டி வந்து விட்டதே, இவ்வாறு பல துன்பங்களை ஏற்று நான் இவ்வுலகில் வாழ வேண்டி வந்து விட்டதே என பலவற்றைக் கூறி வருந்தி நின்றாள் கண்ணகி எனும் மாது. இந்த நிலையில் தன் கணவன் கோவலன் கள்வன் அல்லன் என்பதை உலகத்தவர்க்கு அறிவிக்கும் பொருட்டு கண்ணகியும் சூரியனை நோக்கி, வெம்மை நிறைந்த கதிர்களை உடைய கதிரவனே, பரந்த அலைகளையுடைய கடலை வேலியாக உடைய இவ் உலகிலே நிகழ்கின்றவை அனைத்தையும் நீ அறிவாயன்றோ? அப்படியிருக்க என் கணவன் கள்வனோ? என கேட்டு நின்றாள். அப்போது, கருங்கயல் போலும் கண்களையுடைய மாதரிசியே, நின் கணவன் கள்வனல்லன். உன் கணவனைக் கள்வன் என்ற இந்த ஊரைப் பெருந்தீ உண்ணப் போகின்றது என ஒரு குரல் அங்கே ஒலித்தது.

**கண்ணகி பாண்டிய மன்னவன் சபையிடத்து வருதல்**

சூரியனது வார்த்தைகளைக் கேட்ட கண்ணகி, தன்னிடம் எஞ்சியுள்ள காற்சிலம்பைக் கையிலே ஏந்தியவளாக மதுரை நகரினுள் புறப்பட்டாள். அங்கே வாழ்கின்ற பத்தினிப் பெண்கள் முன்பாக, நான் உரைக்கும் இவற்றை கேட்பீராக, என் துன்பமெல்லாம் ஒரு வழியாக மறைந்து கொண்டிருக்கின்ற வேளையிலே ஏற்றிட முடியாத பெருந்துயரை நான் உற்றேன். என் கணவன் கள்வன் அல்லன். பழி கூறி என் கணவனைக் கொன்றனர். தீது செய்த வேந்தனைக் கண்ட இதன் காரணம் கேட்பேன். இது ஓர் அறக்கேடு என வருத்தத்தோடு உரைத்து நேராக பாண்டியன் முன்பாக வந்து நின்றாள் கண்ணகி. கண்ணகியை கண்ணுற்ற அரசனும், இளங்கொடியே, நீதா யாரோ? என வினவிடவே , கண்ணகியும், உண்மை அறியாத மன்னவனே, சொல்லுகின்றேன் கேள். சோழர்களின் புகழ் பெற்ற புகார் நகரமே என் ஊராகும். அந்த நகரில் மாசாத்துவன் மகனாகப் பிறந்து, வாழ்க்கை நடத்திடவே என்னுடைய காற்சிலம்பை விற்பதற்கு நின் நகரிலே புகுந்து நின்னிடத்து கொலைக்களப்பட்ட கோவலனின் மனைவி யான், கண்ணகி என்பது என் பெயர் என உரைத்து நின்றாள். மேலும் தன் சிலம்பில் உள்ள பரல்கள் மாணிக்கம் என்பதையும் உரைத்து அதை எறிந்து உடைத்தாள். அதிலிருந்து ஓர் மாணிக்கப் பரல் அரசனின் வாயருகே தெறித்து கீழே விழுந்தது. தன் தேவியின் சிலம்போ முத்துப் பரல்களால் ஆனவை என்பதை அறிவான் அரசன். ஆகவே தன் செயல் கண்டு கலங்கி மயங்கி அக்கணமே தன் உயிரை மாய்த்துக் கொண்டான் மன்னவன். தன் கணவன் மாண்டது கண்டு தானும் அவனுடனே தன் உயிரையும் மாய்த்துக் கொண்டாள் அரசியார். இதன்பின் இன்னமும் அடங்காத கோபம் கொண்டவளாய் கண்ணகி அரண்மனையிலிருந்து வெளியேறினாள்.

**கண்ணகியின் ஏவல்ஏற்று அக்கினி மதுரை நகரை எரித்தல்**

இவ்வாறு அரண்மனையில் இருந்து வெளியேறிய கண்ணகி, மூன்று முறை மதுரை நகரை வலம் வந்து துயரமடைந்து, தன் இடப்பக்கத்து முலையை தன் கையினால் திருகி எறிந்தாள். அக்கணமே அனைத்தையும் எரிக்கும் சக்தி பெற்றவனாகிய அக்கினி எனும் வானவன் கண்ணகி முன் தோன்றி, மாபத்தினியே, இந் நக்ரை எரித்திட நான் உன் ஏவலை உடையவன். இங்கே பிழைத்திருக்க வேண்டியவர்கள் யாவர் எனக் கேட்டான். அப்போது கண்ணகியும், பார்ப்பார், அறவோர், பசு, பத்தினிப் பெண்கள், முதுமையாளர், குழந்தைகள் என்னும் இவர்களைக் கைவிட்டு தீய தன்மையுடையவர்கள் பக்கமே நீ சேர்க என தீக்கடவுளை ஏவினாள் கண்ணகியாள். உடனே பாண்டியனின் மதுரை நகரம் எங்கும் நெருப்பு சுட்டெரிக்கத் தொடங்கியது.

கண்ணகி பத்தினித் தெய்வாக போற்றப்படல்

தன் கற்பின் வலிமையால் அக்கினியின் துணை கொண்டு மதுரை நகரை தீக்கிரையாக்கி கோபத்தோடும், துன்பத்தோடும் நின்ற கண்ணகியின் முன் மதுரையம்பதித் தெய்வம் தோன்றி, அவளது முற்பிறப்பு வரலாற்றை உரைக்கின்றது. இதைக் கேண்மையுற்ற கண்ணகியும் மதுராபுரித் தெய்வத்தின் ஆணை ஏற்று மதுரை நகரை விட்டு வெளியேறி திருச்செங்கோடு எனப்படும் முருகப்பெருமானின் நெடுவேள் குன்றித்திலே ஏறி அங்கிருந்த வேங்கை மரத்தின் கீழ் நின்றாள் கண்ணகி. ஆம் மலையிலே வசித்து வரும் குறவர் குலத்தினர் கண்ணகியிடம் வந்து அவள் வரலாற்றை கேட்கவும், கண்ணகியும் தன் வரலாற்றை உரைக்கலானாள். அதைக் கேட்டது குறவர் குலத்தினர் கண்ணகியை பணிந்து, தம் கரங்களை குவித்து அவளை பலவாறு புகழ்ந்து வணங்கினர். அந்த நேரத்திலே, வானவர்கள் மலர்கள் தூவிட தேவர்கள் கோவலனோடு அவ்விடம் வந்து கண்ணகியையும் அழைத்துக் கொண்டு வானுலகம் சென்றனர். இதைக் கண்ட மாத்திரத்தில் குறவர் கூட்டத்தினர், கண்ணகியை தெய்வாக மதித்து அவளிற்கு வழிபாடு இயற்றி அவளை பலவகையான பாடல்கள் பாடி போற்றி வழிபாட்டனர். இவ்வாறே கண்ணகி பத்தினித் தெய்வமானாள் என்பது சிலப்ப திகாரக் கருத்தாடல்.

**மாதவி குறித்து கண்ணகியின் மனப்பதிவு**

இவ்விடத்தில், மாதவி குறித்து கண்ணகி எத்தகு மனநிலை கொண்டுள்ளாள் என்பதை காண்பது சிறப்பாகும். கோவலன் தன்னை விடுத்து மாதவியை மணம் செய்து அவளுடன் வாழ்ந்தவன் என்ற போதிலும், கண்ணகி மாதவி மீது சிறிதும் வெறுப்புக் கொள்ளாதிருந்தாள். மாறாக மாதவி மீது பெரு மதிப்பைக் கண்ணகி வெளிப்படுத்தினாள் என்கின்றார் இளங்கோவடிகள். அதன்படி கண்ணகியிடம் ஐயை என்பாள் மாதவி குறித்து வினவிட அதற்கு கண்ணகி மாதவி குறித்த தன் மனப்பதிவை வெளிப்படுத்துகின்றாள். தன் கணவன் மாதவியிடம் சென்று அவளுடன் இல்லறம் நடத்தியவன் என்ற போதிலும் மாதவி மீது கண்ணகி வெறுப்புக் கொள்ளாதிருந்தாள். மேலும் மாதவியை குறித்து என்றும் கடிந்து பேசாதவள். இதுதவிர மாதவியிடம் குடி கொண்டுள்ள திறமைகளைக் கண்டு வியந்ததுடன் அந்தத் திறமைகள் தன்னிடம் இல்லையே என ஆதங்கம் கொண்டாள், மேலும் தன்னை விடவும் மாதவி ஆழமான தர்க்க ரீதியான நூல் மற்றும் சாஸ்திர நூல்களில் அறிவாற்றல் மிகுந்தவள் எனவும், கவிபுனையும் ஆற்றல் பெற்றவள் எனவும் புகழ்ந்து பேசியவள். இது மட்டுமா, தனக்கு மலர்களைக் கொண்டு மாலைகள் தான் தொடுக்கத் தெரியும், ஆனால் சொற்களைக் கொண்டு சரம் தொடுக்கத் தெரிந்த வித்தகி மாதவி என உரைத்தவள் கண்ணகி. மேலும் மாதவி கணிகையர் குலத்தில் பிறந்தி ருந்தாலும் மாதவம் செய்த கவுந்தியடிகளைப் போல கல்வியறிவு பெற்றிருப்பது எனப் பலவாறு மாதவி குறித்து புகழுரைகள் புனைந்தாள் கண்ணகி. இவற்றின் வாயிலாகக் கண்ணகி மாதவி மீது கொண்டிருந்த நன்மதிப்பும் வெளிப்படுவதோடு இத்தகைய கண்ணகியின் செயலால் கண்ணகி மீதான பெருமதிப்பும் எம்மிடத்து உண்டாகின்றதல்லவா?

**கண்ணிகியைப் போற்றுவோம் மாதவியைப் புகழுவோம்**

சிலப்பதிகாரத்தில் கண்ணகியா? சிறப்புடையவள் அல்லது மாதவியா? சிறப்புடையவள் என்பதற்கு அத்திறம் நிற்க என பதிலளிப்பது சிறப்பாகும். ஏனெனில் கண்ணகியும் மாதவியும் அவரவர் நிலையில் நின்று மேன்மையடைகின்றனர் எனலாம். சிலப்பதிகாரத்தின் சிறப்புக்குப் பாத்திரமானவர்கள் இவர்கள் இருவருமே. கண்ணகியும் போற்றப்பட வேண்டியவள். அது போல மாதவியும் புகழப்பட வேண்டியவள் என மன நிறைவு கொள்வோமாக..

# 'சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள்' நாடகம்

தேவநாயகம் தேவானந்

ஈழத்தின் தமிழ்நாடக வரலாற்றில் யாழ்ப்பாண நூலக எரிப்பைப் பதிவுசெய்த கவிஞர் இ.முருகையனின் 'வெறியாட்டு' நாடகத்தை அடையாளப்படுத்தியிருந்தோம். ஒரு வரலாற்றுச் சம்பவம் தொடர்பான கலைஞனின் மனப்பதிவைப் பதிவுசெய்வதாக அது அமைந்திருந்தது. கலைஞனின் ஆத்திரம் அல்லது எதிர்ப்பு அதிலிருந்தது எனலாம். இந்த ஆத்திரத்திலிருந்து எதிர்காலம் பற்றிச் சிந்திப்பது மானநிலைமை களையும் இவ்வாறான படைப்புக்களில் இனங்காண முடிகிறது. அதே வேளை இதே காலகட்டத்தில் ஒருசமூக இயக்கம் நாடகத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்தி மக்கள் மத்தியில் பயணிப்பதான நிலைமை களையும் மனங்கொள்ள வேண்டும்.

......................

ஒருசமூக மாற்றத்துக்காகப் பயணிக்கின்ற இயக்கம், தனது பயணித்துக்கு கலைகளைப் பயன்படுத்துவது எல்லாக் காலகட்டத்திலும் நடந்திருக்கிறது. ஈழத்தில் இது பின்னர் ஈழ விடுதலைக்காக கலைகளைப் பயன்படுத்துவதாக விரிவடைந்திருக்கிறது என்பதையும் கவனிக்க முடியும். இதனை ஒரு கருத்தியலைப் பரப்புவதற்காக கலையூடான பரப்புரை என்கிறார்கள். பரப்புரை என்ற சொல்லை கலையுடன் இணைக்கின்றபோது அது கலைப்பெறுமானம் குறைந்தது என்ற எண்ணத்தையும் விதைப்பதாகும். ஆனால் அதை அவ்வாறு பார்க்க முடிவ தில்லை என்பதையும் மனங்கொள்ள வேண்டும். சில கலைக்கோட்பாடுகளை விழுங்கி வில்லங்கப்பட்டு அதன்வழி கலைகளை நோக்குபவனின் பார்வையில் அதனைப் பார்ப்பது தவறு எனலாம். இங்கு பார்வையாளனின் அனுபவத்திலிருந்தே அது தீர்மா னிக்கப்பட வேண்டும். இந்தப் பார்வை தவற விடப்பட்டதால் ஒரு கொள்கை சார்ந்த படைப்புக்கள் பதியப்படாமல் மலினப்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆனால் அவை தவிர்த்து, அந்த வரலாறுகளும் பார்க்கப்பட வேண்டும்.





◎◎◎◎◎◎

இந்த வகையில் 1979ஆம் ஆண்டுகளில் கிராமிய உழைப்பாளர் சங்கம் யாழ்ப்பாணத்தில் கிராமங்கள் தோறும் தயாரித்து மேடையேற்றிய நாடகங்கள் பற்றியும் நோக்குதல் சிறந்தது. கிராமிய உழைப்பாளர் சங்கம் ஓர் இடதுசாரிக் கொள்கையின் அடிப்படையில் இயங்கிய சங்கமாகும். தாம் நம்பும் கொள்கையின் அடிப்படையில் மக்கள் மத்தியில் பணியாற்றி மக்களை மாற்றத்துக்காக தூண்டுவது இதன் நோக்கமாகும்.

இந்தக் காலகட்டத்தில் ஒருபுறம் 'தமிழ்தேசியம்' என்ற எண்ணக் கருவுடனான பயணங்களும் அதற்கு சார்பானதும் எதிரானதுமான போக்குகளும் காணப்படுவதைக் காணமுடிகிறது. 'தமிழீழம்' ஒன்றே தமிழருக்கான தீர்வு என்றதான பெருவாரியான போக்கும், இதற்கு எதிரான குறிப்பாக தமிழீழத்துக்கு எதிரான இடதுசாரி அரசியல் போக்குகளையும் இனங்காண முடியும். இந்தப் பின்னணியில் கிராமிய உழைப்பாளர் சங்கத்தினர் ஓர் இயக்கமாகப் போராட்டக் குழுவாக எண்பதுகளில் தம்மை அடையாளப்படுத்துகின்றனர்.


◎◎◎◎◎◎

நிலவுரிமைப் போராட்டங்கள் இந்த இயக்கங்களால் முன்னெடுக்கப்படுகின்றன. மண்ணில் உழைக்கும் உழைப்பாளிகளுக்கு நிலம் சொந்தம், அவர்களுக்கு நிலம் வேண்டும் என்ற அடிப்படையில் இந்தப் போராட்டங்கள்; முன்னெடுக்கப்படுகின்றன. அரச நிலங்களில் நிலமற்றவர்கள் வலுக்கட்டாயமாகக் குடியேறுவது போன்ற வேலைகளை முன்னெடுத்தார்கள். அப்போது அரசகாணி என்பதற்கான அடையாளமாக 'கோழிக்கால் அடையாளம் கீறியகல்' நடப்பட்டிருக்கும். "எங்கெல்லாம் கோழிக்கால் கல்லிருக்கிறதோ அதில் நிலமற்றவர்கள் குடியேறுங்கள்" என்ற கோரிக்கைகளுடன் கலைகளினூடான தூண்டுதல் நடைபெற்றது. இதேபோன்று 'கசிப்பு ஒழிப்பு' மற்றும் 'கூலியுயர்வுப் போராட்டங்கள்'. குறிப்பாக, பெண்களுக்கு சம கூலி வழங்கப்படவேண்டும் போன்ற பல சமூக அக்கறையுடனான கோரிக்கைகளை முன்வைத்து நாடக ஆற்றுகைகள் ஊடாகப் போராடினார்கள்.

இதேவேளை இலங்கையில் சிங்களவர், தமிழர் என்ற இரு பெரும் இனங்கள் மட்டுமே காணப்படுவதான தோற்றம் உருவாக்கப்பட்ட போது, இடதுசாரி இயக்கங்கள் அவ்வாறு பன்மைத்துவத்தை நிராகரிக்கின்ற இனத்துவ அடையாளத்துக்கு எதிராகக் குரல் கொடுத்தார்கள். பன்முக இனத்துவ அடையாளத்தை வலியுறுத்தியிருந்தார்கள். இதில் முஸ்லீம்கள் மற்றும் மலையக மக்களை தனியான இன மாக அடையாளம் காட்டினர். இந்தப் பின்னணியில் பணியாற்றிய கிராமிய உழைப்பாளர் சங்கத்தினர் தமது இயக்கத்தின் கிளைகளை கிராமங்களில் நிறுவும் நோக்கத்திற்காக நாடகக் கலையைப் பயன்படுத்துகிறார்கள். இது 1979ஆம் ஆண்டுகளில் முகிழ்ப்புப் பெற்று 1987ஆம் ஆண்டுவரை நீள்கிறது. இதற்காக 'சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள்' நாடகம் தயாரிக்கப்பட்டு கிராமங்கள் தோறும் மேடையேற்றப்படுகிறது.

(தொடரும்)

## எழுதப்படாத நாடக வரலாறு - 06



## கவிதைத் தொகுதி வெளியீடு









கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை காலையடி மறுமலர்ச்சி மன்றத்தில் இடம்பெற்ற கலாபூஷணம் எஸ். சிவானந்தராஜா எழுதிய "புதியதும் பழையதும்" கவிதைத் தொகுதி வெளியீட்டு நிகழ்வின் பதிவுகள்.









# கல்வியியற் கல்லூரியில் இலக்கியப் பேருரை

அரச இலக்கிய விழாவை முன்னிட்டு நடத்தப்படும் இலக்கியப் பேருரை நிகழ்வு கடந்த திங்கட்கிழமை காலை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெற்றது.

கல்வியியற் கல்லூரி சமூகமும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை சமூகமும் இணைந்து பங்குகொண்ட இந்த நிகழ்வில் கம்பவாரிதி இ.ஜெயராஜ் 'அளவை அறிவு' என்ற பொருளிலும் பேராசிரியர் சிவலிங்கராஜா 'யாழ்ப்பாணத்துப் பண்டிதர் பாரம்பரியம்' என்ற பொருளிலும் சிறப்பு பேருரைகளை ஆற்றினர்.

நிகழ்வு மத்திய கலாசார அலுவல்கள் அமைச்சின் அரச இலக்கிய ஆலோசனைக் குழுவால் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.





# நல்லை கலாமந்திர் நடத்திய சதங்கை நாதம் நடன ஆற்றுகை






யாழ்ப்பாணம் நல்லை கலாமந்திர் நடனப்பள்ளி நடத்திய சதங்கை நாதம் என்ற நடன ஆற்றுகை நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் சிறப்புற இடம்பெற்றது.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி முதல்வர் செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவக இசைத் துறை தலைவர் கலாநிதி தட்சணாமூர்த்தி பிரதீபனும் சிறப்பு விருந்தினர்களாக ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர் நாட்டியக்கலைமணி யசோதரா விவேகானந்தன் மற்றும் வேம்படி மகளிர் கல்லூரி முன்னாள் நடன பாட ஆசிரியர் வசந்தி குஞ்சிதபாதம் ஆகியோரும் மதிப்புறு விருந்தினராக யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அதிபர் லுடேவிக்கா மகேஸ்வரனும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் அணிசேர் இசைக்கலைஞர்களாக நட்டுவாங்கம் அனுசாந்தி சுகிர்தராஜ் , பாட்டு தவநாதன் றொபேட் மற்றும் வதனா திருநாவுக்கரசு மிருதங்கம் சின்னையா துரைராசா வயலின் அம்பலவாணர் ஜெயராமன் தபேலா வெ.இரட்ணபிரபாகர சர்மா ஆகியோர் பங்கு கொண்டனர்.

நடன ஆற்றுகைகளில் 135 மாணவர்கள் பங்கு கொண்டனர். நடன ஆற்றுகைக்காகப் பயன்படுத்தப்பட்ட பாடல்கள் நல்லை முருகப் பெருமான், தலங்காவல் பிள்ளையார் உள்ளிட்ட கடவுளர்களைப் போற்றுவதாக ஈழத்துத் தமிழிசையை முதன்மைப்படுத்துவதாக அமைக்கப்பட்டிருந்தன.

மாணவர்களைத் திறம்படப் பயிற்றுவித்து நெறிப்படுத்திய நல்லை கலாமந்திர் இயக்குநரும் யாழ். கனகரத்தினம் மகா வித்தியாலய நடனபாட ஆசிரியருமாகிய அனுஷாந்தி சுகிர்தராஜ் நிகழ்வின் நிறைவில் மதிப்பளிக்கப்பட்டார்.

## வென்னப்புவ...

துள்ளார்.

அவர் தனது டுவீற்றர் பக்கத்தில் பதிவேற்றியுள்ள பதிவொன்றிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கைக்கு அனுமதி வழங்கப்பட்டமையே அதனைவிட அதிர்ச்சியூட்டும் விடயம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)

## யாழ்ப்பாணத்தில்...

முதல் நாள் மாதர் முன்னணி, வாலிப முன்னணி மாநாடுகளும், இரண்டாவது நாள் பேராளர் மாநாடும் நடைபெறவுள்ளன.

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மாதர் முன்னணித் தலைவர் திருமதி மதினி நெல்சன் தலைமையில் மாதர் முன்னணி மாநாடு நடைபெறவுள்ளது.

அன்று அதே மன்றத்தில் மாலை 5 மணியளவில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணித் தலைவர் கி.சேயோன் தலைமையில் வாலிப முன்னணி மாநாடு நடைபெறவுள்ளது.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா தலைமையில் பேராளர் மாநாடு ஆரம்பமாகும். இந்த நிகழ்வு ஆரம்பமாவதற்கு முன்னதாக யாழ்.நகரில் அமைந்துள்ள செல்வா சதுக்கத்தில் தந்தை செல்வா சிலைக்கு மாலை அணிவித்தல் நிகழ்வு இடம்பெறும்.

இந்த இரு நாள் நிகழ்வுகளிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுத் தலைவருமான இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு, கிழக்கு மாகாண சபைகளின் முன்னாள் உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-22)

## பாரதிபுரத்தில்...

வர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பாதுகாப்பற்ற தொடருந்துக் கடவையை இராணுவத்தினரின் கன்ரர் ரக வாகனம் கடக்க முற்பட்டபோது விபத்து ஏற்பட்டுள்ளது. கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த கடுகதித் தொடருந்துடன் மோதி கன்ரர் வாகனம் விபத்துக்குள்ளானது. உயிரிழந்தவர்களின் உடல்கள் கிளிநொச்சி மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இந்த விபத்துத் தொடர்பாகக் கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தப் பாதுகாப்பற்ற தொடருந்துக் கடவையில் நடந்த 3 ஆவது விபத்து இதுவாகும். முன்னரும் இந்தக் கடவையில் நடந்த விபத்தில் 3 பேர் உயிரிழந்துள்ளனர்.

(எ-21,26,22,6)

## மகிந்த...

இவ்வாறு அதிரடிக் கருத்தைத் தெரிவித்துள்ளார் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் சகாவும் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான குமார வெல்கம. களுத்துறையில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இந்த நாட்டின் பாதுகாப்புத் தொடர்பில் சரத் பொன்சேகாவுக்கே போதிய அனுபவம் உள்ளது. போர் முடிவடையும் வரை அவர் சேவையில் இருந்தவர். ஆனால், உதய கம்மன்பில கூறும் நபரான கோத்தபாய ராஜபக்ச போர்க் காலத்தில் நாட்டை விட்டு அமெரிக்காவுக்கு ஓடியவராவர். இப்படிப்பட்டவர் அதிகாரத்துக்கு வந்தால் நாட்டின் பாதுகாப்பு கேள்விக்குறியாகிவிடும்.

அப்படியானால் 2010ஆம் நடைபெற்ற அரச தலைவர் தேர்தலில் சரத் பொன்சேகா ஏன் தோல்வியடைந்தார் என நீங்கள் கேள்வி எழுப்பலாம். இலவசக் கல்வியை அறிமுகப்படுத்திய சி.டபிள்யூ.சி.கன்னங்கரவையே தேர்தலில் தோற்கடித்த நாடு இது. இதை நாம் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும் என்றார். (எ-22)

## ஹிஸ்புல்லா...

வேண்டும் என்று வடக்கு மாகாண முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசாவிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவு கோரிக்கை விடுத்துள்ளது.

முன்னாள் அமைச்சர் ரிசாத் பதியுதீன் மற்றும் முன்னாள் ஆளுநர்களான ஹிஸ்புல்லா, அசாத் சாலி ஆகியோர் தொடர்பில் முறைப்பாடுகளைப் பதிவு செய்ய அமைக்கப்பட்ட பொலிஸ் குழுவிடம் கடந்த 11ஆம் திகதி வடக்கு மாகாண முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்திருந்தார்.

கிழக்கு மாகாணத்தில் ஓட்டமாவடிப் பகுதியில் உள்ள ஓர் சைவ ஆலயத்தை முஸ்லிம் மக்களின் பயன்பாட்டுக்கு எடுத்தமை தொடர்பான விவகாரம் நீதிமன்றுக்கு வழக்காக சென்றது. அதையடுத்து அங்கிருந்த நீதிபதியை மாற்றி எமக்குச் சார்பான ஓர் நீதிபதி மூலம் எழுதடா தீர்ப்பு என எழுதவைத்தேன் என்று கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லா ஆற்றிய உரை ஒளிப்பதிவை அடிப்படையாகக் கொண்டு முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் முறைப்பாடு பதிவு செய்திருந்தார்.

இந்த முறைப்பாடு தொடர்பான விசாரணைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நேற்று முன்தினம் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் பொலிஸ் தலைமையகத்துக்கு அழைக்கப்பட்டிருந்தார். அவரிடம் கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் உரையாற்றிய இடம், மாற்றப்பட்ட நீதிபதிகளின் பெயர் விவரம் போன்ற விவரங்கள் இருப்பின் அவற்றைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று புலனாய்வுப் பிரிவினர் கோரியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-105)

## மைத்திரியும்...

சர்கள் ஆகியோரைச் சாட்சியம் வழங்க அழைக்க நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் அரச தலைவரையும் அழைப்பது குறித்து ஆராயப்படுகின்றது - என்றார்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன்னிலையில் ஏற்கனவே சாட்சியம் வழங்கியவர்களில் பலர் அரச தலைவர் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்துள்ளனர். இந்த நிலையில் அரச தலைவரைத் தெரிவுக்குழுவுக்கு அழைப்பது தொடர்பாகப் பல கருத்துக்கள் வெளியாகி வருகின்றன. (எ-22)

## கை, மொட்டு...

தது. ஆனால் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலர் தயாசிறி ஜயசேகர மற்றும் தேசிய அமைப்பாளர் துமிந்த திஸாநாயக்க ஆகியோரால் விடுக்கப்பட்ட அறிவிப்புகளுக்கு எதிர்ப்பை வெளியிடும் வகையில் பேச்சு ஒத்திவைக்கப்பட்டது.

பிற்போடப்பட்ட சந்திப்பே இன்று நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இரு கட்சிகளுக்கும் இடையிலான 5ஆம் சுற்றுப் பேச்சு இம்மாதம் 7ஆம் திகதி நடைபெற்றது. (எ-22)

## தெரிவுக்குழு....

உறுப்பினருமான ரிசாத் பதியுதீன் மற்றும் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஷ் சேனாநாயக்க ஆகியோர் தெரிவுக்குழு முன்னிலையில் சாட்சியம் வழங்க இன்று அழைக்கப்பட்டுள்ளனர். (எ-22)

## ஆடை...

துறை அமைச்சர் ரஞ்சித் மத்துமபண்டார இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்தை முன்வைத்தார்.

அரச சேவையில் உள்ள பெண்கள் சேலை மற்றும் ஒசரி போன்றவற்றுக்கு மேலதிகமாக எந்தவகையான ஆடைகளையும் அணிய முடியும். ஆனால் அந்த ஆடை முகத்தை முழுமையாக மறைக்காதவையாக இருக்க வேண்டும் என்று அமைச்சரவை தீர்மானித்துள்ளது. (எ)

## தமிழர்களின்...

றேன். அதேவேளை இனியும் தமிழர்களாகிய எங்களது பொறுமையைச் சோதிக்க வேண்டாம் எனவும் கூறிவைக்க விரும்புகின்றேன்.

இவ்வாறு நேற்று அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவித்தார் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக முன்னேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சருமான மனோ கணேசன்.

வாராந்த அமைச்சரவைக் கூட்டம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் அரச தலைவர் செயலகத்தில் நேற்று முற்பகல் நடைபெற்றது. அதில் கல்முனை வடக்குப் பிரதேச செயலக விவகாரம் தொடர்பாக அமைச்சரவையின் கவனத்துக்குக் கொண்டுவந்து உரையாற்றும்போதே அமைச்சர் மனோ இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்று இந்நாட்டில் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் அமைச்சரவை அமைச்சர்களாக நானும், அமைச்சர் திகாம்பரமும்தான் இருக்கின்றோம்.

இந்த நாட்டில் வாழும் ஒட்டுமொத்த தமிழர் தொடர்பில் எனக்குக் கடப்பாடு இருக்கின்றது. இந்த நாட்டில் வடக்கு, கிழக்கு, மலையகம், மேற்கு, தெற்கு திசைகளில் வாழும் அனைத்துத் தமிழ் மக்களும் தமது பிரச்சினைகள் தொடர்பில் நான் குரல் கொடுக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றார்கள்.

நான் இவை பற்றி இந்த நாட்டின் அதியுயர் சபையான இந்த அமைச்சவையில் பேசுகிறேன். இந்த அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துக் கொள்ள நான் வரமுன் இன்று காலை நானும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரனும் கலந்துரையாடினோம்.

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் ஒரு முழுநேரக் கணக்காளர் ஒருவரை நியமிப்பதாக அரசின் துறைசார் அமைச்சர் வஜிர அபேவர்தன எழுத்துமூலமாகக் கூட்டமைப்புக்கு உறுதி வழங்கியுள்ளார் என அவர் எனக்குக் கூறினார். அந்தக் கடிதத்தை நானும் நேரடியாக வாசித்தேன்.

இந்த நியமனம் நேற்று திங்கட்கிழமை வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அது இன்னமும் வழங்கப்படவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் குற்றம் சாட்டுகின்றார்.

இதற்கு, துறைசார் அமைச்சர் வஜிர அபேவர்தனவும், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் என்ன பதில் கூறுகின்றீர்கள் என நான் இங்கே தெரிந்துகொள்ள விரும்புகின்றேன். இன்று எங்கள் பிரச்சினைகளை நீங்கள் பின்வரிசையில் போட்டுள்ளீர்கள். இனியும் தமிழர்களாகிய எங்களது பொறுமையைச் சோதிக்க வேண்டாம்.

இன, மத அடிப்படைகளில் கல்வி வலய, பிரதேச செயலக, உள்ளூராட்சி சபை எல்லைகளை நிர்ணயிப்பது தொடர்பில் மாறுபட்ட கருத்துக்கள் எனக்கும் இருக்கின்றன. இருந்தாலும் இன்று நாடு முழுக்க இப்படியான இன, மத அடிப்படையில் பிரதேச செயலகங்கள் உள்ளன. வவுனியா தெற்கில் நிலத்தொடர்பற்ற சிங்கள பிரதேச செயலகம் உள்ளது. முஸ்லிம் மக்களை மையமாக வைத்தும் பிரதேச செயலகங்கள் உள்ளன.

இந்தநிலையில் தமிழ் மக்கள் தமது பிரதேச செயலகங்களை தரமுயர்த்த முயலும்போது மட்டும் ஏன் தடை போடுகின்றீர்கள்? ஏன் இதை மாத்திரம் அரசு இழுத்தடிக்கின்றது? ஏற்கனவே இயங்கி வரும் ஒரு உப பிரதேச செயலகத்தையே, முழுப் பிரதேச செயலகமாகத் தரமுயர்த்தும்படி தமிழர்களின் இக்கோரிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

உண்மையில் முஸ்லிம் மக்களுக்கு இந்த கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலக எல்லைகள் தொடர்பில் பிரச்சினை இருக்கின்றது. அது எனக்குத் தெரியும். ஆகவே, அதையும் தொடர்ந்து இழுத்தடிக்காமல் பேசித் தீர்க்க வேண்டும்.

அதற்கு முன் அரசு உறுதியளித்ததுபோல் முதலில் முழுநேரக் கணக்காளர் ஒருவரை இந்தக் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் நியமிக்க வேண்டும்.

வடக்கு, கிழக்கின் ஏனைய பிரதேசங்களிலும் இந்தப் பிரச்சினை காரணமாக ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுகின்றன. வடக்கு, கிழக்கில் தமிழ், முஸ்லிம் இனத்தவர் மத்தியில் இந்தப் பிரச்சினை மூலம் இன உறவு சீர்கெடுகின்றது. அதை இனியும் அனுமதிக்க முடியாது. வடக்கு, கிழக்கு, மலையகம், மேற்கு, தெற்கு திசைகளில் வாழும் தமிழர்கள் மிக அதிகமான சிறுபான்மை இன வாக்குகளை வழங்கி இந்த நல்லாட்சியையும், அரச தலைவரையும் கொண்டு வந்தோம்.

அதேபோல் அரசுக்குள் இருந்து தமிழ் முற்போக்குக் கூட்டணி உங்களைப் பாதுகாக்கிறது. வெளியே இருந்தபடி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உங்களைப் பாதுகாக்கின்றது. இந்த உண்மைகளை அரச தலைவரும், தலைமை அமைச்சரும் மறந்துவிடக் கூடாது. உண்மையில் தமிழ் மக்கள் பிரச்சினைகளை இந்த அரசு பின்வரிசையில் போட்டு விட்டது. எங்கே நீங்கள் தருவதாகச் சொன்ன புதிய அரசமைப்பு? எங்கே அரசியல் தீர்வு?

எங்கே அரசியல் கைதிகள் விடுதலை? சில தினங்களுக்கு முன் ஒரு தமிழ் கைதி 15 வருடங்கள் சிறையில் இருந்து இறந்துபோயுள்ளார் என்பது உங்களுக்குத் தெரியுமா? இன்று விடுதலைப்புலிகளின் ஆயுதப் போராட்ட யுகம் முடிந்து, ஸஹ்ரானின் ஆயுதப் போராட்ட யுகம் ஆரம்பித்துள்ளது.

எனினும், இன்னமும் விடுதலைப்புலிகளின் காலத்தில் கைதுசெய்யப்பட்ட தமிழர்கள் பத்து, பதினைந்து, இருபது வருடங்கள் என நீண்ட காலமாக சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும். எதிர்வரும் வாரத்தில் அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில் ஒரு அமைச்சரவைப் பத்திரம் ஒன்றை நான் கொண்டுவரவுள்ளேன்.

இங்கே உள்ள அமைச்சர்கள் அது.தொடர்பில் உங்கள் கருத்துகளைத் தெரிவியுங்கள். தமிழ் மக்கள் உங்களை அடையாளம் கண்டுகொள்வார்கள் - என்றார்.

அமைச்சர் மனோ கணேசனுக்குப் பதிலளித்துப் பேசிய அமைச்சர் வஜிர அபேவர்தன தெரிவித்ததாவது

அடுத்த ஒரு வாரத்துக்குள் தலைமை அமைச்சர் தலைமையில் நடைபெறும் கலந்துரையாடலில், நானும் அமைச்சர்களான மனோ கணேசன், தயா கமகே மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு கல்முனை வடக்கு பிரதேச செயலகக் கணக்காளர் நியமனம் தொடர்பிலும், உப செயலகம் தரமுயர்த்தப்படுவது தொடர்பிலும் தீர்மானம் எடுப்போம். என்றார்.

இந்த விடயம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அமைச்சர் சம்பிக்க ரணவக்க, அமைச்சர் மனோ கணேசனுடன் நான் முழுமையாக உடன்படுகின்றேன். இந்த விடயத்தை இனியும் இழுத்தடிக்கக் கூடாது என்று தெரிவித்தார்.

அங்கு கருத்துத் தெரிவித்த அமைச்சர் ராஜித சேனாரத்ன, "அமைச்சர் மனோ கணேசன் கூறிய தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம் கூடிய விரைவில் முடிவுக்கு வர வேண்டும், - என்றார். (எ-22)

## தங்கொட்டுவையில்...

கத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான கடிதமொன்று வென்னப்புவ பிரதேச சபையின் தலைவர் சுசந்த பெரேராவால் வெளியிடப்பட்டுள்ளது. இந்த பிரதேச சபை சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் (பெரமுன) ஆளுகைக்கு உட்பட்ட பிரதேச சபையாகும்.

அந்தக் கடிதத்தில் கடந்த காலங்களில் இடம்பெற்ற தீவிரவாதத் தாக்குதல்களை அடுத்து வென்னப்புவ பிரதேசத்தில் இருக்கும் முஸ்லிம் மக்கள் தங்கொட்டுவை வாரச் சந்தையில் வியாபாரம் செய்ய ஏனைய மக்களும், வியாபார சமூகத்தினரும் எதிர்ப்பை வெளியிட்டு வந்தனர். வென்னப்புவ பிரதேசத்தில் அமைதியான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்காக தங்கொட்டுவை வாரச் சந்தையில் முஸ்லிம் வியாபாரிகள் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவதை தற்காலிகமாகத் தடை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என பிரதேச சபை தெரிவித்துள்ளது.

அதேவேளை, வென்னப்புவ பிரதேச சபை தடைவிதித்தமை தொடர்பாக விளக்கமளிக்குமாறு மராவில நீதிவான் உத்தரவிட்டுள்ளார். எதிர்வரும் 28 ஆம் திகதி இது தொடர்பாக விளக்கமளிப்பதற்கு நீதிமன்றில் முன்னிலையாக வேண்டும் என்று பிரதேச சபைத் தலைவர் சுசந்த பெரேராவுக்கு நீதிவான் அழைப்பு விடுத்துள்ளார்.

(எ-22)



கூடைப்பந்தாட்டத் தொடரில்;

# யாழ். மாவட்ட அணி கிண்ணம் வென்றது



யாழ்ப்பாணம்.ஜூன் 26
வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் மாவட்டங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட ஆண்களுக்கான கூடைப்பந்தாட்டத் தொடரில் யாழ்ப்பாண மாவட்ட அணி கிண்ணம் வென்றது.
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத்திடலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் மாவட்ட அணியை எதிர்த்து முல்லைத்தீவு மாவட்ட அணி மோதியது. இதில் யாழ்ப்பாண மாவட்ட அணி 75 : 12 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று கிண்ணத்தை சுவீகரித்தது.
(23)

## யாழ். மாவட்ட பெண்கள் அணி வென்றது கிண்ணம்



யாழ்ப்பாணம்.ஜூன் 26
வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் மாவட்டங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட பெண்களுக்கான கூடைப் பந்தாட்டத் தொடரில் யாழ்ப்பாண மாவட்ட அணி கிண்ணம் வென்றது. யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி கூடைப்பந்தாட்டத்திடலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் மாவட்ட அணியை எதிர்த்து மன்னார் மாவட்ட அணி மோதியது. இதில் யாழ்ப்பாண மாவட்ட அணி 50:16 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி·பெற்று கிண்ணம் வென்றது. (23)



## சென். அன்ரனிஸை வீழ்த்தி விளைபூமி அணி வெற்றி

யாழ்ப்பாணம், ஜூன் 26
மாமுனை கலைமகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் மறைந்த வீர, வீராங்கனைகள் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான வடக்கு மாகாண ரீதியாக நடத்தும் அணிக்கு 9பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரில் முரசு மோட்டை விளைபூமி விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.
கழக மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் முரசு மோட்டை விளைபூமி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து தாளையடி சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் முரசுமோட்டை விளைபூமி விளையாட்டுக்கழக அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.





15ஆவது உலகக் கிண்ணத்துக்கான வலைப்பந்தாட்டத் தொடர் எதிர்வரும் ஜூலை மாதம் 12ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை இங்கிலாந்தின் லிவர்பூலில் நடைபெறவுள்ளது. மேற்படி போட்டியில் பங்கேற்கவுள்ள இலங்கை வலைப் பந்தாட்ட தேசிய அணியில் தமிழ் வீராங்கனைகளான தர்ஜினி சிவலிங்கம், எழிலேந்தினி சேதுகாவலர் ஆகிய இருவரும் இடம்பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (23)

## கொற்றாவத்தை சிவானந்தா இறுதியாட்டத்துக்குத் தகுதி

யாழ்ப்பாணம். ஜூன் 26
வடமராட்சி கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 9 பேர் பங்கு பற்றும் வே. நகுலன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழக அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் சிவானந்தா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கொடுக்குளாய் சக்திவேல் விளையாட்டுக் கழக அணி மோதியது.
இதில் 1:0 என்ற கோல் கணக்கில் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. கொற்றாவத்தை சிவானந்தா அணி சார்பாக சுமன் கோலை பதிவு செய்தார். (23)



## சென்.அன்ரனிஸ், யூனியன் அணிகள் வெற்றி

யாழ். கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கால்பந்தாட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தும் எவ்.ஏ கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.
அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் மாலை 3.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து எல்லாளன் விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. மற்றும் ஓர் ஆட்டத்தில் எவரஸ்ட் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் 2:0 என்ற கணக்கில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றுது.(23)

# ஆர்ஜென்ரீனா அணி காலிறுதிக்குத் தகுதி

அமெரிக்க கால்பந்து போட்டித் தொடர் பிரேசிலில் உள்ள பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் இடம் பெற்ற ஆட்டத்தில் ஆர்ஜென்ரீனா -கட்டார் அணிகள் மோதின. இதில் ஆர்ஜென்ரீனா அணி 2:0 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றது.

முதல் பாதி ஆட்டம் ஆரம்பித்து 4ஆவது நிமிடத்தில் ஆர்ஜென்ரினா வீரர் மார்டினஸ் முதலாவது கோலைப் பதிவு செய்தார். முதல்பாதி ஆட்டத்தில் ஆர்ஜென்ரீனா அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலையிலிருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பித்ததும் இரு அணி வீரர்களும் முட்டி மோதிக் கொண்டு விளையாட ஆரம்பித்தனர். பந்தை ஆர்ஜென்ரீனா அணி வீரர்களே தமது கட்டுப்பாட்டில் அதிக நேரம் வைத்திருந்தனர். எனினும் கட்டார் அணி வீரர்களும் அவர்களுக்கு கிட்டத்தட்ட சமநிலையில் நேரங்களில் தமது கட்டுப் பாட்டிலும் பந்தை வைத்திருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. கட்டார் அணி வீரர்கள் 4 தடவைகள் ஆர்ஜென்ரீனா அணியின் கோல் கம்பங்களை நோக்கி பந்தை அடித்திருந்தனர் எனினும் அவர்களால் எந்தவிதமான கோல்களையும் இறுதி வரையில் பெற முடியவில்லை. ஆட்டத்தில் 82ஆவது நிமிடத்தில் ஆர்ஜென்ரீனா அணி வீரர் செர்ஜியோ அகிரோ கோல் ஒன்றைப் போட ஆட்டத்தின் முடிவில் ஆர்ஜென்ரீனா அணி 2:0 என்ற கணக்கில் கட்டாரை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறியது. ஆர்ஜென்டினா அணி காலிறுதியில் வெனிசூவெலாவுடன் மோதுகின்றது.



# எங்கள் தோல்விக்கு ஐ.பி.எல்லே காரணம்

## பிளாசிஸ் விளாசல்

நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் தென்னாபிரிக்கா அணி தான் எதிர்கொண்ட 7 போட்டிகளில் ஒரு போட்டியில் மட்டுமே வெற்றி பெற்றது. ஒரு போட்டி மழை காரணமாக கைவிடப்பட்டது. இதானால் தமது அணி அரையிறுதிக்கு கூட முன்னேற முடியாமல் முதல் சுற்றிலேயே வெளியேறியதற்கு ஐ.பி.எல். போட்டியே காரணம்என்று அந்த அணியின் தலைவர் டூ பிளாசிஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:


உலகக் கிண்ணத் தொடரில் நாங்கள் சரியாக ஆடவில்லை. எங்கள் தோல்வியை நியாயப்படுத்த முடியாது. இம்ரான்தாகீர் சிறப்பாக பந்து வீசுகிறார். அவர் விதிவிலக்கானவர். ஏனைய பந்து வீச்சாளர்கள் அவருக்கு துணை நிற்கவில்லை.


எங்கள் அணியின் வேகப் பந்து வீரர் ரபாடாவை ஐ.பி.எல். போட்டியில் விளையாடாமல் இருக்க முயற்சி செய்தோம். அவர் ஐ.பி.எல். போட்டியில் ஆடாமல் இருந்திருந்தால் புத்துணர்வுடன் இருந்து இருப்பார். ஓய்வு இல்லாமல் இருந்தது பாதிப்பை ஏற்படுத்தியது. ஐ.பி.எல். போட்டியை விட உலகக் கிண்ணம்தான் முக்கியமானது-என்றார்.

# இங்கிலாந்தை சுருட்டி முதலிடத்தில் ஆஸி.

இங்கிலாந்து அணி உலகக் கிண்ணத்தை கைப்பற்றும் கனவுடன் இருக்கின்றது. ஏனெனில் இங்கிலாந்து அணி இதுவரை கிண்ணத்தை கைப்பற்றியது இல்லை. அந்த கனவில் மண் அள்ளிப் போட்டது போல இரண்டு போட்டிகளில் தொடர் தோல்வியை சந்தித்துள்ளது. மொத்தமாக 7 போட்டிகளில் விளையாடி 3 போட்டிகளில் தோல்வியை சந்தித்துள்ளது. எஞ்சியுள்ள போட்டிகள் அனைத்திலும் வெல்ல வேண்டிய கட்டாயத்துக்கு அந்த அணி தள்ளப்பட்டுள்ளது.

நடப்பு உலகக் கிண்ணப் போட்டியில் நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில் இங்கிலாந்து ஆஸ்திரேலியா அணிகள் மோதின. இதில் இங்கிலாந்து அணி 64 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் ஆஸி அணி புள்ளிகள் அடிப்படையில் முதலிடத்துக்கு முன்னேறியது.





நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் ஆஸி அணியைத் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. ஆஸியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் நிதானமாக ஆடி அணிக்கு நல்ல தொரு ஆரம்ப இணைப்பாட்டத்தை வழங்கினர். ஆரம்ப இணையை பிரிப்பதற்கு இங்கிலாந்து பந்து வீச்சாளர்கள் சிரமப்பட்டனர். இதில் அணித் தலைவர் பின்ஞ் சதம் பெற்று ஆட்டமிழந்தார். இது இங்கிலாந்துக்கு எதிராக இவர் அடித்த 2 ஆவது சதமாகும். 2015ஆம் ஆண்டு இடம் பெற்ற உலகக் கிண்ணத்திலும் இவர் இங்கிலாந்துக்கு எதிராக் சதம் விளாசியிருந்தமை குறிப்பிடத்தக்கது. வோர்னர் அரைச்சதம் கடந்து ஆட்டமிழந்தார். அதிரடி ஆட்டக்காரர் மக்ஸ்வெல் பெரிதாக சோபிக்கவில்லை . அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப்பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 285 ஓட்டங்களைப் பெற்றது. அணி 350 ஓட்டங்களைத் தாண்டும் என எதிர்பார்த்த போதும் இறுதிக் கட்டத்தில் இங்கிலாந்து அணியின் பந்து வீச்சாளர்கள் கட்டுப்படுத்தினார்கள்.

பதிலுக்கு களமிறங்கிய இங்கிலாந்து அணிக்கு ஆஸியின் பந்து வீச்சாளர்கள் ஆரம்பம் முதலே அதிர்ச்சி கொடுத்தனர். அணி 53 ஓட்டங்களைப் பெற்றபோது 4 இலக்குக்ளை இழந்து பரிதவித்தது. மறுமுனையில் ஸ்ரோக்ஸ் தனியொருவராக போராட ஆரம்பித்தார். ஆனால் அவரையும் 89 ஓட்டங்கள் பெற்ற போது ஸ்ரோக்ஸ் போல்ட் ஆக்கினார். பின்னர் வந்த வீரர்கள் ஆஸியின் பந்து வீச்சை தாக்குப் பிடிக்க முடியாமல் ஆட்டமிழந்தனர்.

அணி 44.4 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 64 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. ஆஸியின் பந்து வீச்சில் பிகன்றூவ் 5 இலக்குகளையும், ஸ்ரோக்ஸ் 4 இலக்குகளையும் கைப்பற்றி அசத்தினர். ஆட்ட நாயகனாக ஆஸி அணித் தலைவர் பின்ஞ் தெரிவு செய்யப்பட்டார்.

## இன்றைய போட்டி



நியூசிலாந்து



மாலை
3 மணி



பாகிஸ்தான்

# ரசல் விலகல்

நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் இருந்து மேற்கிந்தியத்தீவுகளின் வீரர் ரசல் இடது முழுங்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக உலகக் கிண்ணத் தொடரில் இருந்து விலகுகிறார் என மேற்கிந்தியத் தீவுகளின் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அறிவிப்பு. ரசலுக்கு பதிலாக சுனில் அம்பரிஸ் அணியில் இணைப்பு.

மேற்கிந்தியத்தீவுகளின் மத்தியதர வரிசை அதிரடித்துடுப்பாட்ட வீரர், சிறந்த பந்து வீச்சாளர் என சகலதுறையிலும் கலக்கி வருகின்றார். இவரது இழப்பு மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு பெரும் இழப்பு என்பதில் சந்தேகமில்லை. மேற்கிந்தியத்தீவுகள் அணி அடுத்த போட்டியில் இந்திய அணியை எதிர்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆஸி. வீரர்களான வோர்னர், சிமித்தை கேலி செய்வது ரசிகர்களின் சுதந்திரம்

## மோர்கன் சர்ச்சைப் பேச்சு

ஸ்டீவ் ஸ்மித் டேவிட் வோர்னரை போட்டியின் போது இங்கிலாந்து ரசிகர்கள் கேலி செய்தால் விராட்கோக்லி போன்று கேலி செய்வதை நிறுத்துமாறு நான் ரசிகர்களை கேட்டுக்கொள்ள மாட்டேன் என இங்கிலாந்து அணியின் தலைவர் இயன் மோர்கன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:

ரசிகர்கள் நிறைய பணம்செலுத்தி போட்டிகளை பார்க்கின்றனர் அவர்கள் தாங்கள் நினைத்ததை செய்யலாம். ரசிகர்கள் எப்படி நடந்துகொள்ளப்போகின்றார்கள் என்பது தெரியாது. இரண்டு வீரர்கள் தண்டனை பெற்று அதனை அனுபவித்து மீண்டும் ஆடுகளத்துக்கு திரும்பியுள்ளார்கள் என்பதற்காக அவர்கள் கிரிக்கெட் உலகுக்கு நேரடியாக வரவேற்கப்படுவார்கள் என கருதமுடியாது - என்றார்.

இதேவேளை ரசிகர்கள் கேலி செய்வது எந்த மாற்றத்தையும் ஏற்படுத்திவிடாது ஏன தெரிவித்துள்ள ஆஸ்திரேலிய அணியின் தலைவர் பின்ஞ் கேலி செய்யப்படும் வீரர்களுக்கு இது இன்னமும் சிறப்பாக விளையாடவேண்டும் என்ற ஊக்கத்தை வழங்கும் - என்றார்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் ▶ 994
சீட்டிழுப்பு திகதி ▶ 2019.06.24 திங்கட்கிழமை
F 37 47 60 70
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ. 65,047,912/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 650
வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2019.06.25
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 63,303,235/-
வெற்றி இலக்கங்கள்
02 20 25 51 P
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

நியத்த ஜய
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 782
சீட்டிழுப்பு திகதி 25.06.2019
வெற்றி இலக்கங்கள்
35 39 45 46 B
அடுத்த வெள்ளிக் கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 27, 781,776/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

ராசி அதிர்ஷ்டம்
திகதி 25.06.2019
வெற்றி வாரம் 2546
வர்ணம் சிகப்பு
துலாம்
வெற்றி இலக்கங்கள்
13 20 33 48
புதன் கிழமை வெற்றிப் பொதி
ரூ. 2,948,024 /=
26.06.2019ம் திகதி புதன் கிழமை பச்சை நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
Web: www.dlb.lk



கோபா அமெரிக்கா கால்பந்து தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற போட்டியில் பிரேசில் – வெனிசூவெலா அணிகளுகள் மோதின. இதில் பிரேசில் அணி வெற்றி பெற்றதும் அந்த அணியின் ரசிகர்கள் தமது மகிழ்ச்சியை வெளிப் படுத்திய போது.

உலக ரென்னிஸ் தரவரிசை;

# நவோமி ஒசாகாவை பின் தள்ளி ஆஷ்லி பார்தி முதல் இடத்தில்



பர்மிங்காம் கிளாசிக் ரென்னிஸ் போட்டி இங்கிலாந்தில் நடைபெற்று வந்தது. இந்தத் தொடரின் இறுதி ஆட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதில் 2ஆம் நிலை வீராங்கனை யான ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஆஷ்லி பார்தி வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றினார். ஆஷ்லி பார்தி ஜேர்மனியைச் சேர்ந்த ஜூலியா கோர்ஜஸை எதிர்கொண்டார். இதில் ஆஷ்லி பார்தி 6:3, 7:5 என்ற நேர் செற் கணக்கில் ஜூலியா கோர்ஜஸை வீழ்த்தி மகுடம் சூடினார்.

பிரெஞ்ச் பகிரங்க ரென்னிஸ் சம்பியனான ஆஷ்லி பார்தி இந்த வெற்றியின் மூலம் உலக பெண்கள் ரென்னிஸ் தரவரிசையில் முதலிடத்தை பிடித்தார். இதுவரை முதலிடத்தில் இருந்த ஜப்பானின் நவோமி ஒசாகா 2ஆவது இடத்துக்கு பின் தள்ளப் பட்டார்.

பெண்கள் தரவரிசையில் ஆஸ்திரேலிய வீராங்கனை ஒருவர் முதல் இடத்தை பிடிப்பது கடந்த 43 ஆண்டுகளில் இதுவே முதல் முறையாகும். இறுதியாக 1976 ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவின் இவோன் கூலாகோங் முதலிடத்தில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தென்னிந்திய யாத்திரை

தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, கர்நாடகா, பாண்டிச்சேரியூடான யாத்திரை

ஆரம்பம் : 05.08.2019 | யாத்திரிகர் : 10 | நாள்கள் : 16

தரிசிக்கும் இடங்கள் :- உச்சிப்பிள்ளையார், மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர், திருப்பதி, ஸ்ரீரெங்கம், சமயபுரம், பிரம்மாகோயில், இராமேஸ்வரம், பழனி, திருத்தணி, திருப்பரம்குன்றம், திருச்செந்தூர், சிதம்பரம், ஏகாம்பரேஸ்வரர், காள கஸ்திரி, திருவெண்ணாமலை, சுவாமிமலை, பழமுதிர்ச்சோலை, திருவானைக்காவல், மேல்மருவத்தூர், தஞ்சாவூர், நவபாஷானம், சூரியன், சந்திரன், சுக்கிரன், புதன், வியாழபகவான், செவ்வாய், ராகு, கேது, சனி பகவான், திருநள்ளாறு, நளன்குளத்தில் நீராடல், தோணியப்பர், குருவாயூர், மைசூர் சாமுண்டீஸ்வரி, நந்திகோவில், கன்னியாக்குமரி, சுசீந்திரம், மனக்குழவிநாயகர், திருக்கடையூர் பஞ்சவடி பிள்ளையார், பட்டி விநாயகர், வடபழனி முருகன் உட்பட 60 இற்கும் குறையாத ஆலயங்களைத் தரிசிப்பதுடன் மெரீனாபீச், பாண்டிச்சேரி பீச், MGR, ஜெயலலிதா, அண்ணா சமாதி களையும் மைசூர் பாலஸ், பிருந்தாவனம் காடின், அப்துல் கலாமின் மணிமண்டபமும் பார்க்கலாம்.

தங்களிடம் பெற்றுக் கொள்ளும் ரூபாவுக்கு எமது சேவை :- இருவழி விமான ரிக்கட், மூன்றுவேளை சுத்தமான சைவ உணவு, குடிநீர், 2 பேருக்கு கட்டில் மெத்தை, குளியலறை இணைந்த அறைகள், AC வாகன வசதி, கொழும்பில் இருந்து ஏயர்போட் போகவும் வரவும் வாகன வசதி, இவை அனைத்தும் எமது சேவை.

மேலும் விவரங்களைக் கேட்டு அறிந்து பதிவு செய்யவும். சகல ஆலயங்களும் பூசை நேரத்தில் தரிசிக்கலாம். (இத்துடன் யாழ் - கொழும்பு, யாழ் போக வர வாகன் வசதி செய்து தரப்படும்)

வந்தவரைக் கேளுங்கள் சென்றுவரலாம் வாருங்கள்.

(C 2069) (4.17)

தொடர்புகளுக்கு: கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் மகன் ராஜன்
59, 3/6, செட்டியார்தெரு, கொழும்பு -11,
sriranganathan1944@gmail.com
sriranganathan2601@gmail.com
077 768 0102
077 736 2154

## Techno World
தொழில்நுட்பப் பிரிவு
A/L 2021 ஆரம்பம்

- ▶ பொறியியல் தொழில்நுட்பவியல்
- ▶ உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல்
- ▶ தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்
- ▶ ICT, இலகு கணிதம், விவசாய விஞ்ஞானம், புவியியல், சித்திரம்.

குறிப்பு: 2020 மாணவர்களுக்கான தனிப்பாட அனுமதி வழங்கப்படுகின்றன.

29.06.2019
சனிக்கிழமை
காலை 8.30

077 017 5346
077 170 3549
வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

தோற்றம்
12 . 02 . 1948



மறைவு
23 . 06 . 2019

### (கெக்கிராவ) கந்தசாமி சிவபாக்கியம்

வன்னேரிக்குளம் கிளிநொச்சியைப் பிறப்பிடமாகவும், கெக்கிராவையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி சிவபாக்கியம் 23.06.2019 அன்று காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது தற்காலிக முகவரியான இல.245, உதயநகர் கிழக்கு (துர்க்கை அம்மன் கோவில் வீதி), கிளிநொச்சியில் அவரது இல்லத்தில் நாளை (27.06.2019) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கிளிநொச்சி திருநகர் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 245,
உதயநகர் கிழக்கு, கிளிநொச்சி,

தகவல்:
குடும்பத்தினர்.

தொ.பே:077 4073 409

## பொருளியற் கல்லூரி
நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

பொருளியல் கருத்தரங்கு
A/L 2019

R.Tharshan
(BBA Spl in Fm
(Master of Economics)

ஏன் ?
எதற்கு ?
எப்படி ?
என்ற விளக்கத்துடன்.

July - 01 → July - 26 [60 மணித்தியாலயங்கள்]
நேரம் - 3.00 PM

- ✓05 Part I Model Papers
- ✓05 Part II Model Papers
- ✓எதிர்பார்க்கை வினாவிடை கையேடுகள்
- ✓வெளி மாணவர்களும் பங்குபற்றலாம் (மேலதிக நேரம் ஒதுக்கீட்டு செய்து பாடத்திட்டம் விளக்கப்படும்)
- ✓வெளி மாணவர்கள் 28ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை பதிவு செய்துகொள்ளவும்.

தொடர்புகளுக்கு: 077 431 6814, 077 220 9651

கடந்த காலங்களில் மாவட்ட நிலை -01, 02 உள்ளடங்களாக பல மாணவர்களை பல்கலைக்கழகம் அனுப்பிய பெருமையில்.........

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26 .06.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.